# வீரசங்கிலி

## முத்தமிழ் விழா மலர்



JAFFNA NATIONAL COLLEGE OF EDUCATION
THOUGHT WORD DEED

வெளியீடு : தமிழ் மன்றம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

2018

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரசங்கிலி
# முத்தமிழ் விழா மலர்

**மலராசிரியர்கள்**

**முருகேசு கௌரிகாந்தன்**
ஓய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

**பாலசிங்கம் பாலகணேசன்**
இணைப்பாளரும், தமிழ்மன்றக் காப்பாளரும்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

வெளியீடு

**தமிழ் மன்றம்**

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

**கோப்பாய்**

**2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் விபரம்

**மலரின் பெயர் :** **வீரசங்கிலி**
**முத்தமிழ் விழா மலர்**

**ஆண்டு:** 2018, நவம்பர், 16

**ஆலோசனையும் வழிகாட்டலும்:** கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம்
(பீடாதிபதி)

**மலராசிரியர்கள்:** முருகேசு கௌரிகாந்தன்
ஒய்வுநிலை சிரேஷ்ட விரிவுரையாளர்.
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

பாலசிங்கம் பாலகணேசன்,
இணைப்பாளரும், தமிழ்மன்றக் காப்பாளரும்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

**வெளியீடு:** தமிழ்மன்றம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

**அச்சுப்பதிப்பு:** கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

மலருக்கான அட்டைப்படத்தை வரைந்துதவியவர்:-
சின்னத்தம்பி டக்ஷன் - சித்திரத்துறை

**வீரசங்கிலி முத்தமிழ் விழா மலரில் வெளிவந்துள்ள ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே முழுப்பொறுப்புடையவர்களாவர்.**

- மலராசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மானிப்பாய்த்தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

## அமரர் விசுவநாதர் தர்மலிங்கம்,

## அமரர் திருமதி சரஸ்வதி தர்மலிங்கம்

இருவருக்கும் வீரசங்கிலி முத்தமிழ் விழா சிறப்பு மலர் - 2018

# சமர்ப்பணம்



05. 02. 1981 - 02. 09. 1985
18

07.05. 1932 - 27. 03. 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்களான திரு. வி. தர்மலிங்கம் அவர்களும் திருமதி சரஸ்வதி தர்மலிங்கம் அவர்களும்





"இலங்கையர்" எனும் பட்டப்பெயரினான உடைய வரும் பல்லாண்டுகள் உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினராவும் இருந்த திரு. தர்மலிங்கம் அவர்கள் கந்தரோடை விஸ்வநாதர் அவர்கட்கும் இருபாலை வள்ளிப்பிள்ளை அவர்கட்கும் மகானாக 05.02.1918 இல் பிறந்தார். இவரின் தந்தையாரான சின்னத்தம்பி விஸ்வநாதர் அவர்கள் அமெரிக்க ஹாவாட் பல்கலைக்கழக எம்.ஏ.பட்டதாரி. தமிழ், ஆங்கிலம் சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியமுள்ளவர். கொழும்பு ஆனந்தக் கல்லூரியிலும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றியவர். தாயார் வள்ளிப்பிள்ளை, ஆறுமுக நாவலரின் ஆசிரியராகிய இருபாலை சேனாதிராச முதலியார் (1750-1840) வழி வந்த பெருமைக்குரியவர். திரு தர்மலிங்கம் அவர்கள் இருபாலையில் பிறந்து கந்தரோடையில் வளர்ந்தவர். தனது ஆரம்பக்கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் இடை நிலைக்கல்வியை சென் பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்று கேம்பிரிஜ் பரீட்சையில் சித்தியடைந்தார். கந்தரோடையில் பெரும் நிலப்பரப்பில் அமைந்தள்ள இவரது பெரிய மாளிகையின் பெயரே காமதேனு என்பதாகும். இது செல்விருந்தோம்பி வருவிருந்து பார்க்கும் இல்லமாகும். இவர் சுன்னாகம் மத்தியைச் சேர்ந்த வேலும் மயிலும், விசாலாட்சிப்பிள்ளை தம்பதியின் மூத்த புதல்வியான கமலாம்பிகை அவர்களைத் திருமணம் செய்து சித்திரலேகா, சித்தார்த்தன் ஆகிய இரு நன்மக்களைப் பெற்றார். திரு. ராமச்சந்திரன், திருமதி மீனா சித்தார்த்தன் இருவரும்முறையே நன் மருமக்கள் இவர் குடும்பம் சுத்த சைவ உணவையே உண்ணும் சுத்தசைவ சமயத்தவர்கள்.

அமரர் தர்மலிங்கம் அவர்கள் கொழும்பு சட்டக்கல்லூரியில் பயின்ற காலத்தில், தமிழ் மன்றத்தை உருவாக்கியவர். இது இன்றும் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. யாழ் நூலகத்திற்கு முன்பாகவுள்ள டாக்டர் சுப்பிரமணியம் பூங்காவின் சொந்தக்காரரும் இவரின் பெரிய தந்தையாரும் மாகாண வைத்திய அதிகாரியுமாகிய டாக்டர் சின்னத்தம்பி சுப்பிரமணியத்திற்குப் பின்னர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முகாமையாளராகப் பணியாற்றியவர். இவர் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவலரராகவும் இருந்தவர். தலைசிறந்த இடதுசாரிச் சிந்தனையாளர். இவர் தர்ம சிந்தனைக்கு மாறுபடாத வகையில் அரசியல், சமூகப்பணியினை ஆற்றிக்கொண்டிருந்த காலத்திலே 02.10.1985 அன்று நாசகாரிகளினால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். இவை பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரங்களை 20.19.1985 அன்று இவரின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பெற்ற 'தர்மதீபம் எனும் மலரில் காணலாம். அவரது புதல்வரான யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களாலும், புதல்வியாகிய திருமதி. சித்திரலேகா இராமச்சந்திரன் அவர்களாலும் அன்பளிப்பாக வழங்கப்பெற்ற 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் முன்றிலில் திரு. சித்தார்த்தன் அவர்களின் செலவில் நிறுவப்பெற்று முன்னாள் பீடாதிபதி திரு. S.K. யோகநாதன் தலைமையில் கல்லூரியின் முன்றிலில் 27.04.2013 அன்று திறந்து வைக்கப்பெற்ற அமரர் வி. தர்மலிங்கம் அவர்களின் சிலையினைத்தரிசித்து உள்ளே கல்விப்பணிக்காக செல்கின்ற நாம் அமரர் தர்மலிங்கம் குடும்பத்தினருக்கு என்றும் நன்றிக்கடன் உடையவர்களாக இருக்க வேண்டும். திரு. தர்மலிங்கம் அவர்களின் பிள்ளைகள் கல்லூரிக்கென நன்கொடையாக வழங்கிய பூமிதானத்தை நன்றியுடன் நினைவு கூரும் முகமாக கல்லூரியில் ஒரு மண்டபத்திற்குத் 'தருமலிங்கம்' மண்டபம் என நாமம் இடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**அமரர் திருமதி சரஸ்வதி தர்மலிங்கம்**

இவர் சுன்னாகம் மத்தியைச் சேர்ந்த வேலும் மயிலும் விசாலாட்சிப்பிள்ளை தம்பதியினரின் இரண்டாவது புதல்வியாக 1932 ஆம் வருடம் மாசித்திங்கள் பத்தாம் நாள் பிறந்தார். கமலாம்பிகை அன்னலட்சுமி (அவுஸ்திரேலியா) அமரர் குமார சுவாமி கயிலாயநாதன் (இலண்டன்) ஆகியோர் இவரின் உடன் பிறப்புக்கள் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்ப , இடைநிலைக்கல்வியை ஆங்கில மொழி மூலம் பயின்று தேரியவர். இசைத்துறையில் மிகுந்த ஈடுபாடுடையவர் வயலின் பயிற்ச்சி பெற்றவர். தமிர் ஆங்கிலம் இரண்டிலும் பாண்டித்தியமுடையவர் என்றமையால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தம் காம தேனு எனும் தமது பெரிய இல்லத்திற்கு வருகை தரும் பிறமொழி பேசும் அறிஞர் எல்லோரையும் வரவேற்று உபசரித்துத் தமது கணவர், பிள்ளைகளுக்கு மிகவும் உற்ற துணையாக இருந்தார். சுத்த சைவ உணவையே எடுத்தபடியாலும் இவரிடம் அறப்பண்பும் தெய்வப்பக்தியும் உடையவராகத் திகழ்ந்தார்.

காண இனியது நீறு என்று ஞானசம்பந்தர் பாடியதற்கேற்ப எப்போதும் நெற்றியிலே நீறணிந்த நெற்றிக்கோலத்துடனேயே எவருடனும் பேசுவர். ஆலய வழிபாட்டுடனும் கூடிய ஈடுபாடுடையவர். கந்தரோடை அருளானந்தம் பிள்ளையார் வற்றாலை அம்மன் கோவில் முதலானவற்றில் கொடியேற்றத்திருவிழாவை இறையடி சேரும் வரை முன்னின்று நடத்தினார். பாராளுமன்ற உறப்பினர் கௌரவ சித்தார்த்தன் அவரது சகோதரி சித்திரலேகா ஆகியோரால் நன்கொடையாக வாங்கப்பெற்ற நிலத்தில் அரசாங்கத்தில் கட்டப்பெற்ற யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி கட்டத்தை இன்று இவரே திறந்து வைத்தார். பின்னர். இவர் 08.11.2012 இல் யாழ் தேசிய கல்வியற் கல்லூரியில் நடைபெற்ற வித்தகர் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டின் போது பிரதமவிருந்தினராக அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பட்டார். பிற்காலத்தில் நோய்வாய்பட்டு 2018 ஆம் ஆண்டு பங்குனித்திங்கள் 27 ஆம் நாள் இறையடிசேந்தார்.

**முருகேசு கௌரிகாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே .....


1. வாழ்த்துச்செய்தி - **எஸ். அமிர்தலிங்கம்** - ix

2. வாழ்த்துச்செய்தி - S.R. **சத்தியேந்திரம்பிள்ளை** - xi

3. மரபு பேணுவோம் - **முருகேசு கௌரிகாந்தன், பாலசிங்கம் பாலகணேசன்** - xii

4. தமிழ்க்காவலர் கா. பொ. இரத்தினம் - **சுகந்தினி சிறிமுரளிதரன்** - xv

5. 'தமிழ்க் காவலர்' பேராசிரியர் ஆ. சதாசிவம் - 01

6. முத்தமிழ் - 06

7. யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய விமர்சனம் - 08

8. போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின்... - 14

9. "தமிழ்ப் பகுதிகளுள் பழமையின் ... - 19

10. ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் யாழ்ப்பாணத்தில்.... - 22

11. யாழ்ப்பாணம் - தோற்றமும் தொடர்ச்சியும் - 26

12. யாழ்ப்பாண இராச்சியம் - 28

13. யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்று மூலங்கள் - 31

14. நல்லூர் மந்திரி மனை - 32

15. யமுனா ஏரி - 34

16. யாழ்ப்பாண வைபவமாலை - 35

17. ஈழராஜா எல்லாளன் - 37

18. யாழ்ப்பாணக் கோட்டையின் வரலாறு - 39

19. யாழ்ப்பாணம் அரசின் வரலாற்றுத்தடம் - 42

20. கோட்டையின் மேலாதிக்கத்தின் கீழ் .... - 44




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 21. யாழ்ப்பாணத்தின் சிறந்த துறைமுகமாக… | - | 46 |
| 22. யாழ்ப்பாண இராச்சியத்தின் தனித்துவம் | - | 53 |
| 23. யாழ்ப்பாண இராச்சியம் | - | 56 |
| 24. புகழ் பூத்த யாழ்ப்பாண இராச்சியம் | - | 58 |
| 25. யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய குறிப்புக்கள் | - | 60 |
| 26. வரலாற்றுப் பெருமைமிக்க…. | - | 62 |
| 27. யாழ்ப்பாண இராச்சியத்தின் பெருமை | - | 64 |
| 28. மொழிசார் பண்பாட்டுக் கூறுகள் | - | 66 |
| 29. மலாயக் குடிப்பெயர்வும் யாழ்ப்பாண…. | - | 68 |
| 30. யாழ்ப்பாண இராச்சியம் (கி.பி 13-கி.பி 17 வரை) | - | 70 |
| 31. யாழ்ப்பாணப் பண்பாடு (குழு நாடகம்) | - | 72 |
| 32. யாழ்ப்பாண இராச்சிய ஆட்சிமுறை | - | 75 |
| 33. யாழ் தேசம் | - | 78 |
| 34. யாழ்ப்பாணம் | - | 79 |
| 35. யாழ்ப்பாண அரசுத் தமிழர்கள் | - | 80 |
| 36. யாழ் மண்ணின் மகிமை | - | 81 |
| 37. காலத்தால் முந்திய யாழ்ப்பாண இராச்சியம் | - | 82 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“முத்தமிழ்த்துணைவர்” எம் கல்லூரியின் பீடாதிபதி - கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மன்றம் - 2018



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : ஜெ.டினோசன் (மன்றத் தலைவர்), சி.சிவசங்கர் (விரிவுரையாளர்), பா.பாலகணேசன் (காப்பாளர்), மு.கௌரிகாந்தன் (ஓய்வுநிலை விரிவுரையாளர்), கலாநிதி. ச.அமிர்தலிங்கம் (பீடாதிபதி), இ.சத்தியேந்திரம்பிள்ளை (உப பீடாதிபதி), கலாநிதி. பா.தனபாலன் (உப பீடாதிபதி), சி.செல்வமலர் (உப பீடாதிபதி), ந.விக்னேஸ்வரி (விரிவுரையாளர்)

நிற்பவர்கள் இடமிருந்து வலம் : சி.சிந்துஜன், வி.லோஜன், செ.ராஜநந்தன், பா.வினோத், பா.துவாரகன், ர.திவ்வியா, ப. அபிராமி (செயலாளர்), கு.வினோஜா, இ.கார்த்திகா, ர.சஞ்சிகா, ச.சுவன்யா, ஜெ.பார்த்திகா (பொருளாளர்), அ.பியூலா, (பத்திராதிபர்), அ.விதுஷாளினி, வி.அனுஷா, த.தர்சிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரசங்கிலி மலர்க்குழு - 2018



இருப்பவர்கள் இடமிருந்து வலம் : சி.சிவசங்கர் (விரிவுரையாளர்), பா.பாலகணேசன் (காப்பாளர்), மு.கௌரிகாந்தன் (ஓய்வுநிலை விரிவுரையாளர்), கலாநிதி. ச.அமிர்தலிங்கம் (பீடாதிபதி), இ.சத்தியேந்திரம்பிள்ளை (உப பீடாதிபதி), கலாநிதி. பா.தனபாலன் (உப பீடாதிபதி), சி.செல்வமலர் (உப பீடாதிபதி), ந.விக்னேஸ்வரி (விரிவுரையாளர்)

நிற்பவர்கள் இடமிருந்து வலம் : ஜெ.டினோசன் (மன்றத் தலைவர்), செ.ராஜநந்தன், பா.வினோத், ம.டயானா, சி.தாரகா, ல.லக்ஷானா உ.கீர்தனா, இ.பியூலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடாதிபதி கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்கள் வழங்கிய வாழ்த்துச்செய்தி



இன்றைய உலகு வேகமாக உலகமயமாக்கலுக்குள் உள் வாங்கப்படுகின்ற வேளை உலகில் இன்று வாழ்கின்ற மனித இனங்களின் இருப்பு, அவர்களின் மரபுகள், கலை, கலாசாரங்கள், பண்பாடு விழுமியங்கள் வேகமாக அழிவுப் போக்கிற்கு உள்ளாக்கப்பட்டுவருகின்றன. இத்தகையதோர் சூழலில் சிக்கித்தவிக்கின்ற மனிதகுலங்கள் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள கடுமையாகப் போராடவேண்டியுள்ளது. இத்தகையதோர் சூழலில் ஒவ்வொரு இனமும் தமது தனித்துவங்களைப் பேணித் தன்னின அடையாளங்களைப்பேணி உலகில் தம்மைக் காத்துக் கொள்ளத் தன்னாலான அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருகின்றன. உலகின் இந்தப் போக்கிற்குப் பல சமூக அரசியல் பொருளாதாரகாரணங்கள். கூறப்படினும் அனைத்துக்கும் மூலகாரணம் ஒரு இனம் தான் தனித்து விடப்படுவதற்குத் தனது மரபு சார்ந்த விடயங்களையும், தனித்துவங்களையும், தன் மரபுகளையும் தொடர்ந்து பாதுகாக்கத் தவறியுள்ளமையுமே பிரதான காரணமாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையிலேதான் இன்று உலகில் வாழுகின்ற ஒவ்வொரு இனமும் தனித்துவ அடையாளங்களைப் பேணுவதில் மிகவும் முனைப்புடன் செயல்ப்பட்டு வருகின்றது. ஆவ்வாறு தன்னினத்தின் அடையாளத்தைப் பேணும் போது, அவற்றை வெளிக் கொணரும் போது அந்த முயற்சியில் ஈடுபடுபவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர். இந்த நிலை உலகில் வாழும் அனைத்து சமூகங்களிலும் காணப்படும் ஒரு நிலையாகும். எனவே தான் ஒவ்வொரு இனமும் தன்னை உலகில் நிலைப்படுத்தக் கடுமையாகப் போராட வேண்டி உள்ளது. காலப்போக்கில் இம் முயற்சிகள் பெருமளவில் இடம் பெறுகின்ற போது அது பெரும் விடுதலையை வேண்டி நிற்கும் போரட்டமாக மாறுகின்றது. இத்தகைய போராட்டம் விலைமதிப்பற்ற மனித உயிர்களை காவுகொள்கின்றது, அத்துடன் பொருளாதார இழப்புக்கள், அரசியல் சமூக ஊடாட்ட இழப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றது.

ஏனவே ஒரு காலத்தில் வாழுகின்ற ஒரு சமூகம் தன் இன அடையாளங்களைத் தனது கலை கலாசாரங்களை. மரபுகளை, இருப்புக்களை, விழுமியங்களைப் பேணிப்பாதுகாத்து வாழ்ந்தால் பெரும் உயிர், பொருளாதார, சமூக இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். இத்தகையதொரு நிலைதான் இன்ற எமது சமூகத்திற்கும் ஏற்பட்டுள்ளது. இன்று எமது சமூகம் எம்மினத்தின் பழம் பெருமைகளை மறந்து தறிகெட்டு தன்னினத்தின் அடையாளத்தைத் தொலைத்துக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையில் சென்று கொண்டிருக்கின்றுத. இலங்கையில் எங்கும்காணத குற்றச்செயல்கள் மலிந்த இடமாக யாழ்ப்பாணம் மாறிவிட்டது. இத்தகைய நிலைக்கு காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன என்று எண்ணத்தலைப்படும் போது பல்வேறு திட்டமிட்ட காரணங்கள் பல இருந்த போதும் அதே அளவுதாக்கம் மிக்க எம்மவர்கள் விடுகின்ற தவறுகளும் ஒருகாரணமாகும். அக் காரணம் யாது எனில் எம் தமிழ் இனத்தின் அடையாளங்களை, கலை கலாசாரங்களை, சம்பிரதாயங்களை, விழுமியங்களைத் தமிழ் மக்களாகிய நாம் கடைப்பிக்கத் தவறுவதும் ஆகும். எம் இளைய தலைமுறையினர் மெது மெதுவாக எம்மினத்தின் அடையாளங்களை, பண்பாடுகளை, கலாசார அம்சங்களை மறந்து வருகின்றார்கள். அல்லது அறிந்து கொள்வதில் ஆர்வம் கொள்கிறார்கள் இல்லை. இந்த நிலைக்கு காரணம் இன்றைய சமூகத்தை வழிநடத்தும் பொறுப்பு மிக்க பணியாற்ற வேண்டிய நாம் எமது அடுத்த சந்ததியினருக்கு எம்மினத்தின் பெருமைகளைச் சொல்லிக் கொடுக்கத் தவறுவதும் தான். எனவே இன்றைய சமூகத்தையும் நாளைய சமுதாயத்தை வழிநத்தும் பொறுப்பை எற்றுக் கொண்ட நாம் எமது தமிழ் இனத்தின் அடையாளத்தை, நிலைநிறுத்தத் தமிழ் சமூகம் பாரம்பரியமாகப் பின்பற்றிவரும் கலை கலாசாரங்கள், பண்பாடு, விழுமியங்கள் போன்றவற்றை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்து செல்ல வேண்டும்.

இத்தகைய பணியை ஒரு தனிமனிதர் சாதித்து விடமுடியாது. இப்பணிக்கு நிறுவனமயப்பட்ட அமைப்பு ஒன்று அவசியம். அத்தகைய பணியைத்தான் இன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றம் செய்து வருகின்றது. யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரித் தமிழ்மன்றம் ஆசிரிய மாணவர்களின் தமிழ் மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்துவதில் கணிசமான பங்கு ஆற்றி வருகின்றது. அத்துடன் அவ் ஆசிரியமாணவர்கள் சென்று கடமையாற்றும் பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகள் ஊடாக தமிழ் மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்துவதற்கும் அங்கு கற்கும் மாணவர்களின் தமிழ் மொழித்திறன் விருத்தியை ஏற்பதுத்துவதை நோக்காகக் கொண்டு இவ்வாசிரியர்கள் செயற்படுவார்கள். இவ்வாறு எமது மண்ணில் நிண்டகால நோக்குடன் தமிழ் மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தமிழ் மன்றம் தமது வருடாந்த சஞ்சிகையான "வீரசங்கிலி" இம்முறையும் தரமான ஆக்கங்களைத் தாங்கி வருவது சிறப்பிற்குரியது ஆகும். இம்மலர் வெளியீட்டில் சிறப்பாக செயற்பட்டு வரும் தமிழ் மனறத்தினருக்கு எனது வாழ்த்துகள் உரித்தாகட்டும் . அத்துடன் தமிழ் மன்றத்தின காப்பாளராக இருந்து ஆசிரியமாணவர்களை தமிழ்ப் பற்றாளரக வழிநடத்தும் தமிழ் மன்ற காப்பாளர் திரு. பா. பாலகணேசன் பாராட்டுக்கு உரியவர் ஆவார். அவருடன் தமிழ் மன்றத்தில் பணியாற்றும் விரிவுரையாளரான திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். தமிழ் மன்றத்துடன் சேர்ந்து இயங்கி அனைத்து அசிரியமாணவர்களையும் வழிநடத்தும் அனைத்து விரிவுரையார்களுக்கும் எனது வாழ்ததுக்கள் உரித்தாகட்டும். வருடாந்தம் மிகவும் சிறப்பாக நடைபெற்றுவரும் முத்தமிழ் விழா இம்முறையும் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல வித்தக விநாயகர் அருள் புரியட்டும்

**கலாநிதி எஸ். அமிர்தலிங்கம்**
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப பீடாதிபதியின் வாழ்த்துச்செய்தி



முத்தமிழ் விழாவின் சிறப்பு அம்சமாக "வீரசங்கலியன்" மலர் இந்த வருடமும்பல்வேறுபயனுள்ளஅம்சங்களைஉள்ளடக்கிவெளியிடப்படுவது பாராட்டத்தக்கது. வீரசங்கிலியன் மலரின் ஆசிரியராக இருந்து தரமான ஒரு வரலாற்று ஆவணத்தை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கல்வியியலாளர் திரு. பா.பாலகணேசன் மற்றும் அவரோடு இணைந்து பணியாற்றிய கல்வியியலாளர்கள் மற்றும் முகிழ்நிலை ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



தமிழர்களின் தொன்மையான வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான சவால்களுக்கு தமிழர்கள் சமகாலத்தில் முகம்கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த சூழ்நிலையில் இந்நூல் வெளியீடானது முக்கியத்துவம் உடையதாக அமைகிறது.

எமது கல்லூரியின் பெருமையை வெளிப்படுத்தும் இயல், இசை, நாடகம் மற்றும் தமிழ்மொழி அறிவு சார்ந்த விடயங்களை உள்ளடக்கி சிறப்பான திட்மிடல்களுடன் இந்த வருட முத்தமிழ் விழா நிகழ்வுகள் அமைவதையிட்டு தமிழ்மன்ற உபகாப்பாளர் மற்றும் அவரோடு இணைந்து பணியாற்றியகல்வியியயாளர்கள், முகிழ்நிலைஆசிரியர்கள்அனைவருக்கும்எனதுபாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

S.R. **சத்தியேந்திரம்பிள்ளை**
உப பீடாதிபதி
(கல்வியும் தர மேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபு பேணுவோம்



முருகேசு கௌரிகாந்தன்



பாலசிங்கம் பாலகணேசன்

'மரபு' என்பதனை 'தொன்று தொட்டு வந்த வழக்கு' என்று விளக்குகின்றார் அருசஞ் சண்முகனார் எனும் உரையாசிரியர். வாழும் மனித இனம் எல்லாவற்றுக்கும் மரபு என ஒன்றிருக்கும். அது அந்தந்த இனத்தினது ஆற்றல் மிக்க அடையாளமாகும். மரபின் தொடர்ச்சியாக 'ஆக்கம்' என்பது விளங்கும் . தேவையினை ஒட்டி இப்போது உண்டாக்கப்படுவதனை 'ஆக்கம்' என்று கூறுவர். இந்த ஆக்கம் முதிர்ச்சியும் அங்கீகாரமும் பெற்று மரபாகின்றது. 'மரபென்பதுகாலமும் இடமும் பற்றி வழக்குத் திரிந்தக்காலும் திரிந்தவற்றுக்கு ஏற்ப வழுப்படாமைச் செய்வதோர் முறைமை' என்று தொல்காப்பியப் பொருளதிகார உரையாசிரியரான 'பேரசிரியர்' குறிப்பிடுவது மரபினுடைய பிரயோகத்திறனை விளக்கப்போதுமான தென்று தெரிகின்றது. 'இன்றையது நேற்றையதிலிருந்து கட்டடப்பெற்றது'. எனும் தத்துவத்தை இன்று எம்மவர் மறந்து தம் மனம் போன போக்கில் சென்று அழிவுறுவதனைத் தடுத்து, சரியான நெறியில் இவர்களை வழிநடத்த வேண்டியது பொறுப்பு வாய்ந்தோரின் கடமையாகும்.

'மனிதன் சாகிறதில்லை அவன் தன்னைத்தானே கொன்று கொள்கின்றான்'. என்பது எமது விடயத்துக்கும் பொருந்தக் கூடிய ஆங்கிலப் பழமொழியாகும். நவீனத்துவத்தின் செல்வாக்கால் பழமை அல்லது மரபைப் புறக்கணிப்பது காலவோட்டத்திலே எம்மையும் எமது அடையாளங்களையும் நாமாகவே அழித்துக் கொள்ளும் செயற்பாடனெலாம். தேவையற்ற அல்லது தீங்கான பழையன தாமாகவே கழியும் நவீன மோகத்ததால் அவற்றை நாமாகக் கழிக்க முனையக் கூடாது. அவ்வாறே புதியன தாமாகவே பயன்கருதிப் புகுந்து நிலைபேற்றைப் பெறும். அதனை எவராலும் வரம்பு அமைத்துத் தடுக்க முடியாது. உயிர்ப்புள்ள சமூகத்தில் இவையிரண்டும் நடைபெறும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே!" நன்னூல் 462

எமது தொன்மையான வரலாறுகளையும் சாதனைகளையும் அழியாமல் பிற்கால சந்ததியர்க்கு வழங்கியதிலே கல்வெட்டுக்களுக்கு முக்கியமான இடமுண்டு இவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்திலே சாசனம் என்று கூறுவர். சங்ககாலத்திலே நிலவிய நடுகல் வழிபாடு என்பதும் இதனுடன் சேர்ந்ததொன்றே. இத்தகையதான வரலாற்றுப் பிடிமானத்தின் வெளிப்பாடாகவே எமது கல்வியியற் கல்லூரி முகத்திடலில் நிறுவப் பெற்ற, கோப்பாயிலும் கோட்டை அமைத்து அரசாட்சி புரிந்த வீரசங்கிலியன் சிலையாகும்.

எமது பாரம்பரிய அடையாளங்களை இல்லாதொழிக்கின்றவர்களிலே சிறிய ரகவாகனங்களில் வீதிவீதியாகச் சென்று பெறுமதிமிக்க "பழைய பொருட்களைப் கொள்வனவு செய்கின்ற வியாபாரிகளுக்கும் முக்கியமான பங்கிருக்கின்றது பழைய நூல்கள், சருகைச் சேலைகள், உலோகப் பொருட்கள்..." என்றவாறு ஒலிபெருக்கிகளில் ஒலிபரப்புச் செய்து வரலாற்று அழிப்பு வேலைகளைச் செய்வதும் தீவிரமாக நடைபெறுகின்றது. யாழ் நூலக எரிப்பிலும் பார்க்க மோசமான செயற்பாடாகவே இதனையும் பார்க்க வேண்டியுருக்கின்றது.

அடுத்து எம்மிடையே மரணிக்கின்ற வர்களுக்காக வெளியிடப்பெறும் நினைவு மலர் வெளியீடும் அருகிச் செல்வதும் எமது கவனத்துக்குரியது. இந்நினைவு மலரினைக் 'கல்வெட்டு' என்றுதான் கூறுவார்கள். இறந்தவரின் நிழற்படம், வரலாறு, வம்சாவழி போன்றவற்றைக் கொண்டதான வரலாற்றுப் பொக்கிசமான இந்த நினைவு மலர்களை நம்மிற் பலர் அதன் பெறுமதி உணர்ந்து பேணுவதாகத் தெரியவில்லை. இவற்றை, வீட்டிலே வைத்திருக்கக் கூடாது என்ற வகையிலான தவறான பிரசாரமும் ஒரு காரணமென்று தெரிகின்றது. இதனால் இலகுவான முறையில் ஏதாவது அன்பளிப்புக்களைக் கொடுத்து செயற்படுவோர்களுக்கும் ஆலோசனை வழங்க வேண்டும். தமிழ்ப் பாட ஆசிரியர்களும் இது தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டும்.

'மரபு' என்பது மிகவும் பரந்துபட்டதொன்று மொழிமரபு, சமயமரபு, கலாசார மரபு என்றவாறு இது விரிந்து செல்லும். மொழியைச் சரியாகவும் திருத்தமாகவும் கையாள வேண்டும் என்பது மொழி மரபின் அடிப்படை மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இது தொடர்பாக மிகுந்த கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது. இலங்கையில் **1960** களில் மரபுப்போராட்டம் எனவும் ஒரு போராட்டம் நடைபெற்றதையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்துகின்றோம்.

அடுத்து எமது அவதானத்திற்குரியது, ஆடைக் கலாசார மரபு ஆகும். உயிரினும் மேலானதான மானத்தைக் காப்பதற்காக வந்த ஆடைகள் பெண்களாயினும் சரி, ஆண்களாயினும் சரி, இவர்களிற் பலர் அணியும் வகையினால் மானத்தை மட்டுமல்ல உயிரையே வாங்கும் செயலாக அமையும். இது விடயத்திலும் ஒவ்வொருவரும் எமது பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது. சிறுமை கண்டு பொங்குவாய் வா! வா!! வா!!! என்ற பாரதியின் அர்த்தம் நிறைந்த பா வரியின் செல்வாக்கிற்கு நாமும் உட்பட்டமையினால் இந்த வருடம் **(2018)** 'மரபு பேணுவோம்' எனும் பொருளைத் தேர்ந்தெடுத்தோம். ஔவை 'அறத்தைச் செய்' என்று கூறாமல் 'அறஞ் செய விரும்பு' என்று கூறியதைப் போன்றே கிட்டத்தட்ட நாமும் இத்தலைப்பைத் தெரிவு செய்து எழுதியுள்ளோம். இது ஒரு சமூகக் கூட்டுப்பொறுப்பான விடயம் என்றமையால் உளப்பாட்டுத் தன்மைப் பன்மையில் அறை கூவல் விடுத்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபு சார்ந்த வகையில் கடந்த வருடம் 'தமிழர் வரலாறு பண்பாட்டை அர்த்தப்படுத்துவோம்' என்று எழுதிய நாங்கள் இம்முறை யாழ்ப்பாண அரசு பற்றிய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இம்மலரை வெளியிடுகின்றோம்.

வீரசங்கிலி முத்தமிழ் விழா மலர் தொடர்ந்தும் சிறந்த முறையில் வெளிவர கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் ஆதரவை தமிழ்மன்றம் நாடி நிற்கின்றது. மேலும் 'தாயக ஒலி' எனும் இருதிங்கள் ஏட்டின் கார்த்திகை, மார்கழி 2017, ஆடி ஆவணி 2018 முகப்பு அட்டைகளில் எமது மன்றத்தின் முத்தமிழ்விழாக்காட்சிகள் நிறுவப்பெற்ற வீரசங்கிலியின் நிழற்படம் என்பவற்றைப் பிரசுரித்துதவிய அதன் மலராசிரியர் திரு. தம்பு சிவசுப்பிரமணியம் அவர்கட்கு எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளையும் இவ்விடத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலராசிரியர்களாகிய எம்முடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வேண்டிய ஆலோசனைகளை வழங்கிய பீடாதிபதி கலாநிதி எஸ் அமிர்தலிங்கம் அவர்களுக்கும், மலருக்கான நிதி அனுசரணையாளருக்கும், அதைப்பெற்றுக்கொடுத்தோர்க்கும், ஆக்கங்களைக் கொடுத்துதவியவர்களுக்கும், சரவைப் பார்த்துதவியவர்களுக்கும், அழகான முறையில் அச்சிட்டுதவிய கரிகணன் (தனியார்) நிறுவனத்தினர்க்கும், மலர் நயப்புரையினை நிகழ்த்தவிருக்கும் கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் திரு. குமரேசன் பாலசண்முகன் அவர்களுக்கும் மலரின் முதற் பிரதியினைப் பெறவிருக்கும் கல்வியற்கல்லூரி நிமநன் கொடையாளரும் பாராளுமன்ற ஊறுப்பினருமாகிய கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்களும் இவரின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி மீனா சித்தார்த்தன் அவர்களுக்கும், சிறப்புப் பிரதி பெறவிருப்பவர்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள்.

**முருகேசு கௌரிகாந்தன்,**
**பாலசிங்கம் பாலகணேசன்**
**(மலராசிரியர்கள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்காவலர் கா. பொ. இரத்தினம்
# நற்றமிழாய் வாழ்ந்த நன்மகனார்



கலாநிதி(திருமதி) சுகந்தினி சிறிமுரளிதரன்
தலைவர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

'சோழநாடு சோறுடைத்து' என்பது போல 'யாழ்ப்பாணம் கல்வியுடைத்து' எனச் சுட்டலாம். 19ஆம் நூற்றாண்டில் சமயக்கல்வி நிறுவனங்களின் எழுச்சியும் அவற்றின் வழி உருவான கல்விக் கூடங்களின் வளர்ச்சியும் படித்த மத்தியதர வர்க்கத்தை உருவாக்கியது. யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தில் தீவகத்துக்குக் குறிப்பாக வேலணைக்குத் தனியிடமுண்டு. பாரம்பரியக் கல்வியும் நவீன கல்வியும் இணைந்த கல்விப் பாரம்பரியத்தின் வழி வந்த அறிஞர்கள் பலர் அங்கு தோற்றம் பெற்றனர். அவர்களுள் முன்னே வைத்துச் சுட்டத்தக்க ஒருவரே கா. பொ. இரத்தினம் அவர்கள்.

பல்வேறு புலமைத்துவங்களின் கூட்டு ஆளுமையாக அடையாளப்படுத்தப்படும் இவர் பொன்னம்பலம் பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் தலைமகனாவார். இவரது காலம் 1914 - 2010 இற்கும் இடைப்பட்டதாகும். மரபு வழி அறிஞரான பேரம்பலப்புலவரின் பேரனான இவர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றவராய் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கப் பண்டிதராய், சென்னைப் பல்கலைக்கழகத்தில் B.O.L, M.A. பட்டங்களைப் பெற்றவராய், இலண்டன் பல்கலைக்கழகத்தில் இளநிலை கலைப்பட்டத் தேர்வில் முதல்வகுப்பில் சித்திபெற்றவராய்த் திகழ்ந்தார். கலாநிதிப்பட்டத்தை உலகப் பல்கலைக்கழகம் வழங்கியதாக அறியமுடிகிறது. ஆசிரியராய், தலைமையாசிரியராய், கலாசாலை விரிவுரையாளராய், மொழிபெயர்ப்பாளராய் திகழ்ந்தவரிவர். தமிழ் உணர்ச்சி மிக்க இவருடைய எழுத்துக்கள் சுயபாஷாக்கல்வி, கற்பித்தல் முறை, தமிழ்த்தேசியம், தனித்தமிழ், தமிழ்க்கலைச் சொல்லாக்கம், தமிழிசை எனும் பல்தளங்களில் இயங்கியுள்ளன. தமிழையே தன்னடையாளமாகக் கொண்ட இவர் பல்வேறு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார்.

திருக்குறளைத் தமிழின் முன்னூலாகப் போற்றி அது முன்னிறுத்தும் கருத்துக்களின் வழி தமிழர் வாழ வேண்டும் என விரும்பினார். ஒவ்வொரு தீவிலும் திருவள்ளுவர் விழாவை நடாத்தினார். தமிழகத்திலும் திருவள்ளுவர் பற்றிய அதீத விழிப்புணர்வு ஏற்பட உழைத்தார். இவரின் தூண்டுதலாலேயே தமிழக தமிழரசுக்கழகத்தின் ஊடாக திருவள்ளுவர் விழாவை ஆண்டு தோறும் முன்னெடுத்ததாக சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் கூறியிருப்பது சுட்டியுரைக்கத்தக்கது. மேலும் தமிழ், மொழிபெயர்ப்பு, அரசியல், பாடநூல் என இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். உள்ளத்துணர்வுகளைக் கவிதைகளாக எழுதி இருநூல்களாக வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் வழிநின்று சைவத்தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை மூடக்கொள்கைகளைக் கண்டித்தும் நிராகரித்தும் நவீன உலகுக்கேற்ப சைவத் தமிழ்வளர்ச்சிக்கு உதவினார். சாதி பேதம் அற்ற சமூக உருவாக்கமும் சமய சீர்திருத்தமும் தொடர்பாக பல்வேறு உரைகளை ஆற்றியுள்ளார். இவர் தொகுத்தளித்த ' நாவலர் நினைவு மலரே' (1938) நாவலர்பற்றி வெளிவந்த முதல்மலர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ், சைவ வளர்ச்சிக்கான மன்றங்கள் மூலம் பல மாநாடுகளை நடாத்தியதோடு மலர்களையும் வெளியிட்டுள்ளார். இதற்கு உதாரணமாக தமிழ்மறைக்கழகத்தை நிறுவித் தமிழிலக்கியத் தேர்வுகளை நடாத்தி பரிசளித்தும் மாநாடுகளை நடாத்தி விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியும் பல பணிகளை முன்னெடுத்தார். திருக்குறள் சார்ந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் திருக்குறள் மாணிப்பட்டம், உள்ளிட்டவற்றை நடாத்தி பாராட்டிதழ்கள், பரிசில்கள் வழங்கி ஊக்கப்படுத்தினார். தவிர உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் பங்குபற்றினார்.

ஈழத்தின் தமிழத்தலைமைகள் பொதுவில் சட்டத்தரணிகளாக இருந்த சூழலில் தமிழ்ப்பண்டிதரான கா. பொ. இரத்தினம் அவர்கள் அரசியலில் ஈடுபட்டார். நீண்டகாலம்கிளிநொச்சி, மற்றும் ஊர்காவற்றுறை தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினராகத்திகழ்ந்தார். சிறந்த பேச்சாற்றல், தமிழ்த்தேசிய உணர்வு, அரசியல்சார் பிரக்ஞையும் அறிவும் அவரை ஈழத்தமிழ்தலைவர்களில் ஒருவராக ஆக்கியது. சிங்களத்தலைமைகளுக்கு நேரெதிரே நின்று அவர் பாராளுமன்றில் நிகழ்த்திய அரசியல் உரைகள் தமிழ்த்தேசிய உணர்வை பொங்கிப்பிரவாகிக்கச் செய்தன.

இதற்கு உதாரணமாக அவருடைய அரசியல் உரைகளின் தொகுப்புநூல்களில் ஒன்றான 'பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் எனும் நூலினைச் சுட்டலாம். அந்நூல்சிங்கள், தமிழ் மக்களிடையே காணப்படும் முடிவிலியான ஒவ்வாமையுணர்வு இலங்கையரசின் சிங்கள - தமிழ் பேதவுணர்வு, பயங்கரவாதம், ஊழல், அரசியல் பிற்போக்குத்தனம், மலையகத்தமிழர் பிரச்சனைகள் எனப் பல்வேறுபட்ட பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றன. ஒருநேர்மையான அரசியல்வாதியின் குரலாகவும் தீர்க்கதரிசனம் மிக்க உரைகளாகவும் அவைதிகழ்கின்றன எனவுரைப்பது மிகையல்ல. தமிழ் அரசியல்வாதிகள் பலரின் பச்சோந்தித்தனம், புல்லுருவிச் செயற்பாடு, சுயநல அரசியல் என்பவற்றையும் இவரது அரசியல்சார் நூல்கள் பட்டவர்த்தனமாக்குகின்றன.

கா. பொ. இரத்தினம் அவர்கள் ஆசிரியராக, பண்டிதராக, தமிழ் உணர்வாளராக செயற்பாட்டாளராக, தமிழ் அரசியல்வாதியாக, சமயவுணர்வாளராக பல்தளங்களில் இயங்கியுள்ளார். இவ்வியங்குநிலை மன்றச்செயற்பாடுகள், மாநாடுகள், உரைகள், எழுத்துக்கள், மொழிபெயர்ப்புக்கள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்தல் எனும் தளங்களினூடுநிகழ்ந்துள்ளது. தனக்குக்கிடைத்த கல்வி அறிவு, செல்வாக்கு, அரசியல், பதவிஎன்பனவற்றினூடு சைவத்தமிழ்ச் சமூகத்துக்குத் தன் மரணபரியந்தம் வரை பணிசெய்த பேராளர்: குறித்த வகையீட்டுக்குள் உள்ளடக்கமுடியாத பல்பரிமாணமுடையவர்: இவர் போன்றதலைமையாளர்கள் - செயற்பாட்டாளர்கள் இன்று அருகிவிட்டனர் என்பது எமது சமூகத்தின் துரதிஷ்டமே. கா. பொ. இரத்தினம் அவர்களின் பணிகளை சைவத்தமிழ் நல்லுலகு என்றென்றும் நினைவு கூரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தமிழ்க் காவலர்' பேராசிரியர் ஆ. சதாசிவம்
# M.A.(cey.), D.Phil. (Oxon)
# அவர்களின் வாழ்வும் தமிழியற் பணிகளும்



"பதிப்புச்சுடர்"
**முருகேசு கௌரிகாந்தன்**
ஓய்வு நிலை சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

தமிழகத்தின் திருச்சியைச் சேர்ந்த மூதறிஞர் கி .ஆ. பெ. விசுவநாதம் பிள்ளை (11.11.1899 - 1912.1994) இயற்றமிழ் , இசைத்தமிழ் , நாடகத்தமிழ் மூன்றனுக்கும் ஆற்றிய அரிய பணிகளால் 'முத்தமிழ்க்காவலர்' என்று அழைக்கப்பட்டார். இவரைப்போல இலங்கையிலும் தமிழ்ப் பணியாற்றியத் தமிழ்க்காவலராக மூதறிஞர் பண்டிதர் பேராசிரியர் கலாநிதி ஆ.சதாசிவம் விளங்கினார்.

பேராசிரியர் அராலி தெற்கில் ஆறுமுகம் பார்வதி தம்பதியினர்க்கு அருமை மகனாக 1926 ஆம் ஆண்டு மாசித்திங்கள் பதினைந்தாம் நாள் பிறந்தார். இவருடைய ஆளுமையில் இவர் கற்ற பாடசாலைகளுக்கும் முக்கியமான இடமிருக்கிறது. இவ்வகையில் ஆரம்பக்கல்வியினை அராலி சரஸ்வதி வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை ஊரிலுள்ள இந்து ஆங்கில பாடசாலையிலும் கற்றுத் தேர்ந்தார். பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் எஸ் எஸ். சி.(ஆங்கில மொழி மூலம்) கற்று, இப்பரீட்சையில் முதற் பிரிவில் சித்தி பெற்று, அங்கிருந்து கொழும்பு ஆனந்தக் கல்லூரியில் 1945-1947காலப்பகுதியில் H.S.C. பயின்று சித்தி பெற்று, இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார். 1947 இல் மதுரைத் தமிழ் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சையிலும் (Pandit Madurai) சித்தி பெற்றார். இலங்கைப்பல்கலைகழகத்தில் (கொழும்பு) தமிழைச்சிறப்பாகவும் சமஸ்கிருதத்தைத் துணைப்பாடமாகவும் கற்று முதல் பிரிவில் சித்தி பெற்று 1952 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே (பேராதனை) உதவி விரிவுரையாளரானார்.

பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம் காலாநிதி வித்தியானந்தன் என்போர் இவரின் பல்கலைக்கழக ஆசான்கள்.

1954 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்திலேயே (பேராதனை) முதுகலைமாணி (M.A.) பட்டம் பெற்று ,1954-1956 காலப்பகுதியில் ஒக்ஸ் போட் பல்கலைக்கழகத்திலே (University of Oxford) திராவிட மொழியியல் அறிஞர் பேராசிரியர் தோமஸ் பறோ (T. Burrow) வின் கீழ் சங்க இலக்கியங்களில் தமிழ் வினைச் சொற்களின் அமைப்பு (The



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Structure of Tamil Verbs in Literature) எனும் பொருளில் ஆய்வு செய்து கலாநிதிப்பட்டம் பெற்றார் இவருக்குப் பின்னர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை (1936-2015) அவர்களும் பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் அவர்களும் பேராசிரியர் பறோவின் மாணவர்களாவதற்கு இவரே காரணகர்த்தா என்பதும் பேராசிரியரின் சிறப்புக்களில் ஒன்றெனலாம்.

தொடர்ந்து 1956-1965 இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் 1965-1967 காலப் பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழகத்திலேயே (கொழும்பு) தமிழ்த் துறைத் தலைவராகவும் 1967-1969 காலப்பகுதியில் இலங்கைப் பல்கலைக்கழக கொழும்பு வளாகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் 1967-1970 இல் அதே வளாகத்தில் தமிழ் பேராசிரியராகவும் நியமனம் பெற்று 1970-1980 காலப்பகுதியில் அங்கே பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராகவும் இருந்து நிறைவாக 1981-1988 காலப்பகுதியில் பேராதனைப் பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். இன்று எம்முடன் வாழும் தமிழ்ப் பேராசிரியர்களான சி. தில்லைநாதன் பொ. பூலோகசிங்கம், அ. சண்முகதாஸ், இ. பாலசுந்தரம் என்போர் பேராசிரியரின் பேர்சொல்லும் மாணவர்களாவர்.

**இல்லறம்**

இலங்கைப் பல்கலைக் கழக பட்டதாரியான மாவிட்ட புரத்தைச் சேர்ந்த திருஞானேஸ்வரி அவர்களை 1957 இல் மணம் புரிந்து மதியழகன் (அமெரிக்கப் பல்கலைக்கழக பேராசிரியர்), வைத்திய கலாநிதி குந்தவி (1966-2008), பூங்கோதை (கொழும்பு பல்கலைக்கழக மேனாள் விரிவுரையாளர்), வைத்திய கலாநிதி அன்பழகன் ஆகிய நன்மக்களைப்பெற்று மகிழ்ந்து பணியாற்றிக்கொண்டிருக்கும் காலத்திலே எவருமே எதிர்பாராத வகையில் தமது சொந்த மண்ணில் 01.07.1988 இல் இறையடி சேர்ந்தார்.

**பணிகள்**

பேராசிரியரின் பணிகளை கற்பித்தற் பணி, இலக்கிய வரலாற்றுப் பணி, மொழியியல் சார் பணிகள், அகராதிப் பணி, பதிப்புப் பணி, பிறபணிகள் என்றவாறு பகுத்து நோக்கலாம்.

**பணிகள்**

கற்பித்தல்திறனும் எழுத்தாற்றல்திறனும் ஒருசேர எல்லோரிடமும் இருப்பதில்லை. சிலரிடம்தான் இருக்கும். அத்தகைய விரல்விட்டு எண்ணக்கூடியவர்களில் பேராசிரியரும் ஒருவர். "உள்ளத்தினிலே ஒளியுண்டானால் வாக்கினிலே ஒளியுண்டாம்" என்ற பாரதியின் பாடல்வரியில் மிகுந்த நம்பிக்கையுடைய பேராசிரியர், கற்பிப்பவர்களுக்கு நிறைய விடய அறிவும் நல்ல குரல் வளமும் ஆற்றொழுக்காகப் பேசும் ஆற்றலும் இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்தியவர். சொல்லப்போகும் விடயத்தை எளிமையாகவும் தெளிவாகவும் மயக்கமின்றியும் சொல்ல வேண்டும் என்பதில் பேராசிரியர் அக்கறை கொண்டிருந்தார். வினாக்கேட்டுக்கேட்டுக் கற்பிப்பது பேராசிரியரின் ஒரு கற்றல் - கற்பித்தல் உத்தி. 1968, 1969 ஆகிய ஆண்டுகளிலே இலங்கைப் பல்கழைக்கழகம், கொழும்பில் இவர் தமது மாணவர்களுக்கு வழங்கிய தமிழிலக்கிய வரலாற்றுக் குறிப்புக்கள் அண்மையில் எமது பார்வைக்கு எட்டின. பேராசிரியரின் கற்பித்தல் உத்திகள் பலவற்றை அதிலே காணக்கூடியதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலக்கிய வரலாற்றுப் பணிகள்

பேராசிரியரின் தமிழியல்சார் எழுத்துப்பணிகளில் இலக்கிய வரலாறும் மொழியியலும் குறிப்பிடத்தக்கவை. இலங்கையில் முதன்முறையாக பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் தமிழிலக்கிய வரலாறு சுருக்கம் (1951) எழுதியவேளையில் அவரின் மாணவரான பண்டிதர் சதாசிவம் அவர்கள் செய்த உதவிகளை நூலின் முன்னுரையில் பாராட்டிக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் செல்வநாயகம் அவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதினாலும் அதனைத் திறமையாகக் கற்பிக்கும் ஆற்றல் கலாநிதி சதாசிவம் அவர்களிடமே இருந்தது என்று எமக்குக் கற்பித்த ஆசிரியர் ஒருவர் கூறியது சதாசிவம் அவர்களின் தமிழிலக்கிய வரலாற்றுக் குறிப்புக்களில் நன்கு தெரிகின்றது. தமிழிலக்கிய வரலாறு (அச்சில்) என்று கருத்துரைக் கோவை (1959) என்ற தமது நூலிலும் எழுதியுள்ளார். ஆனால் அப்படி ஒரு நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

### ஈழத்துத் தமிழ்க்கவிதைக் களஞ்சியம்

ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பணிகளில் இவரின் "ஆனைப்பிரசவம்" என்று குறிப்பிடக்கூடியது இவரின் ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத் தொகுப்புப் (1966) பணியாகும். சங்ககாலத்தவரான ஈழத்துப் பூதன்தேவன் தொடக்கம் இலக்கிய கலாநிதி சு. நடேசபிள்ளை காலம் வரையான 142 புலவர்களின் செய்யுள்களை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலப் பகுதிக்குள் வைத்து தொகுத்துத்தரப்பட்ட நூலாக இது விளங்குகின்றது. இந்தத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தின் ஆரம்பத்திலே இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பெரிதும் அரசியற்காலப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு சங்ககாலம், யாழ்ப்பாணத்தமிழ் வேந்தர் காலம், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம், தேசிய எழுச்சிக்காலம் என்று வகுத்தும் விளக்கியும் கூறியுள்ளார். வசபாகு மன்னன் காலத்தில் (கி.பி 61 - 111) பூதன்தேவன் புலம்பெயர்ந்து சென்றிருக்கலாம் என்று பேராசிரியர் இந்நூலிற் குறிப்பிடுவதும், 37 ஆண்டுகள் (1621 - 1658) யாழ்ப்பாணத்தை ஆண்ட போர்த்துக்கேயர் காலத்தைத் தனியாகப் பார்க்க வேண்டும் என்பதும் சிந்திக்க வைக்கின்றன.

### மொழியியல்சார் பணிகள்

தமிழிலக்கணம் அல்லது மொழியியலில் பேராசிரியர் சதாசிவம் அவர்கள் ஆர்வாங்காட்ட மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதராக இருந்தமையும் ஒரு காரணமாகலாம்.

மொழியியல் தொடர்பான இவரது கலாநிதிப்பட்ட ஆய்வு 1956 இல் இரண்டு தொகுதிகளாக வெளிவந்தது. இந்நூல்கள் DRAVIDIAN ETYMOLOGICAL DICTIONARY எனும் நூற்றொகுப்பிற்குப் பெரிதும் உதவியதாக அதனைத் தொகுத்த பேராசிரியர்களான பறோவும் எமனோவும் (BURROW & EMMANEAU - 1960) கூறியுள்ளனர்.

இவரது மொழியியல் ஆய்வுகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது 'சுமர்' மொழி பற்றிய ஆய்வு. இதனை இவரது வாழ்க்கைப்பணி என்று பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிட்டிருக்கிறார். கி.மு 4000 - கி.மு 2000 வரையில் யூப்பிரட்டீஸ் - ரைக்கிறீஸ் எனும் நதிகளுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் பேசிய மொழி சுமர் எனப்படுவது. இதுதான் ஆதித்தமிழ் அல்லது திராவிடம் என்று தமது ஆய்வில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சதாசிவம் நிறுவுகிறார். 'சுமர் மொழி ஒரு திராவிட மொழி' எனும் அவரது நூலில் 500 எடுத்துக்காட்டு ஒப்புமைகளை விளக்கியுள்ளார். 'சுமர்' என்பது 'குமர்' என்பதன் திரிபு என்பது இவரின் துணிபு. இந்த ஆய்வு ஆங்கிலத்தில் செய்யப்பட்டது. இந்த நூல் 1965 ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் முதலில் வெளியிடப்பெற்றதாக எம்.ஏ.ரஃமான் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் (2017) பேராசிரியரின் பாரியார் திருமதி திருஞானேஸ்வரி சதாசிவம் அவர்களின் பெருமுயற்சியால் இந்நூல் 'PROTO SUMERO DRAVIDIAN' - THE COMMON ORIGION OF SUMERIAN AND DRAVIDIAN LANGUAGES எனும் தலைப்பில் வெளிவந்திருக்கின்றது. மேலும் இவரால் தமிழில் எழுதப்பட்ட 'குமிரித்தமிழ் அல்லது சுமர் மொழி' (1969), 'மரபு' (1959), 'திராவிடத்தாய்' (1960), 'தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கைகள்' (1963) எனும் கட்டுரைகளும் தமிழ்மொழி வரலாறு எனும் நூலும் தமிழ்மொழியியலுக்கு இவரின் அரிய பங்களிப்புக்கள் எனலாம். இவரது தமிழ்ச்சொற்களின் பிறப்பு நெறி (1986) தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்திலிருந்து வெளிவந்திருக்கிறது. இவரது தமிழ் மொழிவரலாறு எனும் நூல் மிகவிரைவில் வெளிவரவிருக்கின்றது..

### அகராதிப்பணி

பேராசிரியரின் அரியதும் பெரியதுமான முயற்சிகளில் இலங்கைத் தமிழ்க்கிளைமொழி அகராதி எனப்படும் பேச்சுத்தமிழ் அகராதியும் ஒன்றெனலாம். இது ஐந்து பாகங்களைக் கொண்டதாக விரைவில் வெளிவர இருக்கிறது. பேச்சுவழக்கை பேராசிரியர் 'பாமரர் வழக்கு' என்று ஒதுக்கினார் என்று கூறியவர்கள் இவற்றைக்கண்டு இவரின் ஆய்வு முதிர்ச்சி நிலையினை உணர்ந்து கொள்ளலாம். 20,000 இற்கு மேற்பட்ட சொற்கள் இதில் இடம் பெறுவதாகக் கூறப்படுகின்றது.

### பதிப்புப்பணி

சதாசிவம் அவர்களின் பதிப்பு முயற்சிகளில் 'கலைப்பூங்கா' என்ற சஞ்சிகையும் 'ஞானப்பள்ளு' என்ற ஈழத்துத் தமிழிலக்கியமும் குறிப்பிட்டுக் கூறக்கூடியவை. 1963 தொடக்கம் 1965 வரை கலைப்பூங்கா வெளிவந்தது. ஆண்டுக்கு இருமுறை வெளிவந்நது. இலங்கைச் சகித்திய மண்டலம் இதனை வெளியிட்டது. கலாநிதி சதாசிவம் அவர்கள் தனித்தும் பண்டிதர்களான சோ.இளமுருகனார், க.துரைசிங்கம் ஆகியோருடன் இணைந்தும் இதனை வெளியிட்டார். இந்த இதழ்களிலே 'மரபு' மிகவும் வலியுறுத்தப்பட்டது. 'தமிழிலக்கிய மரபு விழா சிறப்பிதழ்' (1964 புரட்டாதி) ஒன்றும் வெளிவந்தது. பல்கலைக்கழகத்திற்கு வெளியே வாழ்ந்த பதினைந்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் புலமையாளர்கள் மரபும் நவீனத்துவமும் சார்ந்த பொருள்களிலே எழுதியதன் மூலம் நமது தமிழ்தான் வளம்பெற்றது.

### ஞானப்பள்ளு

ஈழத்தில் போர்த்துக்கேயர் காலத்திலே மூன்றே மூன்று இலக்கியங்கள்தான் தோன்றியிருந்தன. அவை மூன்றும் கிறிஸ்தவ சமயம் சார்ந்த இலக்கியங்கள். இவற்றில் ஒன்றான 'ஞானப்பள்ளு' என்ற பள்ளுப் பிரபந்த இலக்கியத்தை பேராசிரியர் 1968 இல் பதிப்பித்தார். இதிலே 'பள்ளுப் பிரபந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் பொருளில் பேராசிரியரால் எழுதப்பட்ட நீண்ட அறிமுகம் பள்ளு இலக்கியத்தில் ஞானப்பள்ளுவிற்குரிய இடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு காட்டும். அடிக்குறிப்புக்களும் பாடல் முதற்குறிப்பு அகராதியும் எழுத்துப்பிழையின்மையும் பேராசிரியரின் பதிப்புத்திறனை வெளிக்காட்டுகின்றன.

பேராசிரியர் இறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் கொழும்பு புனித ஜோசப் கல்லூரி மாணவர் மன்றக் கலைவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு 'கிறிஸ்தவர்கள் தமிழுக்கு ஆற்றிய பணிகள்' என்ற தலைப்பில் உரையாற்றியமைதான் அவரின் இறுதி உரை எனப்படுகிறது. இதிலும் கூடுதல் நேரம் ஞானப்பள்ளுவைப் பற்றித்தான் சிறப்பாக உரையாற்றினார் என்று கூறுகின்றார்கள். சைவாபிமானியான பேராசிரியரின் தமிழ் அபிமானம் இதில் நன்கு தெரிகிறது.

**பிறபணிகள்**

பேராசிரியர் தமிழ், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம், இலத்தீன், பாளி, மலையாளம், தெலுங்கு, ஜேர்மன் போன்ற பல மொழிகளில் பயிற்சியுள்ளவர். இதனால் வெளிநாடுகள் பலவற்றில் நடைபெற்ற பல்வேறு மாநாடுகளிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் பெற்றார். இலங்கை வானொலியிலும் பல தடவைகள் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி தொடர்பாக இவரால் ஆற்றப்பட்ட உரைகளைக் கேட்டிருக்கிறோம். இவை பின்னர் கட்டுரை வடிவிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறே வண்ணை வைத்தீஸ்சுவர வித்தியாலயத்தில் இவரால் பண்டித பரீட்சையில் சித்தி பெற்றவர் களுக்கென நிகழ்த்தப் பெற்ற 'ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும் முறை' எனும் விரிவுரை பின்னர் 1963இல் நூலாக வெளிவந்தது.

இவற்றைவிட 'சைவநெறி' எனும் பாடம் க.பொ.சா.த இல் இடம் பெறப் பெரிதும் பாடுபட்டவர் இவரே என்று கூறப்படுகின்றது. அத்துடன் கல்வியமைச்சின் இந்து சமய பாட ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் 1980 - 1988 காலப்பகுதியில் இருந்துள்ளார். பேராசிரியர்களான கைலாசநாதக் குருக்கள் (1921 - 2000), வி.செல்வநாயகம் (1907 - 1973) ஆகியோருடன் இணைந்து இந்துநாகரிகபாடம் பல்கலைக்கழகத்தில் கற்பிக்கப்பட பெரிதும் பாடுபட்டார். இவரது முயற்சியாலேயே மொழியியல் பாடம் பல்கலைக்கழகக் கலைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**நிறைவுரை**

எமது மக்கள் மத்தியில் சிலர் பழமையினைக் கடுமையாக வற்புறுத்து பவர்களாகவும் பலர் புதுமை நாட்டமுடியவர்களாகவும் வாழ்ந்து வரும் சூழ்நிலையில் பழமையினைப் பற்றிக்கொண்டு புதுமையில் பயனுள்ள வற்றை ஏற்றுக்கொண்டு நமக்கு முன்னு தாரணமாக வாழ்ந்துகாட்டிய ஒருவராக பண்டிதர், பேராசிரியர், கலாநிதி ஆ.சதாசிவம் அவர்கள் காணப்படுகின்றார். "எழுத்தறியத் தீரும் இழிதகைமை" என்று தொடங்கும் பழம்பாடலுக்கேற்ப அவர் வாழ்வும் பணியும் அமைந்தமை நன்கு தெரிகின்றது. செந்தமிழ் மரபை அவர் கண்ணேபோற் போற்றிய மைக்குக் காரணம் எமது மொழியும் பண்பாடும் அழிந்துவிடக்கூடாது எனும் அக்கறையே எனலாம். நமது மொழி உலகளாவியரீதியில் பரந்து வாழும் எம் மக்களால் பல்வேறு விதமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் சூழலில் அதன் தனித்துவத்தைப்பேணப் பேராசிரியர் மேற்கொண்ட முன்னெடுப் புக்கள் இவரைத் 'தமிழ்க் காவலர்' ஆக்கியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ்

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள்
(பரிதிமாற் கலைஞர்)

தொன்றுதொட்டுத் தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளுடையதென்று பலரும் கூறுகின்றனர். அம் மூவகைப் பாகு பாடுகளின் இயல்புகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்.

இயற்றமிழென்பது தமிழர் யாவர் மாட்டும் பொதுமையின் இரு வகை வழக்கினும் இயங்குகின்ற வசனமுஞ் செய்யுளுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன் கண் இலக்கியங்களும் இலக்கணங்களுமாகிய யாவும் அடங்கு மென்க.

முற்காலத்துச் சங்கச்செய்யுட்களும் அவற்றின் உரைகளும், இடைக் காலத்துக் 'கம்பராமாயணம்' ஆகிய நூல்களும் அவற்றினுரைகளும், இக்காலத்து வெளிப்படும் செய்யுள் நூல்களும் ஆகிய யாவையும் இயற்றமிழாம். இவ்வியற்றமிழ், இசைத்தமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் முன்னர் தோன்றினமைபற்றி, இவ்விரண்டிற்கும் முன் வைக்கப்படுவதாயிற்று. அன்றியும் இயற்றமிழே இவ்விரண்டிற்கும் உயிரென விளங்குவது. இயற்றமிழின்றி இவ்விரண்டும் தனித்தியங்குவனவல்ல.

இசைத்தமிழென்பது, பண்ணொடு கலந்தும் தாளத்தொடு கூடியும் இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுக்களானும் கொடுந்தமிழ்ப் பாட்டுகளானும் இயன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களுமாகும் நூல்களின் தொகுதியாகும். இதன் கண் கீர்த்தனங்களும், வரிப்பாட்டுக்களும், சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி, தெம்மாங்கு முதலியனவும் அடங்குமென்க. இயற்றமிழின் கண் வழங்கும் சொற்களும் சொற்றொடர்களுமின்றி, இசைத்தமிழ் எங்ஙனம் இயங்க முடியும்? அன்றியும், இயற்றமிழ்ச் செய்யுட்கள் இசையெடுத்து தாளமறுத்துப் பாடப்படின், அவை இசைத்தமிழின் பாற்படும். இராகத் தொடுமட்டில் இயத்துப் பாடப்படும் பாடல்கள் இயற்றமிழின் பாற்பட்டனவாக மதிக்கப்படுமேயன்றிப் பிறிதன்று. தாளமும் உடன் கூடிய வழியே அவை இசைத்தமிழின் பாற்படுமென்க.

இவ்விசைத்தமிழ், நாடகத்தமிழுக்கு முன்னர் தோன்றினமை பற்றிமுன் வைக்கப்படுவதாயிற்று. அன்றியும் இவ்விசைத்தமிழே நாடகத்தமிழுக்குச் சிறப்பும் விளக்கமும் தந்து நிற்பதாம். இசைத்தமிழ் இல்வழி நாடகத் தமிழிற்கு இயக்கமில்லை. இயற்றமிழும் இசைத்தமிழும் கூடிய வழியே நாடகத்தமிழிற்குப் பிறக்கு மென்று கூறுவதே அமைவுடைத்தாம்.

இனி, இடைக்காலத் தொடக்கத்தில் தோன்றிய இசைத்தமிழிலக்கிய நூலாகிய மூவர் 'தேவாரங்களும்' தமிழிற்கே உரிய பண்ணும் திறனும் பயின்றனவாகி ஒளிர்கின்றன. அத்தேவாரங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட இசைத்தமிழிலக்கிய நூல்களில் வடமொழி இராக அமைப்பும் தாள அமைப்பு காணப்படுகின்றன. அதன்மேல் இற்றை நாள்களில் உலாவுறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியமும், இலக்கணமுமாகிய இசைத்தமிழ் நூல்களெல்லாம் 'மேளகர்த்தா' என்னும் வடநூலைத் தழுவியே அமைக்கப்பட்டிருக்கின்றன. சிற்சில நூல்கள் நாட்டிற்குரிய வடமொழிப் பரததாளங்களினும் ஏற்பட்டிருக்கின்றன. இசைத்தமிழின்கண் ஏற்பட்ட வடமொழிக் கலப்பு இவ்வளவுதான்.

பழைய இசைத்தமிழ் நூல்களுள் பெரும்பாலான இறந்துவிட்டன; இரண்டொன்று மட்டில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அவை தாமுஞ் சின்னாட்களில் வெளியிடப்படாவிடின், அழிந்துபடினும் படும்.

நாடகத்தமிழென்பது, கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய அவகாசம் இல்லாத வேலைக்காரர்களுக்கும், படிக்கத் தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது. அது கேட்போருக்கும், காண்போருக்கும் இன்பம் பயாவிடின், சாமானிய மக்கள் அதனை விரும்பிச் செல்லாராதலின், அஃது இன்பச் சுவையோடு இயல்வதாயிற்று. உலகத்தின் இயல்பினை உள்ளதை யுள்ளவாறே புனைந்து காட்டுவது நாடகத் தமிழேயன்றி வேறன்று. இயற்றமிழும் இசைத்தமிழும் சேர்ந்த வழியே நாடகத்தமிழ் பிறந்ததெனினும், நாடகத்தமிழுக்கு வேறு தனிப்பெருஞ் சிறப்பு உள்ளது. முன்னைய இரண்டும் கேள்வியின்பம் மட்டிலே பயப்பனவாய் நிற்கின்றன. இவை விரண்டனடியாகப் பிறந்த நாடகத்தமிழோ, கேள்வியின்பம் பயப்பதேயன்றிக் காட்சியின்பமும் உடன்பயக்கின்றது. இச்சிறப்புப் பற்றியே பிற நாடுகளிலுள்ள பிற பாஷைப் புலவர்கள் நாடகங்களை மிக்க மேன்மையுடையனவாக மதிக்கின்றார்கள்.

இத்துணைப் பெருமைவாய்ந்த நாடகத்தமிழின் தோற்றமென்ன? தமிழ்நாடகம் முதலில் உண்டானது மத விடயமாகவே என்பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங்களில் ஆடல், பாடல் இரண்டையும் சேர நிகழ்த்துவதினின்றும் உண்டாயிற்று. சில காலத்தின் பின்னர் கதை நடையான மனப் பாடங்களும் உடன் கூடின; அதன்மேல் முதற் பாடலாயுள்ள சம்பாஷணைகளும் அவற்றுடன் சேர்க்கப்பட்டன. பிற்பாடு நாடகத் தமிழ் 'வேதியல்' 'பொதுவியல்' என்ற இரு பிரிவினதாகி அரசர் களானும் ஏனையோரானும் ஆதரித்து வளர்க்கப்பட்டது.

நாடக சாலையை உலகத்தின் பிரதி விம்பமென்றெண்ணி ஆங்கு நடித்துக் காட்டப்படுபவற்றுள் தமக்கு வேண்டிய நற்பகுதிகளை மட்டில் ஏற்றுப் போவதே நன் மக்களியல்பு. உழைத்த உள்ளத்திற்கு இன்பந் தந்து ஊக்கம் விளைவிப்பன நாடகங்களே. சிற்சிலர் அறிவு திரிந்து வேறுபட்டாராயின், அஃது அவரது இயற்கைத் தன்மைகளுள் ஒன்றாமேயன்றி நாடகத்தால் விளைந்த செயற்கைத் தன்மையன்றாம். தவறுள்ள இடத்திலன்றே திருத்தம் வேண்டும்? புண்ணுள்ள இடத்திலன்றே சிகிச்சை செய்யப்படும்? மக்கள் சிலர் தமது தீக்குணத்தால் நாடக சாலை சென்றும் நாடகங்கள் படித்தும் கெட்டாராக அதனைக் காகதாலியமாய் நாடகத்தின் தலையிலேற்றி, நாடகத் தமிழே தீதென்று கடிதல் எவ்வாறு ஏற்புடைத்தகும்? இது நிற்க.

சென்ற சில ஆண்டுகளாக, நாடகத் தமிழ், அறிவுடையோர் சிலரது உதவி கொண்டு தலையெடுத்து வளரா நின்றது. இதற்கு வடமொழி நாடகப் பயிற்சியும் ஆங்கில நாடகப் பயிற்சியும் மிகப்பயன்படுவனவாயின. இவ்வாறு புது வழியிற் புனையப்பட்டு வெளிப்படும் நாடகங்கள் இன்னும் அதிகரித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய விமர்சனம்

**பாலசிங்கம் பாலகணேசன்**
இணைப்பாளர், காப்பாளர் - தமிழ் மன்றம்,
யாழ் தேசிய கல்வியற்கல்லூரி

யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் வரலாறு பற்றிய விமர்சனங்கள் பல வெளிவந்து கொண்டிருக்கும் இந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களாகிய எங்களுக்கு யாழ்ப்பாணத்துக் கடைசி மன்னன் சங்கிலியன் (செகராஜசேகரன்) உண்மை வரலாறு தெரியுமா? என்ற வினாவிற்கு ஆம் என விடைதருபவர்கள் எத்தனை பேர்? விரல்விட்டுக் கூட எண்ண முடியாத - எண்ணிக்கையைத் தந்துவிடும். எமது பிரதேசத்தை ஆட்சி செய்த மன்னன், அன்னியப் படைகளுக்கு எதிராகப் போராடிய மன்னன் தமிழ் மொழியையும் சைவசமயத்தையும் காப்பதற்கு அரும்பாடுபட்ட வீரன் எனத் தமிழ் வரலாறு திட்டமிட்டு எம்மிடம் இருந்து மறைக்கப்பட்டு உள்ளது. இவற்றுக்கு நாம் துணை போக முடியுமா? வெறுமனே பாரதியின் ' நடிப்பு சுதேசிகள்' போல் கோசம் இட்டு விட்டு அழியப்போகின்றோமா எனத் தீர்மானிக்க வேண்டும்.

இதுவரையில் இலங்கையில் புகழ்பூத்த பல்கலைக்கழகங்களின் மதிப்பு மிக்க வரலாற்றுத்துறை பேராசிரியர்களை நோக்கி எழுகின்றது எனது கேள்வி. உங்களில் யார் இந்த மண்ணை ஆண்ட சங்கிலிய மன்னனின் (1519 - 1560) உண்மை வரலாற்றை எழுதியுள்ளீர்கள்? ஒவ்வொரு ஈழத் தமிழனிடம் இருந்து எழும் இந்த வினாவிற்கு ஆம் பூரணமாக எழுதியுள்ளோம் என்று இம்மண்ணில் வாழ்கின்ற உங்களில் யார் பூரண விடை தரமுடியும்?. ஈழத்து மண்ணில் வாழ்கின்ற வரலாற்றுத் துறையினர் ஆகிய நீங்கள் ஆற்ற வேண்டிய பணி என்ன? தமிழன் வரலாறு திட்டமிட்டு மறைக்கப்படுகின்ற இக்காலங்களில் உண்மை வரலாறுகள் உங்கள் மூலமாக அடுத்த சந்ததிக்கு வர நீங்கள் ஆற்றிய பணிகள் என்ன? திட்டமிட்டு தமிழின வரலாறு அழிக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் வருகின்ற காலங்களில் மேன்மை தங்கிய பெரியோர்கள் ஆகிய நீங்கள் உண்மை வரலாற்றை அறியத்தருவது உங்களின் தலையாய பணி அல்லவா?. யாழ்ப்பாண இராச்சியம் பற்றிப் பல விடயங்கள் எழுதப்பட்டு வருகின்றன, ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் ஈழத்தின் புகழ்பூத்த மன்னன் வீரசங்கிலி (செகராஜசேகரன்) பற்றிய செய்திகளை இன்னும் எம்மவர்கள் அறியாமல் உள்ளார்கள்.

இந் நிலையில் எனது கட்டுரை யாழ்ப்பாண இராச்சியத்தின் வீரம் செறிந்த சங்கிலி மன்னன் (செகராஜ சேகரன்) பற்றியதாக அமைகின்றது. இன்னும் நல்லூர், கோப்பாய் போன்ற இடங்களில் சங்கிலி மன்னனின் அரண்மனை எச்ச சொச்சங்கள் இருந்த போதும் அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையான வரலாறு வெளிவராமலேயே உள்ளது. அக் காலத்தில் கோப்பாயின் இராசவீதி, கோப்பாய் கோட்டை பெரும்பாலும்அழிக்கப்பட்டு விட்டன. பெரும்பாலான காணி உறுதிகளின் காணிப் பெயர்கள், நல்லூரின் மந்திரிமனை, யமுனை ஏரி, பழைய நல்லூர் கோயிலின் இடிபாடுகள், கோட்டை எச்ச சொச்சங்கள், கோப்பாயின் குதியடிகுளம் (அரச மகளிர் நீராடிய இடம் யமுனா ஏரி போன்றது), கோப்பாய் கோட்டையின் எச்ச சொச்சங்கள் அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட சங்கிலி மன்னன் கால நாணையங்கள், இலக்கிய ஆதாரங்கள், போர்த்துக்கீச பாதிரிமாரின் குறிப்புகள், சங்கிலி மன்னன் சமகாலத்தில் வாழ்ந்த சிங்கள மன்னர்களின் சரித்திரங்கள், அவனுடன் சேர்ந்து போர்த்துக்கேயரை எதிர்த்த சிங்கள மன்னர்கள் விதிய பண்டாரா வரலாறு, மாயதுன்னை, சிங்களமொழி வரலாற்று நூல்கள் இவை யாவும் இன்னும் காணக் கூடிய வரலாற்று மூலாதாரங்கள். இந்த நிலையில் கி.பி 1736ஆம் ஆண்டு வெளிவந்த மாதகல் மயில்வாகனப்புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை கூட யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த ஒல்லாந்த அதிகாரிகளின் வேண்டுதலுக்கிணங்கியே எழுதப்பட்டது. மேலும், 'யாழ்ப்பாண வைபவமாலையை" எழுதும் போது சங்கிலி மன்னன் வாழ்ந்து கிட்டத்தட்ட 200 வருடங்கள் கடந்து விட்டன. மேற்படி கருத்துக்கு ஆதாரமாகப் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் எழுதிய ஈழத்து இலக்கியமும் வரலாறும் என்ற நூலின் கருத்துக்களை இங்கே நோக்குதல் பொருந்தும்.

"மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலையை எழுதினார் என்பதை அந்நூலின் பாயிரச் செய்யுள் மூலமாக அறியமுடிகின்றது. அவர் வையாபுரி ஐயரின் மரபில் வந்தவர் என்பது ஒரு ஐதீகம். யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த ஒல்லாந்த அதிகாரிகளின் வேண்டுதலுக்கு இணங்கியே "யாழ்ப்பாண வைபவமாலை " எழுதப்பெற்றது. மேக்கரன் என்ற ஒல்லாந்த அதிபரின் வேண்டுகோளின் விளைவாகவே தாம் நூலை எழுதியதாகவும் மயில்வாகனப் புலவர் கூறியுள்ளார். கி. பி 1737ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்திலே கொம்மாந்தராக (Commandeur) விருந்த இயன் மக்கிராவையே மயில்வாகனப் புலவர் மேக்கரன் எனக் குறிப்பிட்டார் என சிலர் கருதுகின்றனர். மேலும் இக் கருத்தின் அடிப்படையில் யாழ்ப்பாண வைபவமாலை 18ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியிலே எழுதப்பட்டதென்று கொள்ளப்படுகின்றது. யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிவதில் மரபுவழியான நிர்வாக முறையினை ஒல்லாந்த அதிகாரிகள் பின்பற்றியதால் யாழ்ப்பாணத் தமிழரின் வரலாறு சமுதாய வழமைகள் ஆகியவற்றைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்ளவேண்டி இருந்தது. அத்தேவையின் காரணமாகவே "யாழ்ப்பாண வைபவ மாலை" எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

இதிலிருந்து யாழ்ப்பாண வைபவமாலை தமிழ் மக்கள் தங்கள் வரலாறு அறியவேண்டும் எனும் நோக்குடன் முதன்மைப்படவில்லை. யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஒல்லாந்தர்கள் தங்கள் ஆட்சி நிர்வாகத்தை வெற்றிகரமாகச் செய்வதற்காகவே தோற்றம் பெற்றது என்பதை அறியமுடிகின்றது.

இக் கருத்தை ஆதரிப்பதாக முன்னாள் யாழ் வரலாற்றுக்கழக இணைச்செயலாளர் வே.க. நடராசா என்பவர் தனது பண்டய இலங்கை என்னும் நூலில் பின்வருமாறு கருத்துக்களை பதிவு செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாழ்ப்பாண அரசின் தோற்றம் தமிழ்க்குடிகள் வடஇலங்கையில் நெடுங்காலம் வாழ்ந்து வந்தமைபற்றி நாம் துணிவதற்கு நமது ஆதாரங்களில் பலகுறிப்புக்கள் உள்ளபோதும் வட பகுதியில் ஒரு தமிழ் அரசு தோன்றிய காலத்தை அறுதியிட்டுக் கூறுவதற்குப் போதிய சான்றுகள் எமக்கில்லை. யாழ்ப்பாண வைபவமாலை, கைலாய மாலைவையா பாடல், கைலாச புராணம் போன்ற ஆதாரங்களில் உள்ள மரபுகளில் பொதிந்து உள்ள செய்திகளை வரலாற்று ஆசிரியர்களுக்கு வேண்டிய பக்குவத்துடன் நடுநிலை நின்று ஆய்ந்து உண்மைகளை நிறுவும்பணியில்போதிய அளவு அறிஞர்கள் ஈடுபடவில்லை. (இப்பணியில் இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை அறிஞர் ஒருவர் ஈடுபட்டுள்ளமை போற்றுதற்குரியது. அவருடைய ஆராய்ச்சி முடிவுகள் விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது) சுமார் அரை நூற்றாண்டுக்கு முன், யாழ்ப்பாண வரலாற்றை ஆராய்ச்சி முறையில் அணுகித் தம் முடிவுகளை நூல்கள் வடிவில்தந்த முதலியார் செ.இராசநாயகம், நல்லூர் வண சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோரின் அரிய முயற்சிகள் இத்துறையில் முன்னோடிகளாக அமைந்தன. ஏறத்தாழ இவர்கள் கொண்டிருந்த முடிவுகளைத் தழுவி அண்மைகாலத்தில் வித்திய ரத்தினம், சி.எஸ்.நவரத்தினம் (Tamils & ceylon) கூ.நடேசன் (The Northern Kingdom in Univ. of cey: voi. I. pt. II) டாக்டர்கே.கே. பிள்ளை (The Jaffna Kingdom ch. 1x of South india & ceylon) போன்றவர்கள் யாழ்ப்பாண அரசின் வரலாற்றைப் பற்றி எழுதியுள்ளனர். தகுதிவாய்ந்த அறிஞர்களாக இவர்கள் இருப்பினும் இவர்களின் கருத்துக்கள் பொதுவான வரவேற்பை பெறத் தவறி இருப்பதை நாம் இங்கே குறிப்பிட வேண்டும். புதிய ஆய்வுகள் நடைபெற்று பொதுவான வரவேற்பைப் பெறத்தக்க முடிவுகள் வெளிவருமாயின், இப்பகுதியின் வரலாறு அதிக தெளிவைப் பெறுமென எதிர்பார்க்கலாம். (பக் 395) (பண்டைய இலங்கை வே.க.நடேசன் 2016)

மேலும் யாழ்ப்பாண வைபவ மாலையின் மூலாதாரங்கள் என நோக்கும் போது வையாடல், கைலாய மாலை, இராசமுறைமை, பரராசசேகரன் உலா, எனும் நான்கு நூல்களையும் ஆதாரமாகக் கொண்ட தாம் யாழ்ப்பாண வைபவமாலையை எழுதியதாக மயில்வாகனப்புலவர், தனது நூலின் பாயிரத்திலே கூறுகின்றார். முன்னைய இரண்டு நூல்கள் தற்போதும் ஆதாரத்துடன் கிடைக்கின்றன. இராசமுறைமை, பரராசசேகரன் உலா ஆகிய இரண்டும் தற்போது கிடைத்தில. எனவே அவை பற்றி கருத்து தெரிவிப்பது கடினம். கைலாயமாலை 17ஆம் நூற்றாண்டிலே எழுதப்பட்டது எனவும் கூறப்படுகின்றது. ஆனால் வையாபாடல், கி.பி 1519 இல் இருந்து கி.பி 1561 வரை வாழ்ந்த வையாபுரி ஐயர் எழுதினார். இவர் செகராஜசேகரன் காலத்தில் (சங்கிலி) வாழ்ந்தவர். இதில் வன்னிப்பிரதேசத்தில் வன்னிப் பிரதானிகளின் ஆட்சி ஏற்படுத்தியமை பற்றியே குறிப்பிடப் பட்டுள்ளது. இவற்றை மாத்திரம் கொண்டு தமிழ் மன்னர்களின் வரலாறு எழுதப்பட்டதில் பல குறைபாடுகள் இன்னும் வரலாற்று அறிஞர்களினால் சுட்டிக்காட்டப் படுகின்றன. அந்த வகையில் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின், ஜே. க. நடராசன் அவர்களின் யாழ்ப்பாண வைபவமாலை மூலாதா ரங்கள் பற்றிய கூற்றுக்கள் குறிப்பிடத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யாழ்ப்பாண வைபவமாலையின் குறைபாடுகள் பெரும்பாலும் அதன் மூல நூல்களில் இருந்தே வந்துள்ளன. மயில்வாகனப் புலவரும் கால வரையறை பற்றித் தெளிவான விளக்கம் கொண்டு இருக்காதமையினாலே வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவற்றின் காலவரையறை மாற்றியுள்ளார்...." என்பது முன்னர் காட்டிய மேற்கோல்களில் இருந்து தெரிய வருகின்றது.

*18 ஆம் நுற்றாண்டில் எழுதப்பட்ட (மயில்வாகனப் புலவரின்) யாழ்ப்பாண வைபவமாலையில் யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றி வரும்...... யாழ்ப்பாண வைபவமாலை முதலான நூல்களில் வரும் செய்திகள் கட்டாயமாக உண்மை நிகழ்ச்சிகளையே குறிப்பன எனவும் உறுதி கூறமுடியாது. ஒன்றுக் கொன்று முரணான செய்திகளையும், தெளிவாக அறியப்பட்டவற்றையும் தவறுதலாகவே சில இடங்களில் அந்நூல்கள் கொண்டிருப்பதாலும் அவற்றை முற்றாக நம்பி யாழ்ப்பாண அரசின் வரலாற்றை எழுதுதல் வரலாற்று ஆசிரியர்களுக்கு முறையாகாது............ (பக்கம் 395 வே.க நடராசா 2016)*

மேற்படி நான்கு நூல்களில் தற்போது கிடக்கும் வையாபாடல், கைலாயமாலையில் இல்லாத செய்திகளும் யாழ்ப்பாண வைபவமாலையில் வருவதால் அவற்றை ஆதாரம் அற்ற ஐதீகக் கதைகள் உள்ளன. இவை கூறும் வரலாறு ஏனைய மொழி வரலாற்று நூலுடன் ஒப்பிடும் போது முரண்பாடுகள் நிறைந்ததே என்றே எண்ண வேண்டி உள்ளன. எனவே அக்காலத்தில் கி.பி 1736ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் தமது தேவைக்காக எழுதுவித்த யாழ்ப்பாண வைபவமாலை மூலாதாரம் பற்றிய தனது கட்டுரையில் பேராசிரியர் சி.பத்மநாதனின் கூற்றும் திரு. வே. க. நடராசன் கூற்றும் இங்கே நோக்கத்தக்கது.

*'கி.பி 1467 - 1619 ஆகிய காலப் பகுதியிலே ஆட்சிபுரிந்த அரசர்களைப் பற்றி மயில்வாகனப்புலவர் எழுதியுள்ள வரலாறு மிகவும் சுருக்கமானது. அத்துடன் பெரும்பாலும் ஆதாரமற்றது. அக்கால யாழ்ப்பாண வரலாறு பற்றி மயில்வாகனப் புலவர் எழுதியவற்றுக்குப் பொதுசன வழக்கில் உள்ள கதைகளே ஆதாரமாயிருந்தன. போர்த்துக்கேயரது ஆவணங்கள் நூல்கள் ஆகியவற்றிலிருந்தும் ஒல்லாந்த அதிகாரிகள் எழுதிவைத்த அறிக்கையில் இருந்தும் ஓரளவு விரிவாக யாழ்ப்பாண வரலாற்றை அறிந்து கொள்ளலாம்."*

*........ யாழ்ப்பாண வைபவமாலை முதலான ஆதாரங்களில் வரும் செய்திகளை அறிஞர்கள், ஆராய்ந்து கொள்ளத்தக்கவற்றைத் தெளிவுபடுத்தியுள்ளனர். ஒரு அரசனுடைய காலத்து நிகழ்ச்சிகளை இன்னோர் அரசன் காலத்தவையாகத் தவறாக ஆதாரங்கள் குறிப்பிட்டு இருத்தலை நடேசன் அறிஞர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். முதல் ஆரியச் சக்கரவர்த்தியான கூழங்கைச் சக்கரவர்த்தி (சிங்கையாரியன் 1215-1245) பற்றி வைபவமாலையில் உள்ள செய்திகள் உண்மையில் முந்திய மன்னர்கள் காலத்துக்கு உரியவையாகும்........"*
*(பண்டைய இலங்கை வே.க.நடேசன் 2016 பக். 401)*

எனவே இன்றைய மாணவனின், இளம் சமுதாயத்தினரின் கேள்வி என்னவெனில் யாழ்ப்பாண இராச்சியத்தில் உள்ள மன்னர்களின் வரலாற்றை அறிய உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த நூல்கள் எவை? அவை ஆய்வுகள் பற்றி அறிய உதவும் சிறந்த ஆய்வுகள் எவை? எந்த வரலாற்று அறிஞர்கள் யாழ்ப்பாண மன்னர்கள் பற்றிய வரலாற்றை ஓரளவு திருப்திகரமாக ஆய்வு செய்து எழுதியுள்ளார்கள்? இந்தக் கேள்விகளுக்குத் தமிழ் அறிஞர்கள் எவராலும் பதில் கூற முடியாது உள்ளது. இந்த நிலைக்குக் காரணம் என்ன எனக் கண்டு ஆராய்ந்து திருத்தமான வரலாற்றைக் கொண்டு வருவதே தமிழ் அன்னைக்கு நாம் செய்யும் தொண்டு ஆகும்.

யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் காலம், ஈழத்தமிழ் மக்களின் வரலாறு, இலங்கைத் தமிழ் மக்களின் வரலாறு தொடர்பாக ஆய்வு செய்த ஆசிரியர்கள் வரலாற்று மூலாதாரங்களைக் கொண்டு பல விடயங்களை முன்வைத்த போதும், இடைக்கால யாழ்ப்பாண மன்னர்கள் மட்டும் அல்ல, யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளுக்கும் முற்பட்ட கால வரலாறுகளும் போதிய ஆதாரங்களுடன் நம்பத்தக்க முறையில் உண்மை வரலாற்று செய்திகளை முன்வைப்பதில் தவறியுள்ளனர். அவர்கள் அவ்வாறு தவறுவதற்கு நிறைவான பல காரணங்கள் காணப்பட்ட போதும் எவ்வளவு தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும் ஒரு வரலாற்று ஆசிரியர் உண்மை வரலாற்றை வெளிக்கொணருவதில் தயக்கம் காட்டக்கூடாது. பெரும்பான்மையான வரலாற்று ஆசிரியர்கள், வையாபாடல், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, கோணேசர் கல்வெட்டு செகராஜசேகரம், செகராஜசேகரமாலை, திருக்கரைசப்புராணம், வெருகல் சித்திவேலாயுதர் காதல் போன்ற மூலாதாரங்களை தமது வரலாற்று ஆய்வுக்குப் பயன்படுத்திய போதும் நிறுதிட்டமாக வரலாற்று செய்திகளைக் கூறுவதில் தவறிவிட்டனர் என்றே கூறவேண்டும். இதன் கருத்து இந்த நிகழ்ச்சி இன்ன நோக்கத்திற்காக, இன்ன ஆண்டு, இங்கு நிகழ்ந்தது. இதற்கு இது ஆதாரம் என்பன அவர்கள் கூறும் வரலாற்று , செய்தியில் அமைத்து காணப்பட வேண்டும். 'சாசனவியல், கல்வெட்டுக்கள், அகழ்வுப்பொருட்கள், நாணயங்கள் போன்றன மூலம் ஈழத்தமிழ் வரலாறு தொன்மையானது என நிறுவுவதில் வெற்றிகண்ட வரலாற்றுத்துறை பேராசிரியர்கள், இடைப்பட்ட காலத் தமிழர் வரலாற்றை ஆராய்வதில் ஆர்வம் அற்று இருப்பார்களோ என எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் இன்றைய காலங்களில் வரலாற்றை அறிய நவீன சாதனங்களும், முறைகளும் உலகின் புதிய வரலாறுகளைத் தந்து கொண்டு இருக்க அவற்றைப் பயன்படுத்தி, யாழ்ப்பாண அரசுடனும் 'அதற்கு முந்திய தமிழ் மக்களுடன் தொடர்புபட்ட ஏனைய இனத்தவர்களின் வரலாற்று நூல்கள், இலக்கியங்கள் ஆகியவற்றைக் கொண்டு ஆராய்ந்து தமிழ் மக்களின் வரலாற்றைக் கூறும் போக்குக் குறைவாகவே காணப்படுகின்றது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கல்வெட்டு, தமிழ்ப்பிராமி எழுத்துக்கள், நாணயங்கள் , மட்பாண்டங்கள், ஆபரணங்கள், வழிபாட்டுக்கு உரிய பொருட்களைக் கண்டறிந்து எமது இனத்தின் மூலாதாரத்தை இருப்பு உறுதிப்படுத்த வேண்டியது அவசியமானது. அவற்றினை ஆய்விற்கும் மூலாதாரம் கொடுக்கவேண்டும். ஆனால் தற்காலத்தில் இலங்கையில் உள்ள சமூக அரசியல் பொருளாதார புறக்காரணிகள் பலவற்றுக்கு ஆய்வாளர்கள் அச்சப்படுவது போன்று உள்ளது. இந்த நிலையில் அதிகாரத்தில் உள்ளவர்களும், தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வலர்களும் இடைக்கால மன்னர்கள் பற்றிய ஆய்வுகளுக்கு ஆர்வமூட்ட வேண்டும். பெருந் தொகையான பணத்தைக் கேளிக்கைகளுக்குச் செலவிடும் மக்களும், அதிகாரத்தில் உள்ள மாகாணசபை உள்ளூராட்சிசபை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களும் இதுபோன்ற ஆய்வுகளுக்கு ஒரு நிதியத்தை உருவாக்கி ஆய்வாளரை ஊக்கப்படுத்துவதன் மூலம் மறைந்து கிடக்கின்ற பல வரலாற்று உண்மைகள் வெளிவரும்.

அந்த உண்மைகள் வெளிவரும்போது எமது எதிர்கால சந்ததிக்கு எமது அடையாளம் வெளித் தெரியும். அதன் மூலம் தமிழ் மக்கள் தங்கள் தொப்புள் கொடி உறவுகளை அறிந்து எல்லோரும் ஒன்று சேர்ந்து தமிழ் மொழிக்காகவும் தமிழ் மண்ணுக்காகவும் பாடுபட்டு உழைக்க ஆரம்பிப்பார்கள். ஆகவே, உண்மை வரலாற்றை வெளிக்கொண்டு வருவது ஒவ்வொரு தமிழ் மக்களின் கடமையாகும்.

**உசாத்துணைகள்**


1. கிருஷ்ணராசா, செ. (2005) இலங்கை வரலாறு, பகம் 1, பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம்.
2. பத்மநாதன், சி. (2004) ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் பதிப்பகம், கொழும்பு.
3. புஸ்பரட்ணம் ப 2017 இலங்கைத் தமிழர் ஒரு சுருக்க வரலாறு உமா பதிப்பகம் மலேசியா.
4. மயில்வாகனப்புலவர் (பதிப்பாசிரியர்) குலசபாநாதன் (1995) இந்து கலாசார அமைச்சுக்கள் திணைக்களம், கொழும்பு
5. பதிப்பு வடிவேல் இ (1993) கோணசர் கல்வெட்டு, இந்து கலாசார திணைக்களம் கொழும்பு.
6. முத்துக்கவிராசர் ஐம்புலிங்கம் செ. வை (1938) கைலாய மாலை சென்னை.
7. நடராசா வே. க. (2016) பண்டைய இலங்கை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி 1505 - கி.பி 1658 ) வீரசங்கிலியின் காலம் (யாழ்ப்பாணம் அரசன் செகராஜ சேகரன்) ஒரு முழுமையான வரலாறு கி.மு 300 - கி.பி 2000)

**கலாநிதி மு. குணசிங்கம்**

இக்காலகட்டத்தில் கோட்டை அரசில் போர்த்துக்கீசரின் மேலாண்மை நிலை நிறுத்தப்பட்டிருந்தது. அத்தோடு, யாழ்ப்பாண இராச்சியத்தைத் தனதாக்கித் தந்தால், போர்த்துக்கீசர் தரவேண்டிய நிலுவையிலுள்ள கடன்களை இரத்துச் செய்வதாகவும், மேலும் 400 குவின்ரல்கள் (Quintals) கறுவா வருடந்தோறும் மேலதிகமாகத் தருவதாகவும் கோட்டை மன்னன் புவனேகபாகு போர்த்துக்கீசருக்கு வாக்குறுதி அளித்தான்.

இவ்வேளையில் புவனேகபாகுவின் மகன்களில் ஒருவன் கத்தோலிக்க மதத்தைத் தழுவியதுடன் தனது பெயரையும் டொன் லூயிஸ் (னுடிே டுடிரளை)எனக் கிறிஸ்தவப் பெயராக மாற்றினான். அத்தோடு கோட்டை இராச்சியத்தின் கீழ் உள்ள மக்களையும் கிறிஸ்தவர்களாக மாற்றுவதாகவும் போர்த்துக்கீசருக்கு உறுதியளித்திருக்கின்றான்.

மேற்படி நிகழ்ச்சிகள் யாழ்ப்பாணத்திலும் சில தாக்கங்களை ஏற்படுத்தின. சங்கிலி மன்னனின் ஆட்சியை விரும்பாதவர்களுக்கும் யாழ்ப்பாண அரசுரிமை பெற விரும்பியவர்களுக்கும் கோட்டையில் நடந்த நிகழ்வுகள் ஊக்கத்தை அளித்திருக்க வேண்டும். ஏற்கனவே மன்னாரில் நடந்தவைகளையெல்லாம் மறந்து, மேற்படி அதிருப்தியாளர்கள் தமது சுயலாபத்திற்காக நாட்டைப் போர்த்துக்கீசரிடம் விலை பேசத் தலைப்பட்டனர்.

குறிப்பாக சங்கிலியின் மூத்த சகோதரனான பரருநிபசிங்கன் அரசுரிமை பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் போர்த்துக்கீசருடைய உதவியை நாடியதுடன், தன்னைக் கத்தோலிக்க மதத்திற்கும் மாற்றிக்கொண்டான். ஆனால் போர்த்துக்கீசரினால் பரநிருபசிங்கனுக்கு யாழ்ப்பாண அரசைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை.

மேலும், சீதாவாக்கை மன்னன் மாயதுன்னை போர்த்துக்கீசருக்கு எதிராகப் படையெடுப்பதற்காக தென்னிந்தியாவிலிருந்து படைகளை வரவழைத்தபோது, அப்படைகளை யாழ்ப்பாணத்திற்கூடாகச் செல்ல சங்கிலி மன்னன் உதவியளித்தான். அத்தோடு சங்கிலி மன்னன் மாயாதுன்னையுடன் இணைந்து போர்த்துக்கீசரை ஆதரித்த புவனேகபாகுவிற்கு எதிராக 1545 களில் போரிட்டான்.

அத்தோடு, திருகோணமலையில் ஆட்சிசெய்த வன்னியன் 1551இல் இறக்க, அடுத்து அரசுரிமை பெறவேண்டியவன் வயதில் இளையவனாக இருந்த காரணத்தினால், வேறு ஒரு வன்னியன் ஆட்சி பீடம் ஏறினான். ஆனால், திருகோணமலை அரசுரிமை யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசுக்கு உரியதெனச் சங்கிலியன் அதில் தலையிட்டான்.

இவ் வேளையில் வன்னியன் கத்தோலிக்கனாக மாறிய போர்த்துக்கீசரின் உதவியைப் பெற்று அரச கட்டில் ஏற முனைந்தான். ஆனால் சங்கிலியால் தடுத்து நிறுத்தப்பட்டது. தொடர்ந்தும் சங்கிலி போர்த்துக்கீசருக்கு எதிராக வலிமையுடன் செயற்பட்டான். போர்த்துக்கீசருக்கு எதிரானவர்களுடன் நட்புறவு கொள்ளவும் அவன் பின்னிற்கவில்லை.

1552 இல் கோட்டை மன்னன் புவனேகபாகு இறக்க, அவனுடைய உறவினனான தர்மபாலன் அரசனானான். தர்மபாலனின் தந்தையான விதியபண்டார என்பவன் போர்த்துக்கீசரைப் பகைத்துக் கொண்டு, புத்த தந்ததாதுவையும் எடுத்துக் கொண்டு சங்கிலியிடம் அடைக்கலம் புகுந்தான். சங்கிலியுடன் இணைந்து போர்த்துக்கீசருக்கு எதிராக விதிய பண்டார யாழ்ப்பாண இராச்சியத்தில் இருந்து கொண்டு போரிட்டான்.

மேற்படி நிகழ்வுகள் போர்த்துக் கீசரை ஆத்திரத்துக்கு உள்ளாக்கியிருக்கும். இருந்தும் போர்த்துக்கீசர் 1560 கள் வரை சங்கிலிக்கு எதிராகப் போர் தொடுக்கவில்லை. ஆனால், 1560 களில் போர்த்துக்கீசர் சங்கிலி மன்னனுக்கு எதிராகப் போர் தொடங்குவதற்கு ஒருசில உடனடிக் காரணங்கள் இருப்பதை அறியமுடிகின்றது. இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் ஏற்கனவே கிறிஸ்தவர்களாக ஆக்கப்பட்ட மீனவர் சமூகத்தின் மீதும், மிஷனரிகள் மீதும், அப் பிரதேசத்தில் அதிகாரத்திலிருந்த, இந்து மதத்தைச் சார்ந்த வடுகப் படையினர் தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் நடத்தினர். புன்னாலைக்காயவில் இருந்த போர்த்துக்கீசப் பாதுகாப்பு அரணியிலுள்ள போர்த்துக்கீசப் படைகளால், அவ்வாறான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அத்தோடு, ஏற்கனவே மன்னாரில் இருந்தது கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்ட நிகழ்வும் மேற்படி தாக்குதல் அச்சுறுத்தல்களை அதிகரிக்கவிடாது தடுக்க வேண்டும் என்று போர்த்துக்கல் அரசு முடிவெடுத்தது.

இதன் முடிவாக 1558 இல், இந்தியாவில் வைஸ்றோயாக இருந்த கொன்ஸ்தந்திநோத பிரகன்சா(Dom Constantino de Bragnza) விற்கு போர்த்துக்கீச அரசிடமிருந்து கட்டளை அனுப்பி வைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்குள்ள கிறிஸ்தவ கத்தோலிக்கர்களை அமைதியான முறையில் வாழ வழி செய்யும் படியும், இந்தியாவின் மேற்குக் கரையோரத்திலுள்ள வடுகப் படைகளை அடக்கி, அங்குள்ள கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களையும் தீர்த்து வைக்கும்படியும் அக் கட்டளையிற் குறிப்பிட்டிருந்தது.

இந்தக் கட்டளை கிடைக்கப்பெற்ற கொன்ஸ்தாந்திநோ பிரகன்சா துரிதமாக படையெடுப்பு ஆயத்தங்களை கோவாவில் மேற்கொண்ட வேளை, 1560 இல் வடுகப் படையினர் புன்னகாயவில் உள்ள போர்த்துக்கீசரின் கோட்டையைத் தாக்கி அழித்தனர்.

இதன் உடன் விளைவாக, 07 புரட்டாதி 1560 இல் கொன்ஸ்தாந்திநோ பிரகன்சா 1200 பேர் கொண்ட பாரிய கடற்படை ஒன்றை யாழ்ப்பாணம் நோக்கி நகர்த்தினான். போர்த்துக்கீசப் படைகள் ஐப்பசி 1560 இல் யாழ்ப்பாணத்தில், கொழும்புத்துறையை வந்தடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்துக்கீச ஆக்கிரமிப்புப் படைகள் மறுநாட் காலை நல்லூர் இராசதானியை நோக்கிநகர்ந்தன. சங்கிலி மன்னனின் தளபதி போர்த்துக்கீசப் படைகளுக்கு எதிராகத் தமது தமிழ்படைகளை வழிநடத்திக் கடுமையான சமரில் ஈடுபட்டான். ஆனால், போர்த்துக்கீசப் படைகள் அளவிற் குறைவாக இருந்தபோதிலும், அவர்களின் துப்பாக்கிகளின் முன்னால் தமிழ்ப்படைகள் கத்தி, வாள்களுடன் நின்று சமர் புரியவேண்டிய ஒரு நிலையில் போர்த்துக்கீசப் படைகளை வெல்லமுடியவில்லை.

சங்கிலி மன்னன் பாதுகாப்புக் கருதி கோப்பாயிலுள்ள தனது கோட்டைக்குப் பின்வாங்கினான். போர்த்துக்கீசர் நல்லூர் இராசதானியைக் கைப்பற்றி அங்குள்ள செல்வங்களையெல்லாம் சூறையாடினர். கோட்டை மன்னன் தர்மபாலனின் தந்தை விதியபபண்டார சங்கிலி மன்னனிடம் அடைக்கலமாக வைத்த செல்வங்களும், புத்த தாதும் போர்த்துகீசர் வசமாயின.

கோப்பாயை நோக்கிப் பின் வாங்கிய சங்கிலி மன்னன், போர்துக்கீசருக்குத் தன்னைக் காட்டிக்கொடுக்க முனைந்த பல தமிழர்களையும் கொலை செய்யத் தவறவில்லை. போர்த்துக்கீசப் படைகள் நல்லூரிலிருந்து கோப்பாயை நோக்கிச் சங்கிலி மன்னனைப் பின் தொடர்ந்தன.

சங்கிலி கோப்பாயிலிருந்து பச்சிலைப் பள்ளிவரை பின்வாங்கினான். சங்கிலி இவ்வாறு பின் வாங்கியதற்கான காரணம், போர்த்துக்கீசரை எப்படியாவது மீண்டும் அங்கிருந்து துரத்த வேண்டுமென்ற நோக்கமாக இருக்கலாம். எது எவ்வாறாயிருப்பினும் போர்த்துக்கீசப் படைகளினால் சங்கிலி மன்னனைத் தோற்கடிக்க முடியவில்லை.

சங்கிலி, பாதுகாப்பற்ற நிலைமைகளை விளக்கிக் கொண்டதன் விளைவாக போர்த்துக்கீசருடன் சமாதான உடன்படிக்கை செய் முடிவு செய்தான். அதே வேளையில் போர்த்துக்கீசர் நிலைமயும் மிக நெருக்கடிக்கு உள்ளானதாக இருந்தமையையும் அறிய முடிகின்றது. அவர்கள் கப்பலில் கொண்டு வந்த உணவுப் பண்டங்கள், வெடி பொருட்கள் என்பன இப் போரின் போது தீர்ந்து விட்டிருந்தன.

சங்கிலி நல்லூரிலிருந்து கோப்பாய்க்குப் பின்வாங்கும்போதே நல்லூர் இராசதானியிலிருந்த உணவுக் களஞ்சியத்தைத் தீக்கிரையாக்கி விட்டுச் சென்றான். இதனால் போர்த்துக்கீசப் படைகளுக்குப்பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பலர் நோய்வாய்ப்பட்டனர். இந் நிலையில் தளபதி கொன்ஸ் தாந்தினோத பிரகன்சா தனது லிஸ்பன் பயணத்த மேற்கொள்வதற்காக கோாவவிற்குச் சென்று, அங்கிருந்து புறப்படத் தயாராக இருந்த கப்பலை உரிய நேரத்தில் அடையவேண்டியும் இருந்தது.

இதனால் அவன் பேற்கொண்டு போர்புரிவதை நிறுத்திச் சங்கிலி மன்னனுடன் பேசி மிகக் கடுமையான உடன்படிக்கை ஒன்றிற்கு சங்கிலியை உடன்பட வைத்தான். அந்த உடன்படிக்கை பின்வருமாறு காணப்படுகின்றது.

யாழ்ப்பாண இராச்சியம் சங்கிலி மன்னனால் அல்லது அவனது மகனால் தொடர்ந்து ஆட்சி செய்யப்படலாம். ஆனால் தீவுப் பகுதியும், மேற்குக் கரையோரங்களும் போர்த்துக்கீசரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும். யாழ்ப்பாண மன்னன் எந்தவொரு துப்பாக்கி முதலிய வெடிக்கும் போர்க்கருவிகளையும் பாவிக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுப் படைகளை அழைப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்படும். போர்த்துக்கீசப் பாதுகாப்புப் படைகளை உள்நாட்டில் அனுமதிக்க வேண்டும். சங்கிலி மன்னன் 100,000 பாதோஸ் பெறுமதியான தங்கமும், விதி பண்டாரவின் செல்வங்கள் அனைத்தையும் உடனடியாகப் போர்த்துக்குசத் தளபதியிடம் கைளிக்க வேண்டும். வருடாவருடம் 10 யானைகள் கப்பமாக போர்த்துக்கீசருக்கு வழங்கப்பட வேண்டும்.

உள்ளூர் மக்களைக் கத்தோலிக்க மதத்திற்கு எதுவிதத் தடைகளுமின்றி அனுமதிக்க வேண்டும். ஆனால் அவர்களிடமிருந்து வரிகளை யாழ்ப்பாண இராச்சிய இளவரசனும் இரண்டு முதலியார்மார்களும் பிணைக் கைதிகளாக போர்த்துக்கீசருக்கு வழங்கப்பட வேண்டும்.

சங்கிலி மன்னன் மேற்படி உடன் படிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையிலேயே காணப்பட்டான். ஆனால், இவ் உடன்படிக்கையை அப் போதைய நிலைமையில் ஏற்று போர்த்துக்கீசப் படைகள் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்றவுடன், பின்னர் மேற்படி உடன்படிக்கையை அலட்சியம்செய்யலாம் எனச் சங்கிலி எண்ணியதன் விளைவாகவே இக் கடுமையான நிபந்தனைகளுக்கு அவன் ஒத்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஏனெனில் இவ் உடன்படிக்கையை அடுத்து நடைபெற்ற சம்பவங்கள் இதனையே எடுத்துக் காட்டுவனவாக அமைகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்தே போர்த்துக்கீசப் படைகள் தமிழ் மக்களுடைய வீடுகளை ஆக்கிரமித்து, அங்கிருந்த செல்வங்களையும், பொருட்களையும், உணவுப் பண்டங்களையும் அபகரித்தன.

சைவ மக்கள் புனிதமாகக் கருதும் பசுக்களைக் கொன்று உண்டனர். சைவமக்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தினைத் தழுவ வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினார்கள். எல்லாவற்றிகும் அமலாக, போர்த்துக்கீச மிஷனரிகளும் படையினரும் சைவக் கோவில்களைச் சூறையாடி, அங்குள்ள மதிப்பற்ற தங்கம் மற்றும் பொருட்கள் எல்லாவற்றையும் வசப்படுத்தினர். கோவில்களில் ஏட்டுச்சுவடிகள் எல்லாவற்றையும் எரியூட்டி அழித்தனர்.

இவ்வாறான அழிவுகளை ஏற்படுத்திய போர்த்துக்கீச மிஷனரிமார்களையும். போர்வீரர்களையும் மேற்கொண்டு பொறுத்துக் கொண்டிருக்க முடியாது தமிழ் மக்கள் போர்த்துக்கீச பாதிரிமார்கள் சிலரையும், பல போர்வீரர்களையும் கொலை செய்தனர். அதே வேளையில் பிரகன்சாவுடன் சேர்ந்து யாழ்ப்பாணம் வந்த டொம் ஜோஜ் த ரெமுடே (Dom Jorage de Temudo) என்ற கொச்சின் பிசப்பும், பல போர்த்துக்கீசப் படையினரும் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாண மக்கள் மேலும் கிளர்ந்து எழுந்தனர். எதிர்கொள்ள முடியாத போர்த்துக்கீசப் பாதிரிமார்களும், போர்வீரர்களும் நல்லூரைவிட்டுச் சிதறி ஓடினர். அவ் வேளையில் பலர் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் கப்பல்களில் போய் ஏற்றிக்கொண்டனர்.

யாழ்ப்பாணத்தைத் தக்கவைப்பது மிகக் கடினமான விடயம் எனக் கண்ட தளபதி பிரகன்சா யாழ்ப்பாணத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வாங்கி மன்னார் சென்று மன்னாரைக் கைப்பற்றிக் கொண்டான். சங்கிலி மன்னனின் சாணக்கியமும், நாட்டுப்பற்றும் மதப்பற்றும், உறுதியான கொள்கைகளையும் இறுதிவரை அவனை ஒரு பாரிய நவீன அந்நியப் போர்ப்படையுடன் மோதி தற்காலிகமாகவேனும் தனது அரசையும், மக்களையும் பெரும் அழிவிலிருந்து காப்பாற்ற முடிந்தது எனத் தெரியவருகிறது.

மேலும், அந்நியர்களின் நவீன ஆயுதங்களோ அல்லது அவர்களின் படைப்பலமோ அதனை எதிர் கொள்ள முடியாது தோற்றுப் போகின்றது என்பதற்கு இந் நிகழ்வு வரலாறு தந்த ஒரு சிறந்த பாடமாகும். இருந்தும், ஒரு சில பிரிவினரின் சுயநலச் செயல்களினால் மறுபுறத்தில் அந்நாடே முழுக்க எதிரிகளின் கைக்கு மாறிவிடுகின்றது என்பதற்கும் மேற்படி நிகழ்வு நல்லதோர் உதாரணமாகும்.

போர்த்துக்கீசர் யாழ்ப்பாண இராச்சியத்தின்மேல் படையெடுத்த போதிலும் அவர்களின் குறிக்கோள் அங்கு நிறைவேறவில்லை. இருந்தும் மேற்படி ஒப்பந்தத்தின்படி மன்னார் போர்த்துக்கீசர் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமாக 1560 இல் மாறியது.

மன்னாரில் அவர்கள் ஒரு கோட்டையைக் கட்டி அங்கு 150 போர் வீரர்களையும், 10 சிறிய கப்பல்களையும் தரிக்கவிட்டு பிரகன்சா தை 1561 இல் கொச்சினுக்குத் திரும்பினான். இவ் வேளையில் மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரம் ஆலயம் போர்த்துக்கீசரினால் இடிக்கப்பட்டதாக அறியமுடிகிறது.

அவ்வாறே மன்னாரில் உள்ள கோட்டை 1561 இல் கட்டி முடிக்கப்பட்டதாக அறியமுடிகின்றது. அவ்வேளையில் திருக்கேதீஸ்வர ஆலயம் இடிக்கப்பட்டிருக்க வேண்டும். இவ் ஆலயம் இடிக்கப்பட்டதற்கான நம்பகமான தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால் போர்துக்கீசர் 1623 இல் கோணேஸ்வரர் ஆலயத்தை இடித்துத்தான் அங்குள்ள கோட்டையைக் கட்டினார்கள்.

அதே போன்று திருக்கேதீஸ்வரக் கோவிலுக்கும் நடந்திருக்கலாம். நிர்வாக விடயங்களைக் கவனிப்பதற்கு ஒரு தளபதி நியமிக்கப்பட்டான். மன்னாரின் முத்துக்குளிப்பு பகுதிகளும், முத்து வர்த்தகமும் போர்த்துக்கீசர் வசமாயின. பலர் கத்தோலிக்கர்களாக மதம் மாற்றப்பட்டனர்.

இந்தியாவில், கத்தோலிக்க கிறிஸ்தவமதத்திற்கு மாற்றப்பட்ட பலரும் தென்பகுதியில் கத்தோலிக்க மதத்திற்கு மாறியவர்களும் இங்கு குடியமர்த்தப்பட்டனர். இந்நிலை மன்னாரிலிருந்த போர்த்துக்கீசத் தளபதி, யாழ்ப்பாண அரசியல் விடயங்களில் தலையிட வாய்ப்பளித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “தமிழ்ப் பகுதிகளுள் பழமையின் சின்னங்களும் அவை பேணப்படுதலின் அவசியமும்”
# (Conservation)

திரு. வ.ந.கிரிதரன்

மாறிவரும் காலத்தின் ஓட்டங்களுக் கேற்ப மாறிவரும் சமுதாயச் சூழலில் ஒரு இனத்தின் தனித்துவத்தையோ அல்லது அதன் பண்பாட்டின் வளர்ச்சியையோ பேணுவது மிகவும் அவசியமான தொன்றாகும். அவ்வாறு செய்யாவிடினும் அக்காலத்தின் வளர்ச்சியும் காலத்தின் கோலத்திற்கேற்ப கட்டெறும்பாகத் தேய்ந்து சுருங்கிவிடும். மேலும் ஒரு இனத்தின் வரலாறு தெளிவின்றியிருக்குமாயின் அதன் வரலாற்றிலொரு தெளிவினை ஏற்படுத்து வதும் மிகவும் முக்கியமாகும்.

தமிழினத்தைப் பொறுத்தவரையில் அதன் வரலாற்றிலோ தெளிவற்ற ஒரு குழப்ப நிலை நிலவுவதை அவதானிக்கக் கூடியதாவுள்ளது. வரலாற்றினை நிரூபிப்பதற்குக் கிடைக்கும் சான்றுகளோ கவனிப்பாரற்ற நிலையில் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கின்றன. ஒரு வெளிநாட்டவரோ அல்லது நம்மவர் ஒருவரோ பார்க்க விரும்பினால் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளென்று சொல்லக் கூடிய ஒன்றிரண்டு பகுதிகளில் கூட போதிய தகவல்கள் கிடைப்பதில்லை.

இந்நிலையில்தான் (Conservation) அவசியம் அதிகமாகின்றது. வரலாற்று ரீதியான ஆய்வுகளிற்கு அவசியமான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பழமையின் சின்னங்களும், சிதைந்த நிலையில் காணப்படும் அழிபாடுகளும் (Runins) பேணப்படவேண்டியது மிகவும் அவசியமான, தவிர்க்கமுடியாத தொன்றாகின்றது.

ஏன்? நல்லூரரையே எடுத்துக் கொள்ளுங் களேன்? கடைசித் தமிழ் மன்னர்களான ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில், இராசதானியாக அமோகமான புகழுடன் விளங்கிய அந்நகரமோ இன்று காலத்தின் தன்மைக்கேற்ப மிகவிரைவாக மாறிக்கொண்டு வருகின்றது. அந்நகரின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளெல்லாம் வெகுவேகமாக மாறிக்கொண்டு வருகின்றன. இந்நிலை இப்படியே நீடிக்குமாயின், விளைவு பயங்கரமான தொன்றாகவிருக்கும். நல்லூர் ஒரு காலத்தில் இராசதானியாக விளங்கியது என்பதைக் கண்டுபிடிப்பதே பெருங்கஷ்டமாய்ப் போய்விடும்.

இத்தனைக்கும் நல்லூர் நகரின் பழைய நகர் அமைப்புப் பற்றியோ அல்லது அந்நகரிலமைந்திருந்த கோட்டை அமைப்புப் பற்றியோ விரிவாகவோ, அல்லது பருமட்டாகவோயேனும் இதுவரையில் எந்தவொரு நூலுமே வந்ததில்லை. இந்நிலையில் கிடைக்கும் சான்றுகள் வேறு அழிந்து விடுமாயின், அந்நகர் பற்றி ஆராய விழைபவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவாவெல்லாம் கானலாகிவிட வேண்டியதுதான்.

நல்லூர் வடக்கே புகழ்பெற்ற இராசதானியாக விளங்குகையில் தெற்கில் கோட்டே இராசதானியாக மிகுந்த புகழுடன் விளங்கியது. அதற்கும் எத்தனையோ பல வருடங்களிற்கு முன்பு தலைநகர்களாகப் புகழ்பெற்று விளங்கிய நகரங்கள்தான் அனுராதபுரம், பொலநறுவை என்பவை யெல்லாம்.

அந்நகர்கள் பற்றியெல்லாம் பல வாறான ஆய்வு நூல்களெல்லாம் வெளி வந்திருக்கையில், நல்லூர் பற்றி எந்தவொரு நூலுமே வெளி வராதது கவலைக்குரியது. இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் இந்நகர் பற்றி ஆராய முன் வரும் ஆர்வமிக்கவர்களிற்கு ஊக்கம் தந்திட, அந்நகரில் ஆங்காங்கே காணப்படும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் சரித்திரம் பேணப்பட வேண்டியவைகளாகச் சங்கிலித்தோப்பு, பண்டார மாளிகை என்ற தூண் உள்ள பகுதி, பண்டாரக்குளம், யமுனாரி, சட்டநாதர் ஆலயத்திற்கு அருகாகவுள்ள பழமைவாய்ந்த மாளிகையுட்பட (மந்திரிமனை) தற்போதைய நகரில் காணப்படும் முக்கிய குளங்களான ஆரிய குளம், அடியார்க்கு நல்லின் குளம் முதலானவைகள் அவசியம் பேணப்படவேண்டும். இவைகளெல்லாம் பேணப்படுவதற்கு நல்லூர் நகரே பேணப்படவேண்டிய பகுதியாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, பழமையின் சின்னங்கள் பேணப்படவேண்டும்.

கோப்பாய், வல்லிபுரம் (சிங்கைநகர்), திருவடிநிலை (பத்தினித் தெய்வ வழி பாட்டை இலங்கைக்குக் கொண்டு வந்த கஜபாகு மன்னன் இறங்கிய புகழ் மிக்க துறையான 'ஜம்புகோளவும்' திருவடிநிலையும் ஒன்றென்பர் சரித்திரப் பேரறிஞர். இப்பகுதிகள் மட்டுமின்றி வடக்கு - கிழக்குப் பகுதிகளிலும் ஒவ்வொரு வரலாற்றுச் சின்னமும் அவசியம் பேணப்பட்டாலன்றி, வரலாற்றில் தெளிவென்பது முயற்கொம்பே.

பேணப்படுதல் (Conservation) என்னும் போது, மன்னர்களின் புகழ் மிக்க இராசதானிகளாக விளங்கிய நகர்களைப் பற்றி மட்டும்தான் கவனிக்கவேண்டு மென்பதில்லை. ஒவ்வொரு சின்னங்களுமே பேணப்படுதல் வேண்டும். உதாரணமாக சுமைதாங்கிகளை எடுத்துக்கொள்ளுங்கள் ஒரு காலத்தில் சமூகத்தில் முக்கிய பங்கு ஒன்றினை வகித்த அவையோ தற்போதைய நிலையில் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கின்றன. பெரும்பாலானவை அழிந்தும் விட்டன. சத்திரங்களின் நிலையும் இதுதான். மிகவும் அவசியம் பேணப்படவேண்டியதாகியிருந்த 'கங்கா சத்திரம்' (சின்னத்துரை அன் பிறதர்ஸ்ஸிற்கு அருகாமையில்) தற்போது இடிக்கப்பட்டு விட்டது. இப்படியே நிலையைத் தொடர விடுவதா?

யாழ். நகரைப் பெறுத்தவரையில் கிட்டங்கிகளுள்ள பகுதியும் அதற்கு அண்மையில் காணப்படும் கட்டடங்களை உள்ளடக்கிய பகுதிகளுள்ள பகுதிகளிலும், டச்சுக்கட்டடக்கலையைத் தழுவிநிற்கும் பழமையின் சின்னங்களில் பல அவசியம் பேணப்பட வேண்டும்.

கிராமப்புறங்களில் காணப்படும் பழமைவாய்ந்த சின்னங்கள் வழிபாடுக ளென்பவை பேணப்படுவதிலும் பார்க்க நகரப்புறங்களிலே 'பேணப்படுதல்' மிகவும் பிரச்சினைக்கு உரியதாக உள்ளது. நகரில் பெருகி வரும் மக்களிற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்பு வசதிகள் செய்து தருதல் அதிக விலைமதிப்புள்ள "நகர நிலமதிப்பு" என்பனவே 'பேணப்படுதலைத்' தயங்க வைக்கும் காரணிகளாகவுள்ளன.

இதனால்தான் பேணப்படுதலிற்கும், மேற்கூறப்பட்ட காரணிகளுக்கும் இடையிலும் ஒருவித ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வொன்றின் அவசியம் எழுகின்றது. அத்தீர்வின் அடிப்படையில் பழமையின் சின்னங்களோ, அழிபாடுகளோ (Runins) பேணப்படுவது இன்றைய காலகட்டத்தில் மிகவும் முக்கியமான தவிர்க்க முடியாத ஒன்றாகவுள்ளது.

இதற்கு மக்களினது ஒத்துழைப்பும் அவசியமாகும். படித்தவர்கள் பாமரமக்களிடையே பழமை வாய்ந்த சின்னங்கள், அழிபாடுகள் என்பவற்றின் மகத்துவம் பற்றியும் அவை பேணப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் விளக்கும் பொருட்டு நூல்கள் முதலானவற்றை பயன் கருதாது எழுதியும், சொற்பொழிவாற்றியும் செயலாற்ற வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்களின் பங்கு கணிசமான அளவு உதவவேண்டும். உத்தியோகம் ஒன்றிற்காகவே படிக்கும் மாணவர்களும் கடமைக்காகவே தொழில் புரியும் பேராசிரியர்களும் மலிந்து விட்ட இந்த யுகத்தில் சாதனைகள் புரியக் கூடிய மாணவர்களும், பேராசிரியர்களும் தோன்ற வேண்டும். வாதத் திறமை மிக்கவர்களெல்லாம் சமுதாய மதிப்புப் பெறும் பொருட்டுத் தலைவர்களாக வந்துவிடத் துணைபுரியும் வேடிக்கையானயிந்த நாட்டில் சீரிய சிந்தனைகளும், துணிவும் மிக்க தலைவர்கள் தோன்றிட வேண்டும்.

இத்தகையவர்களால் தான் வரலாற்றுத் தெளிவின்மையால் நிலை குலைந்து நிற்கும் இனமொன்றின் வரலாற்று ரீதியான அதன் வளர்ச்சியும், இனங் கண்டு கொண்டிட முடியும்.

**தென்கோவை 'வித்தகம்' ச.கந்தையபிள்ளை 1880-1958**

ஆறுமுகநாவலரின் ஆசிரியருள் ஒருவராகிய இருபாலைச் சேனாதிராய முதலியார் (1750–1840) அவர்கள் குடிவழியில் வந்த பெருமைக்குரியவர் 'வித்தகம்' ச.கந்தையபிள்ளை அவர்களாவர். இவர் கோப்பாய் தெற்கிலே கந்தரோடை– சபாபதிப்பிள்ளை அவர்கட்கும் தென்கோவை – இருபாலை காமாட்சி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவர் கோப்பாய் சி.எம்.எஸ். பாடசாலை , யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி என்பனவற்றில் கல்வி கற்றவர். சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் (1855–1922) அவர்களிடமும் கற்ற பெருமைக்குரியவர். கொழும்பு ஆங்கில ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் பத்தாண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். இலங்கைக் கல்வித்திணைக்களத்திலேயே மொழி பெயர்ப்பாளராகவும் தமிழ் பாடப்பரீட்சகராகவும் கடமையாற்றினார். இவரின் நூலகப்பணிகளில் திருவாசக உண்மை, உண்மை, முத்தி ஆராய்ச்சி என்பன குறிப்பிடத்தக்கவை. இவர் கந்தரோடையைச் சேர்ந்த விசுவநாத முதலியாரின் மகளான செல்லம்மாவைத் திருமணம் செய்தார். புதுச்சேரியில் 'வித்தகம் எனும் வாரப்பத்திரிகையினைச் சிறப்பாக நடத்தியமையால் வித்தகம் கந்தையாபிள்ளை என்று அழைக்கப்பெற்றார். சுவாமி விபுலானந்தர் (1892–1947) , முதுத்தமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி (1896–1951) என்போர் இவரின் அருமை மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் எழுந்த நூல்கள்

R. திலகராணி
(விசேட கல்வித்துறை)

யாழ்ப்பாணம், யாழ்ப்பாண தேசம், யாழ்ப்பாணப் பட்டினம் எனப் பலவாறு வழங்கி வந்த தமிழ் இராச்சியம் கி.பி 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே பாண்டியரின் ஆதிக்கம் வட இலங்கையிலே ஏற்பட்டுப் படிப்படியாக வலுப் பெற்று வந்தது. அக்காலகட்டத்தில் இலங்கையின் வடபகுதியில் உருவாகியிருந்த தனி இராச்சியமானது பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டு வந்தது. கி.பி 1215 ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட பாண்டிய படையெடுப்பின் விளைவாக யாழ்ப்பாணத்திலே ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்டது. தென்பாண்டி நாட்டு செவ்விருக்கை நாட்டைச் சேர்ந்த அந்தணராகிய ஆரியச் சக்கரவர்த்திகள் மாறவர்மன் குணசேகர தேவரின் ஆட்சியிலே பாண்டிய நிருவாகத்திலே சேனாதிபதி போன்ற உயர் பதவிகளைப் பெற்றிருந்தனர்.

ஈழத்தில் சங்ககாலத்திலிருந்தே இலக்கியத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட போதிலும் தமிழகத்தைப்போல் தனியரசு நிறுவப்படாமையால் ஈழத்தில் சுமார் கி.பி 12 ஆம் நூற்றாண்டு வரை வெற்றிடமே காணப்படுகின்றதெனலாம். எனினும் சமஸ்கிருத மொழிப் பயிற்சியும் தமிழ் மொழி வளர்ச்சியில் ஈடுபாடுங் கொண்டிருந்த ஆரியச் சக்கரவர்த்திகள் கல்வி வளர்ச்சிக்கும் கவிவாணருக்கும் ஆதரவுகள் புரிந்தனர். யாழ் மன்னர்கள் புலவர்களைக் கூட்டி தமிழ்ச் சங்க மொன்றினை அமைத்திருந்தனர். என்பது மரபுவழிக் கதையாகும். இம்மன்னர்களின் ஆட்சியும் தமிழ்ப் பாரம்பரியத்தின் புத்துருவாக்கமும், அரசகேசரியுடன் எழுச்சி பெற்ற புலவர் மரபும் ஈழத்து இலக்கியத்திற்குப் பெரும் உந்து சக்தியாக அமையப் பெற்று யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் தமிழ் இலக்கியங்களை முகிழச் செய்தன. அவர்களின் அரண்மனையிலே வேதத் திருமறைகள், சைவத்திருமறைகள், ஆகமங்கள், புராணங்கள், காப்பியங்கள், இலக்கண நூல்கள், மருத்துவ சோதிட நூல்கள் ஆகியவற்றின் ஏட்டுப் பிரதிகள் சேர்க்கப்பட்டு இரு மொழிப்பயிற்சி பெற்ற அறிஞர்களாலேயே ஆராயப்பட்டன என்று அறிய முடிகிறது. ஆரியச்சக்கரவர்த்திகள் கல்வி வளர்ச்சிக்கும் கவிவாணருக்கும் ஆதரவளித்தனர் என்பதை சமகால நூல்கள், தனிப்பாடல்கள் மூலமாக அறிய முடிகின்றது. அவர்களுள் ஒருவன் யானையையும் மூவாயிரத்தெழுநூறு காசுகளையும் பாவலருக்குப் பரிசிலாக கொடுத்தானென்று செகராசசேகரமாலை குறிப்பிடுகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகளின் தூண்டுதலினாலும் ஆதரவுடனும் தோன்றிய இலக்கியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) காப்பியங்கள் - இரகுவம்சம், வழக்குரை காதை

02) அறிவியல் இலக்கியங்கள்

I. வைத்தியம் சார்ந்தவை -

II. செகராசசேகரம்

பரராசசேகரம்

02. சோதிடம் சார்ந்தவை - செகராச சேகரமாலை

03) வரலாற்று இலக்கியங்கள் - வையா பாடல், கைலாய மாலை, கோணேசர் கல்வெட்டு

04) சமய சார்பு இலக்கியம் - தட்சிண கைலாய புராணம்

திருக்கரைசைப்புராணம்

கதிரைமலைப்பள்ளு

தமிழிலே தோற்றம் பெற்ற பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரத்தையும் இராமாயணத்தையும் தழுவி இக்காலத்தில் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. குறிப்பாக சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வழக்குரையை அடிப்படையாகக் கொண்டு கண்ணகி வழக்குரை காதை சிலப்பதிகாரத்திலிருந்து நீட்டியும் குறைத்தும் சகவீரனால் படைக்கப்பட்டுள்ளதுடன், இவ்விலக்கியம் முல்லைத் தீவில் சிலம்பு கூறல் என்றும், யாழ்ப்பாணத்தில் கோவலனார் பாட்டு எனவும் அழைக்கப்படுவதுடன் பொதுமக்களின் இலக்கியச் சாயலைப் பின்பற்றியும் உள்ளது. அதேபோல் அரசகேசரியால் உருவாக்கப்பட்ட இரகுவம்சம் இராமாயணத்தின் முன்னுரையாகவும் முடிவுரையாகவும் அமையப்பெற்று 2444 பாடல்களையும் 12 சருக்கங்களையும் கொண்டிருப்பதால் காப்பிய மரபைப் பேணிய நிலையை உணர முடிகின்றது. இரகுவம்சமானது ரகுவின் மகன் தசரதனின் வரலாற்றையும், தசரதனின் மகன் இராமனின் வரலாற்றையும் இராமனின் மகன்களான லவன், குசன் ஆகியோரது வரலாற்றினை சித்தரிப்பதாக அமையப்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்து தமிழ் மன்னர்கால இலக்கியங்களின் அறிவியல் இலக்கிய மரபும் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது 7ஆம் நூற்றாண்டிற்கு முன்பே ஈழத்து தமிழ் மக்களிடத்தில் வைத்தியம், சோதிடம் என்பன பயிலப்பட்டு கலையாக இலக்கியமாகக் காணப்பட்டதை அறிய முடிகின்றது. குறிப்பாக வைத்தியம் சார்ந்த நூல்கள் செகராச சேகரம், பரராச சேகரம் சோதிடம் - செகராச சேகர மாலை என இரு வகைப்பட்ட இலக்கியங்கள் தோன்றியுள்ளமை அறிவியல் இலக்கியப் பாணியை வெளிப்படுத்த சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். இவ் வைத்திய சோதிட நூல்கள் 14 ஆம் நூற்றாண்டில் வரோதய சிங்கையாரியனின் ஆட்சியில் எழுதப்பட்டன. செகராச சேகரன் என்னும் பட்டப் பெயரைக் கொண்ட அவ்வரசனின் பேராதரவுடன் அவை எழுதப்பட்டதால் அவனை நினைவு கூறும் வண்ணமாக அவை முறையே செகராச சேகர மாலை, செகராச சேகரம் என்று நூலாசிரியர்களினாலேயே பெயரிடப்பட்டுள்ளன. வடமொழி யிலுள்ள சோதிடமதனைத் தமிழிலே நூல் செய்யுமாறு மன்னன் பணித்ததால் அரசகுலத்தவனும் மறைநூல் வல்லுநருமாகிய சோமசர்மா செகராச சேகர மாலையைப் பாடினார். விருத்தப் பாவிலமைந்த செகராச சேகர மாலை செந்தமிழ் நடை விரவிய இலக்கிய நயம் பொருந்திய நூலாகும். ஆரியச்சக்கரவர்த்திகளின் வம்ச வரலாறு பற்றிய அம்சங்களும் ஆளும் மன்னனாகிய வரோதய சிங்கையாரியனைப் பற்றிய பிரதானமான வரலாற்றுக் குறிப்புகளும் அரண்மனை வாழ்க்கை, வேளாண்மை, சமுதாய வழக்கங்கள் முதலியன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய சில செய்திகளும் அதிலே உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்துத் தமிழ் நூல்களிலே ஆயுள்வேத மருத்துவம் பற்றியவை மிகப் பிரதானமானவையாகும். வடமொழியிலுள்ள ஆயுள்வேத நூல்களின் ஏட்டுப் பிரதிகள் பலவற்றை இந்திய தேசத்திலிருந்தும். பெற்று அவற்றிலே ஆராய்ச்சிகளை நடாத்தித் தமிழிலே பல மருத்துவ நூல்களை எழுதுவித்தமை ஆரியச்சக்கரவர்த்திகளின் சிறப்பான சாதனையாகும். செகராச சேகரனொருவன் சத்திர வைத்திய முறையிலும் நாடி சாஸ்திரத்திலும் வல்லுநனாக விளங்கினான் என்பதை செகராச சேகரம் கூறுகின்றது. சர்ப்ப சாஸ்திரம், நயன சாஸ்திரம், பரராசசேகரம் என்ற பிற மருத்துவ நூல்களும் யாழ்ப்பாண மன்னர் காலத்திற்குரியவையாகும். தமிழிலுள்ள ஆயுள்வேத மருத்துவ நூல்களுட் செகராச சேகரம் என்பதே மிகப் பழமையானதென்று கருதப்படுகிறது.

சைவசமயச் சார்புடைய நூல்களிலே கோணேசர் கல்வெட்டு, தட்சிண கைலாச புராணம், திருக்கரைசைப் புராணம் ஆகிய மூன்றும் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்திற்குரியவை. கோணேசர் கல்வெட்டு என்பதைக் கவிராசர் என்ற புலவர் பாடியுள்ளார். அந்நூல் செய்யுள் வடிவிலும் வசனரூபமாகவும் அமைந்துள்ள பல பகுதிகளைக் கொண்டுள்ளது. அவற்றிற் குளக்கோட்டன் கஜபாகு என்னும் மன்னரிருவரைப் பற்றிய செய்யுள் வடிவிலுள்ள பகுதிகள் கல்வெட்டு என்ற இலக்கிய வகையைச் சார்ந்தது. அவையிரண்டும் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டிருக்க வேண்டும். குளக்கோட்டனைப் பற்றிய பகுதியே கவிராசரின் படைப்பு எனவும், வசனரூபமாகவுள்ள பகுதிகள் பாமர மக்களிடையே நிலவிய கதைகள் எனக் கூறப்படுகிறது. கோணேசர் கோயிலின் வளர்ச்சி, அதன் நிர்வாக ஏற்பாடுகள், கோயிற் சேவைகள், நிலமானியங்கள் முதலியவற்றின் தகவல்களும், புராணக் கதைகளும் கூறப்பட்டுள்ளன.

ஈழத்து தலபுராணங்களில் தலை சிறந்ததான தட்சிண கைலாய புராணம் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்துப் பேரிலக்கியமாகும். அது கோணேசர் கோயிலைப்பற்றிய தல புராணமாகும். வழிபாட்டு நிலையம் என்ற வகையிலும் கவர்ச்சியான கலைவனப்புமிக்க கோபுரங்களைப் பெற்ற கட்டிட வடிவமைப்பு என்ற வகையிலும் சமுதாயத்தின் பல்வேறு கூறுகளை ஒன்றிணைத்து சமுதாய ஒழுங்குகளையும் நிலைநிறுத்துஞ் சாதனமென்ற வகையிலும் கோயில் மிகுந்த வளர்ச்சி பெற்றிருந்த காலத்திலே கோயிலை அடிப்படையாகக் கொண்ட தலபுராணமாகும். தலபுராணங்களுக்கு உரிய பண்பைப் பெற்றுள்ளதோடு, பக்திச் சுவையும், கவி நயமும் விரவியதாய் தட்சிண கைலாய புராணம் திகழ்கின்றது. திருக்கரசைப் புராணமானது கரைசைநாதர் தொடர்பாக எடுத்தியம்புகின்றது.

இக்கால இலக்கியங்களின் பண்புகளின் வரலாற்றைப் பேணும் பண்பு காணப்பட்டது. அதாவது ஈழத்து மக்கள் தேசப்பற்று, இனப்பற்று, மதப்பற்று என்பவற்றுடன் காலத்துக்குக் காலம் தமது பதிவை ஆவணக் களஞ்சியமாக மாற்றம் செய்துள்ளனர். இவ்வகையில் தோன்றிய வரலாற்று வையா பாடலானது தமிழ் நாடுகளிலிருந்து ஈழத்துக்கு வந்த அடங்காப்பற்று என வழங்கிய வன்னியை அடக்கி அங்கு அதிகாரம் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியரின் வரலாற்றைப் பொருளாகக் கொண்டு செகராச சேகரன் என வழங்கிய முதற் சங்கிலி காலத்து அகைக்கள புலவரான வையாபுரி ஐயர் இந்நூலை எழுதினார் என்பது மரபாகும்.

வையாபாடலில் புனைக்கதைகளும் புராணக் கதைகளும் இடம் பெற்றுள்ள தோடு இராமாயணத்தில் வரும் சில கதைகளையும் யாழ்ப்பாணன், மாருதபுரவீகவல்லி என்போர் பற்றிய கதைகளையும் வன்னியர் வரலாற்றோடு இணைத்து வையாபுரி ஐயர் இந்நூலை வழங்கியுள்ளார். யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் இன்னொரு நூலாக கைலாயமாலை திகழ்கின்றது. சிங்கையாரியன் நல்லூரில் அமைத்த கைலாச நாதர் கோயிலின் வரலாற்றைப் பொருளாகக் கொண்டுள்ளது. எனினும் சிங்கையாரியனைப் பற்றியும் அவனோடு வந்த பிரதானிகளைப்பற்றியும், அவன் செய்த நிர்வாக ஏற்பாடுகள் தொடர்பாகவும் இந்நூல் விபரிக்கிறது.

உறையூர்ச் செந்தியப்பனின் மகனான முத்துராச கவிராசர் என்ற புலவர் கைலாய மாலையை எழுதினார். இந்நூலானது மாருதபுரவீகவல்லி, யாழ்ப்பாணன் பற்றி மிகச் சுருக்கமாகச் சொல்லி சிங்கையாரியன் பற்றிய வரலாற்றுச் செய்திகளை விரிவாகக் கூறுகிறது. சிங்கையாரியன் மதுரையிலிருந்து வந்து யாழ்ப்பாணத்திலே தங்கி இராசதானி அமைத்தமையையும் அம்மன்னனின் பட்டாபிஷேகம் தொடர்பாகவும் இந்நூல் வர்ணிக்கின்றது. சிங்கையாரியன் தன் வழிபாட்டுத் தேவைகளுக்காக தலைநகரிலே கைலாயநாதர் கோயிலை அமைத்ததாகவும், அக்கோயிலின் அமைப்புப் பற்றியும், அதன் வனப்பு பற்றியும் முத்துராசகவிராயர் இலக்கிய நயம் பொருந்திய வகையில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழவள நாட்டிலே வட கிழக்குப் பகுதியில் ஒரு தமிழ் இராச்சியமும் வன்னிகள் என்ற பல குறுநில அரசுகளும் எழுச்சி பெற்றதன் விளைவாக அவற்றின் தோற்றம், வளர்ச்சி ஆகியன பற்றி எழுதப்பட்ட நூல்களில் ஒன்றே யாழ்ப்பாண வைபவமாலையாகும். இதனை யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிவதில் மரபு வழியான நிர்வாக முறையினை ஒல்லாந்த அதிகாரிகள் பின்பற்றியதனால் யாழ்ப்பாணத் தமிழரின் வரலாறு, சமுதாய வழமைகள் ஆகியவற்றைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டதால் ஒல்லாந்தரின் வேண்டுதலுக்கிணங்க மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலையை ஆக்கினார் எனக் கூறப்படுகிறது. யாழ்ப்பாண வைபவமாலையானது பண்டைய இலங்கையில் வாழ்ந்ததாகக் கருதப்படும்இயக்கர், நாகர்தொடர்பாகவும் அவன் அமைத்த குடியேற்றம் கோயில்கள் தொடர்பாகவும் கூறுகிறது. மேலும் முதலாம் சிங்கையாரியன் காலத்தையடுத்து **1450** ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த அரசர்களின் வரிசையையும், அவர்களின் ஆட்சிச் சிறப்பையும் ஒல்லாந்தர் கைப்பற்றிய பின் அவர்களின் ஆட்சி, கல்வி, மதமாற்றம் தொடர்பாக இந்நூல் விரிவாகவும், ஈழநாட்டுத் தமிழர்களின் செந்தமிழ் வழக்கினை பேணியும் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வகையில் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் அவர்களின் ஆட்சி, போர், வீரச்சிறப்பு, வரலாறு என்பவற்றை எடுத்தியம்பக் கூடிய வகையில் இலக்கியங்கள் உருவாகியுள்ளன. அவை காலத்தைப் பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடியாகத் திகழ்ந்த தமிழர் தம் வரலாற்றையும், சிறப்பையும் பறைசாற்றி நிற்கின்றது என்பது திண்ணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் - தோற்றமும் தொடர்ச்சியும்

**சஞ்சிகா இராசேந்திரம்**
**ஆரம்பக் கல்வி**

இன்று யாழ்ப்பாணம் என்பது இலங்கையின் வடமாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களில் ஒன்றாகும். இந்த யாழ்ப்பாணமானது முன்னொரு காலத்தில் ஒரு இராஜதானியாக விளங்கியது. இலங்கையின் வட பிரதேசம் யாழ்ப்பாண இராச்சியமென 13 ஆம் நூற்றண்டிலேயே அழைக்கப்படலாயிற்று.

11 ஆம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழனின் இலங்கைப் படையெடுப்பு 13 ஆம் நூற்றாண்டில் கலிங்கமாகனின் படையெடுப்பு என்பன யாழ்ப்பாண இராசதானி உருவாவதற்கான களம் அமைத்துக் கொடுத்தன. 14 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே யாழ்ப்பாண இராச்சியம் ஆரியச்சக்கரவர்த்தி என்று ஆரம்பிக்கப்பட்ட ஒரு அரச பரம்பரையினரால் ஆட்சி செய்யப்பட்டது.

13 ஆம் நூற்றாண்டு மிக முக்கியமான கால கட்டம்; சுதந்திர தமிழ் இராச்சியம் நிறுவப்பட்டு நிலை கொண்ட காலமிது என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இக்காலப் பகுதியில் சிங்கை நகர் (பூநகரி), நல்லூர் எனப் பல தலைநகரங்களாகக் காணப்பட்டன. சந்திரபாணு 2வது தென் படையெடுப்பைத் தொடங்கியதும் பாண்டியர் சிங்களவருக்கு உதவி செய்து சந்திரபாணுவை 1262ல் கொன்று படையெடுப்பை நடத்திய மந்திரியான ஆரியச்சக்கரவர்த்திகள் அவர்களால் அரசாக நியமிக்கப்பட்டது. முஸ்லீம் படையெடுப்புக்களினால் பாண்டியர் அரசு பலவீனமானதும் ஆரியச்சக்கரவர்த்தி ஆட்சியாளர்கள் யாழ்ப்பாண அரசை விடுதலைமிக்க அரசாக மாற்றி இலங்கையில் பிராந்திய சக்தியாக மாற்றினர். யாழ்ப்பாண அரசின் எல்லா அரசர்களும் கூழங்கைச் சக்கரவர்த்தியின் வழித்தோன்றல்களாக கருதப்படுகிறார்கள்.

தனித்திறன் வாய்ந்ததாகக் கணிக்கக் கூடிய பாரம்பரிய வரலாறு யாழ்ப்பாணத்துக்கு இருந்து வந்தாலும், வரலாற்றில் அதன் பெருமை சுதந்திரத் தமிழரசின் தோற்றத்தோடு மேலும் சிறப்படைவதனைக் காணலாம். வரலாற்று மூலங்கள் இவ்வரசின் தலைநகர் சிங்கை, யாப்பாபட்டுன, நல்லூர் என வேறுபட்ட தகவல்களைத் தருகின்றன. இவை தலைநகர் மாற்றத்தைக் குறித்து நிற்கின்றன என்ற கருத்தை வரலாற்று ஆசிரியர்களிடையே ஏற்படுத்திலும் கூட, தற்போது நல்லூரைத் தவிர ஒரு இராசதானிக்குரிய கட்டிட அறிகுறிகள் யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 16ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துக்கு வந்த போர்த்துக்கேயர் கூட, நல்லூர் நகரத்தை மட்டுமே கண்டதாகத் தெரிகிறது. இதனால் 13 ஆம் நூற்றாண்டிலிருந்து 17 ஆம் நூற்றண்டு வரை யாழ்ப்பாண அரசின் தலைநகராக நல்லூரே விளங்கியது எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இராச்சியத்தில் இந்த இராசதானி அமைந்திருந்த உண்மையான இடத்தையோ அதன் விஸ்தீரணத்தையோ பூரணமாக அறிந்து கொள்ளக் கூடிய அளவிற்குப் போதிய தொல்பொருட் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை கிடைத்த சான்றுகளை வைத்து நோக்கும் போது இது தற்போதைய நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு முன்னாலுள்ள மூன்று மைல் சுற்று வட்டத்துக்குள் அமைந்திருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. இதன் எல்லைக்குள் வரலாற்றுப் பழமை வாய்ந்த கொழும்புத் துறையும், பண்ணைத்துறையும் அடங்குகின்றன.

தற்போதைய நல்லூர் பிரதேசத்தில் யாழ்ப்பாண மன்னர் காலக் கட்டிடங்கள் எவையும் முழுமையாக இல்லாவிட்டாலும் அங்குள்ள மந்திரி மனை, சங்கிலியன் தோப்பு, இராசாவின் தோட்டம், பண்டார மாளிகை, பண்டாரக்குளம், போன்ற பெயர்களும் இவ்விடயங்களில் அழிந்த நிலையில் இருக்கும் கட்டிட சிதைவுகளும் அக்கால நல்லூர் இராசதானியை நினைவுபடுத்துகின்றன.

இங்கு சைவ சமயம் அரச சமயமாகக் காணப்பட்டதோடு அது வடக்கிலும் கிழக்கிலும் மிக உன்னத நிலையை அடைந்திருந்தது. சைவ சமய சின்னமாகிய இடபம் அரச இலச்சினையிலும் கொடியிலும் காணப்பட்டது. யாழ்ப்பாண இராசதானியின் நல்லூர் தலைநகரில் நல்லூர் கந்தசாமி ஆலயம், பிர தானமானது இதை மையமாகக் கொண்டு வெயிலுகந்த விநாயகர் ஆலயம், கைலாசநாதர் ஆலயம், வீரமாகாளி அம்மன் ஆலயம், சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம், சட்டநாதர் ஆலயம் என்பன அமைக்கப்பட்டன. அரச குடும்பத்தவரது வழிபாட்டின் பொருட்டு கைலாசநாதர் ஆலயம் 1 வது சிங்கை ஆரியனால் அமைக்கப்பட்டு 3 வது கையாலயம் எனப் போற்றப்பட்டது.

அதனையடுத்து யாழ்ப்பாண இராச்சியத்தின் சமூக பொருளாதார அரசியற் படைபலத்தைக் கட்டியெழுப்புவதற்கு வேறிடங்களிலிருந்து மக்களைத் தருவித்துக் குடியேற்றங்கள் நிறுவுவது அத்தியாவசியமாகிறது. அதனால் தென்னிந்தியாவிலிருந்து குடிமக்கள் வருவிக்கப்பட்டு குடியேற்றங்கள் உருவாகின. விசயகாலிங்க சிங்கை ஆரியன் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து பிரதானிகள் பல தம் பரிவாரங்களுடன் யாழ்ப்பாணத்தில் குடியேறினர்.

இவ்வாறு யாழ்ப்பாண இராசதானியின் உருவாக்கம் தொடக்கம் வீழ்ச்சி வரை காணப்பட்டது. ஆனால் இன்றும் யாழ்ப்பாணமானது வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாகவே விளங்குகிறது. யாழ்ப்பாணம் என்னும் பெயர் மாற்றமடையாமல் வடமாகாணத்தின் பிரதான மாவட்டமாகத் திகழ்கிறது. தமிழும் சைவ சமயமும் அன்று முதல் இன்றும் மேலோங்கியே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியம்

**ஜானுஷா பாலசுப்பிரமணியம்**
**ஆங்கிலத்துறை**

இலங்கைத் தீவின் தலைப்பகுதியில் மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த மாபெரும் குடா நிலப்பரப்பே யாழ்ப்பாண இராச்சியம் எனப் போற்றப்பட்டது. யாழ்ப்பாணப் பிரதேசமானது மணற்றி என்ற பெயருடன் அழைக்கப்பட்டது. பின்னர் தொண்டை நாட்டில் இருந்து ஈழ நாடு வந்த யாழ்ப்பாணன் ஒருவன் அப்போது தலைநகராய் இருந்த அனுராதபுரம் சென்று அன்றைய காலகட்ட அரசனாகிய ஏலேல சிங்கனை கண்டு தனது யாழின் திறமையை எடுத்தியம்புதலின் விளைவாக மணற்றி பிரதேசத்தை பரிசாகப் பெற்றான். பின்னர் தன் பெயரான "யாழ்ப்பாண" எனும் நாமம் சூட்டி அரசாட்சி செய்தான். யாழ்ப்பாண எனும் பெயர் மருவி யாழ்ப்பாணம் என்பதாயிற்று.

சிங்கள ஆய்வாளர்களின் கருத்துப்படி "விஜயனின் வருகைக்குப் பின்னரான காலத்திலேயே இலங்கையின் மன்னராட்சி முறை கருத்திற் கொள்ளப்படினும் விஜயன் வருகைக்கு முன்னரே இங்கு சிற்றளவிலான அரசாட்சி முறைகள் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாண பிரதேசங்களில் நாகர்கள் எனப்படும் இனத்தினர் வாழ்ந்தனர் என்ற சான்றுகள் காணப்படுவதுடன் அவர்களிடையே ஏற்பட்ட சிம்மாசன பிரச்சினையைத் தீர்ப்பதற்காக புத்த பெருமான் இங்கு வந்தார் என்றும் இலக்கிய காவியங்கள் பறை சாற்றுகின்றன. ஆகவே சிம்மாசன பிரச்சினை ஏற்படுமிடத்து இங்கு மன்னராட்சி இருந்தமையை ஊகிக்க முடிகிறது.

யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்தை நோக்குமிடத்து இதன் ஆட்சித்தோற்றத்தின் தொடக்க நிலை எக்கால கட்டம் என்பதை உறுதியாக கூற முடிவதில்லை. பல நூல்களில் பல்வேறு காலப்பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளது இதற்கு ஒரு தடையாக காணப்படுகிறது. கண்டத்தை கடல் கோள் கொண்டது போல யாழ்ப்பாண தொன்மை சான்றுகள் யாழ் நூலக எரிப்பின் மூலமும், அன்னியர்களின் படையெடுப்புக்கள் மூலமும் அழிக்கப்பட்டது. இதனால் ஒரு சில மூலாதாரங்களைக் கொண்டே வரலாற்றை ஊகிக்க முடிகிறது. இலக்கிய மூலாதாரமாக வையா பாடல், யாழ்ப்பாண இராச்சியம் கி.மு 101 இல் தோன்றியது என்றும், வைபவமாலை எனும் நூலானது யாழ்ப்பாண அரசு 1314இல் உதயமானது என்று குறிப்பிடுகிறது. கிமு 101இல் இராச்சிய செயற்பாடுகள் நடந்திருப்பினும் அதற்கான தக்க சான்றுகள் கிடைக்கப் பெறாமையால் பற்பல வரலாற்றாய்வாளர்களின் கருத்தினடிப்படையில் யாழ்ப்பாண இராச்சியமானது கி.பி 1314இல் தோற்றம் பெற்றது என ஊகிக்கப்படுகிறது.

தொண்டை நாட்டின் திராவிட வீரச்சோழர்களின் ஈழப் படையெடுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் 13ஆம் நூற்றாண்டின் கலிங்கனின் படையெடுப்புக்கள் யாழ்ப்பாணம் எனும் ஒரு இராச்சியம் தோன்றலுக்கு வழிசமைத்தது. சிங்கை நகர் (வல்லிபுரம்), நல்லூர்ப் பிரதேசங்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர்களாக அதிகம் காணப்பட்டிருந்தது. விஜயனின் வருகையைத் (கி.மு 543) தொடர்ந்தே இலங்கையில் அரசாட்சி உதயமானது எனக் கருதப்படுகிறது அவன் ஆரிய வம்சாவளியைச் சேர்ந்தவனாகையால் பிற்காலத்தில் யாழ்ப்பாண அரச வம்சமானது ஆரிய சக்கரவர்த்தி பரம்பரை எனப்பட்டது. விஜய கூனங்க எனப்படுபவனே யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னனாக இலங்கையின் வரலாற்றாசிரியர்களால் கொள்ளப்படுகின்றான். பின்னர் அவனைத் தொடர்ந்து 12 ஆரியர்கள் ஆட்சி புரிந்ததுடன் "உக்கிர சிங்கன்" (கி.-பி 785) என்போன் கதிரை மலையை (கந்தரோடை) தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். பின்னர் பூநகரிப் பகுதிக்கு மாற்றி அப்பகுதியை "சிங்கை நகர்" எனப் பெயர் சூட்டி ஆட்சி புரிந்தான். அவன் பின்னர் பல அரசர்கள் ஆட்சி புரிந்து பின்னர் கோட்டை நோக்கிய இலங்கை இராச்சியப் பெயர்வுகளின் பொருட்டு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சிற்றரசக் கிளர்ச்சிகளின் விளைவாக சப்புமல் குமாரன் எனப்படுபவன் 6ஆம் புவனேகபாகுவால் அனுப்பப்பட்டான். அவன் கிளர்ச்சியை அடக்கி, பின்னர் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்தான். அக்காலகட்டத்திலேயே நல்லூரான் திருக்கோயில் (நல்லூர் கந்தசுவாமி ஆலயம்) அமைக்கப்பட்டது எனக் கருதப்படுகிறது. இதற்கான சான்றுகள் நல்லூர் கந்தசுவாமி ஆலய வரலாற்றில் காணப்படுகிறது. பின்னர் போர்த்துக்கேயர்களின் வருகையால் ஏற்பட்ட சூழல்களினால் சப்புமல் குமாரன் கோட்டை நோக்கிப் புறப்பட; இக் குழப்ப நிலையை சாதகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் முடங்கிக் கிடந்த தமிழ் அரசு யாழ்ப்பாணத்தை தன்தாக்கிக் கொண்டது. பின்னர் பரராஜசேகரப் என்போன் யாழ்ப்பாணத்தை தனிச்செங்கோல் அரசாக்கினான். இவன் காலத்தில் பல ஆலயங்கள் கட்டப்பட்டன என்று வரலாறுகள் எடுத்தியம்புகின்றன. உதாரணமாகக் கூறின், பரராஜசேகர பிள்ளையார் ஆலயத்தைக் கூறலாம். இவனைத் தொடர்ந்து சங்கிலி செகராஜ சேகரன் என்போன் அரசாண்டான். இக்காலகட்டத்தே போர்த்துக்கேயர் வருகையும் இடம்பெற்றது. யாழ் இராச்சிய மன்னார் கரைகளில் வந்தேறிய போர்த்துக்கேய கப்பல்கள் பண்டங்களை ஆட்சி உரிமைப்படி சங்கிலி அரசன் பெற்றுக்கொண்டதுடன் கப்பல்களையும் கைப்பற்றிக்கொண்டான். அக்காலகட்டத்திலே சமயம் பெரு வீழ்ச்சி கண்டது. போர்த்துக்கேயர்கள் ஆலயங்களைத் தகர்ந்து தங்களது தேவாலயங்கள், மிஷனரிகளை அமைக்கலாயினர். பின்னர் ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் இடம்பெற்றது. இவனே யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னனாவான். இவன் முன்னைய மன்னர்கள் கட்டிய கோயில்களை புனரமைத்ததுடன், யாழ் மந்திரி மனை, யமுனா ஏரி போன்றனவற்றையும் அமைத்தான். இவனது இறுதிக் காலகட்டம் சிறப்பானதாக அமையவில்லை. ஒல்லாந்தரின் சூழ்ச்சியால் மக்கள் எதிர்ப்பை உண்டாக்கி யாழ் அரசைக் கைப்பற்றினர் ஒல்லாந்தர். பின்னர் அவர்கள் ஒல்லாந்தர் கோட்டையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்து அதனை மத்திய நிலையமாகக் கொண்டு கரையோரங்களை நிர்வகித்தனர். இவர்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் தேவாலயங்களை அமைத்து மதப்பரம்பலை மேற்கொண்டனர். இதன் பின்னான காலத்தில் பிரித்தானியர் ஆட்சி இடம் பெற்றது. இக் காலகட்டத்திலேயே பல பாடசாலைகள், நிறுவனங்கள் போன்றன அமைக்கப்பட்டன. பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சியைத் தொடர்ந்து இலங்கை குடியரசானதன் பிற்பாடு அரச செல்வாக்கைக் கொண்டு இங்கு பல அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு பற்பல குழப்பநிலைகள் ஏற்படினும் யாழ்ப்பாணம் இன்றும் பண்பாட்டிலும், விழுமியத்திலும் முதன்மை வகிக்கிறது. வட மாகாணத்தில் யாழ்ப்பாணமே முக்கிய மாவட்டமாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது.



**கோப்பாய் பண்டிதர் ச.பஞ்சாட்சரசர்மா 13.11.1916-24.09.2003**

இவர் கோப்பாய் புராணபடன வித்தகர் பிரம்மஸ்ரீ சபாபதி ஐயர், கந்தரோடை மீனாஷி அம்மை தம்பதிகளின் புதல்வர். சுன்னாகம் பிராசீன பாடசாலையிற் கற்றவர். வேதவிசாரதர் சிதம்பரசாஸ்திரிகள். மகாவித்துவான் சி.கணேசையர் (1878–1958), பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (1899–1986), சீதாராம சாஸ்திரிகள் ஆகியோரின் மாணவர். இளஞ்சைவப்புலவர், பண்டிதர். தமிழ் ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி, சிங்களம் போன்ற பல மொழிகளில் பாண் டித்தியமுள்ளவர். கொக்குவில் ராம கிருஷ்ண சைவ வித்தியாலயம், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக்கல்லூரி என்பவற்றில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். துணைவியார் நீர்வேலி இராசாத்தியம்மா. பண்டிதரவர்கள் மறுமலர்ச்சி இணையாசிரியர்களுள் ஒருவர். நூலாசிரியர், பதிப்பாசிரியர், பாடநூல்களின் உரைவிளக்க ஆசிரியர். ஆரிய திராவிட பாஷாபி விருத்திச்சங்க பரீட்சைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்று மூலங்கள்

**தவநேசன் லெஞ்சி**
**விஞ்ஞானத் துறை**

ஒரு நாட்டின் வரலாற்றினைப் பல்வேறு வரலாற்று மூலங்களைப் பயன்படுத்தியே எழுத வேண்டும். யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டிருந்த தமிழ்அரசு பற்றிய சில முக்கியமான தமிழ் நூல்கள் குறிப்பாக இராசமுறை, பரராசசேகரன் உலா முதலியன இன்று கிடைத்தன. இவற்றையும் வேறு சிலவற்றையும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வையாபாடல், கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய வரலாற்றுச் சார்பான நூல்களும் வரலாற்று பற்றியறிய ஓரளவு உதவுகின்றன. மேலும் சம காலத்தில் எழுதப்பட்ட பாளி, குறிப்பாகச் சிங்கள நூல்கள் சிலவற்றிலும் யாழ்ப்பாண மன்னர் சிலர் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அத்துடன் இவ் வரிசையில் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் இதுபற்றிக் கூறும் சில சாதனங்களும் இன்று இப்பகுதியில் எஞ்சியுள்ள சில கட்டட அத்திபாரங்களும், வேறு சிலவும் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாண அரசு பற்றிய வரலாற்று மூலங்களை இருபெரும் பிரிவுகளாக வகுக்கலாம். அவையாவன

1. இலக்கிய மூலங்கள்
2. தொல்லியல்

மூலங்கள் என்பனவாகும்.II. இலக்கிய மூலங்களில் காணப்படும் நூல்கள் மொழி அடிப்படையில் 2 வகைப்படுத்தலாம்.

3. தமிழ் நூல்கள்

I வையாபாடல்

II கைலாயமாலை

III யாழ்ப்பாண வைபவ மாலை

4. வடமொழி நூல்கள் I தக்ஷிண கைலாச மஹாத்மியம்
5. பாளி, சிங்கள நூல்கள்
6. வெளிநாட்டவர் தரும் சான்றுகள்

I இபன் பதுதா

II போர்த்துக்கேய நூல்கள்

III ஒல்லார்ந்தர் நூல்களும் ஆவணங்களும்.

**தொல்லியல் மூலங்கள்**

நல்லூரிலும் அதனைச் சூழ்ந்துள்ள பகுதியிலும் இதுவரை கிடைத்துள்ள தொல்லியற் சின்னங்களைப் பின்வருமாறு வகுத்துக் கூறலாம். அவையாவன.

1. கட்டடங்கள்
2. சிற்பங்கள்
3. நாணயங்கள்
4. சாசனங்கள்
6. ஏனைய சின்னங்கள்
5. இடப் பெயர்வுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் மந்திரி மனை

**ஜெ. பார்த்திகா**
பொருளாளர், தமிழ்மன்றம்.

நல்லூர் இராசதானியின் வரலாற்றினை எடுத்தியம்பும் கட்டிடங்களிலும் கட்டிட எச்சங்களிலும் ஆரம்பக் கட்டமைப்பில் மாற்றங்களுடன் காணப்படும் நல்லூர் கந்தசுவாமி கோயில், சட்டநாதர் சிவன்கோயில், வெயிலுகந்த பிள்ளையார் கோயில், கயிலாசநாதர் கோயில், வீரமாகாளியம்மன் கோயில், கைலாசப்பிள்ளையார் கோயில், பூவராயர் கோயில் என்பனவும் ஆரம்பக் கட்டமைப்பில் அதிக மாற்றங்களின்றித் தொல்லியற் சின்னங்களாகக் காணப்படும் மந்திரிமனை, யமுனை ஏரி, பூதத் தம்பி வளைவு முத்திரை மண்டபம் என்பனவும் மிக முக்கியமானவை. புராதன அரண்மனை அமைந்திருந்த சங்கிலித் தோப்பினை ஊடுருவிப் பருத்தித் துறை வீதி அமைக்கப்பட்டதும் மேற் குறித்த கட்டமைப்புகள் ஒருங்கே கொண்டமைந்திருந்தஅரண்மனைவளாகம் இரண்டாகத் துண்டிக்கப்பட்டதும் அத னால் பருத்தித்துறை வீதியின் மேற்குக்கரையில் சட்டநாதர் சிவன் கோயிலிற்குத் தெற்காக நல்லூர் மந்திரி மனை அமைந்து விளங்குகின்றது.

- கி.பி.1478 ஆம் ஆண்டு சிங்கைப் பரராசசேகரன் என்பான் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாகினான். சுப்ப மல்குமரயாவினால் அழிவுற்ற கோயில்கள் கட்டிடங்கள் என்பனவற்றினை இவன் புனருத்தாரணம் செய்தான். பல புதிய கட்டிடங்கள் அமைத்து நல்லூரை மேலும் சிறப்புமிக்க நகராக்கினான். அவன் காலத்திலேயே இந்த மந்திரிமனை அமைக்கப்பட்டிருக்க வேண்டும். பரராசசேகரின் பின்னர் தனது மூத்த சகோதரர்களைக் கொன்றழித்து மன்னனாகிய சங்கிலி செகராசசேகரன் 1517 இல் யாழ்ப்பாண அரசின் அரியணையில் அமர்ந்து கொண்டான். தனது தமையனாராகிய பரநிருபசிங்கனைத் தனது பேச்சாலும் பலத்தாலும் அடக்கித் தனக்கு மந்திரியாக்கிக் கொண் டான், மந்திரியாகிய பரநிருபசிங்கன் வசித்த மாளிகைதான் இந்த மந்திரி மனையாகும்.

இன்று காட்சி தருகின்ற மந்திரி மனைக் கட்டிடம் பத்தொன்பதாம் நூற்றாண்டினைச் சேர்ந்த ஒல்லாந்தர் கால முன் முகப்பினையும் பதினைந்தாம் நூற்றாண்டினைச் சேர்ந்த தமிழரசின் பிரதான கட்டிடத்தையும் கொண்டமைந் துள்ளது. பிரதான கட்டிடம் கல்லினாலும் சுதையினாலும் சுதேச கட்டமைப்பில் அமைக்கப்பட்டது. முன்முகப்பு ஒல்லாந்த மண்டபத்தினை நீக்கிவிட்டு நோக்கில் பழைய கட்டிடத்தின் முகப்பினைக் காணலாம். கற்றூண்களின் மீது மரச்சிற்பப் பொதிகை வேலைப் பாட்டின் மேல் இரண்டு யானைத் தந்தங்களை பொருத்தியது போன்ற குழிவு வளைவிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு மரச்சட்ட கங்கள் கூரை முகட்டினைத் தாங்கி நிற்கின்றன. இதுதான் பழைய மந்திரி மனையின் முகப்புத்தோற்றம். இம் முகப்பு வாயிலில் உள்ள படியில் கால் பதித்து முன் விறாந்தையில் ஏறுவோம், வாயிலின் இரண்டு பக்கங்களிலும் அரைச்சுவரோடான இரு கல்லிருக்கைகள் காணப்படுகின்றன. மாளிகையில் வசித்த பிரமுகரைச் சந்திக்க வருவோர் அமர்ந்து காத்திருக்கும் இருக்கைகள் அவை. முன் விறாந்தையைக் கடந்ததும் அகன்ற உயர்ந்த வேலைப்பாட்டுடன் கூடிய வீட்டுக் கதவு

காணப்படும். அதனைக் கடக்கில் நாம் பெரியதொரு மண்டபத்திற்குள் நுழையலாம். மிக உயர்ந்த கூரை, காற் றோட்டமான விசாலமான மண்டபம். மேற்குப் பக்கத்ததில் இரண்டு அறை கள். அவற்றின் கதவுகள் இம்மண்டபத்தில் உள்ளன. மண்டபத்தின் தெற்குப் பக்கத்தில் பெரியதொரு அறை. அதன்மீது மாடி அறை ஒன்று. மாடி அறைக்கு ஏறும் மரப்படிகள் அங்குள்ளன.

மந்திரிமனையின் வடக்குப் பக்கத்தில் பழைய காலக்கிணறு ஒன்றுள்ளது. அதன் அரைப்பகுதி கட்டிடத்திற்கு உள்ளும் அரைப்பகுதி கட்டிடத் திற்கு வெளியிலும் அமைந்துள்ளன. கட்டிடத்திற்குள்ளமைந்த பகுதி நவீன குளியலறைத் தோற்றத்தினைத் தரு கின்றது. இக்கிணற்றிற்கும் பகரவடிவ யமுனாஏரிக்கும் நிலத்தடியில் ஒரு - சுரங்கம் இருப்பதான ஐதீகம் உள்ளது, மன்னன் சிங்கைப்பரராசசேகரன் யமுனா நதியின் நீரை ஏரியில் பெய்து பகர ஏரியை அமைத்த போது மந்திரி மனையின் கிணற்றிலும் அப்புனித நீர் கலக்க சூத்திர மார்க்கம் செய்ததாக ஐதீகம், மந்திரி மனையின் பிற்பக்கத் தில் உடைந்த சிதைந்த சுவர்கள் காணப்படுகின்றன. கட்டிடத்தின் தென் மேற்குப் பக்கத்தில் நிலவறை ஒன்று காணப்படுகிறது. அது இன்று சிதைந்து வாயில் மூடிக் காணப்படுகின்றது. 1967 ஆம் ஆண்டு அந்த நிலவறையினுள் இறங்க எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது.

**கு. வன்னியசிங்கம்**

தெல்லிப்பளையைச் சேர்ந்த பிரபல வழக்கறிஞர் குமாரசாமி அவர்களின் மகனாக 13.10.1911 ஆம் ஆண்டு பிறந்தார். தமிழ் புலமையாளர். சட்ட மேதை. தமிழ் மக்கள் மத்தியில் சமத்துவம் பேண உழைத்த பெருமகன். ஆரம்பத்தில் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சியில் இருந்த இவர் பின்னர் எஸ். ஜே வி.செல்வநாயகம் அவர்கள் ஆரம்பித்த இலங்கைத்தமிழரசுக் கட்ச்சியில் சேர்ந்து பல்லாண்டுகள் கோப்பாய்த் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றிக்கொண்டிருந்த வேளை தனது 48 அவது வயதில் காலமானார். கோப்பாய்த் தொகுதி மக்களின் பேராதரவுடன் பாராளுமன்றம் சென்று அவர்களின் மேம்பாட்டுக்காகவும் பெரிதும் உழைத்தமையால் இவரை கோப்பாய்க் கோமான்" என்று அழைத்தனர். இவரது அர்ப்பணிப்பான அரசியல் , சமூக சேவையினை நன்றியுடன் நினைவு கூருமுகமாக நீர் வேலியில் அவருக்குச்சிலையெடுக்கப்பட்டு, அவ்விடத்தில் ஆண்டு தோறும் நினைவஞ்சலிக்கூட்டம் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யமுனா ஏரி

**ஜெ . டினோசன்**
தலைவர், தமிழ்மன்றம்.

யாழ்ப்பாணத்தை தமிழ்மன்னர்களின் தொழில் நுட்பத் திறனைப் பறை சாற்றும் தொல்லியல் சான்று களில் யமுனா ஏரியும் குறிப்பிடத் தக்கது ஆகும். இது நல்லூர்-பருத்தித்துறை வீதியில் உள்ள சங்கிலித்தோப்பு கல்தோரண வாசலுக்குக் கிழக்கே சில யார் தூரத்தில் அமைந்துள்ளது. 13

1 - யாழ்ப்பாண மன்னர்களில் ஒரு மகனான சங்கை பரராசசேகரன், தனது சமய ஆர்வ மிகுதியினால் தானும் குடிகளும் நன்மை பெறக் கருதி, 1478ஆம் ஆண்டில் இந்தியாவின் யமுனா ஆற்றில் இருந்து நீரைக்கொண்டு வந்து இங்கு பிர திஷ்டை செய்ததாலேயே இப் பெயர் உருவான தாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்,

“ப” வடிவில் அமைந்த இவ் வேரி, பொழிந்த முருகைக் கற்களையும், வெள்ளைக் கற்களை யும் கொண்டு கட்டப்பட்டுள் ளது. இக்கேணிக்குள் இறங்கிச் செல்ல வசதியாகச் சிறிய படிக் கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ் ஏரியில் அரசர் தமது பாது காப்புக்கருதி சுரங்கங்கள் அமைத்ததாக கூறப்படுகிறது. இச்சுரங் கங்களில் ஒன்று நல்லூர் சட்டம் நாதர் ஆலயத்துக்கு அருகாமையில் உள்ள மந்திரி மனையுடன். தொடர்புடையது. தற்போது இச் சுரங்கப்பாதை அடைக்கப்பட்டுக் காணப்படுகிறது

என்பதை இங்குள்ள செங்கட்டி கள், கலை வேலைப்பாடுடைய சுண்ணாம்புச் சதர் சாந்தினாலான தூண்கள், பழமையான ஓடுகள், மட்பாண்டங்கள் என்பன இன் றும் உறுதிசெய்கின்றன. சிலர் இவ் விடங்களில் அரசமகளிர் குளிப்பதற்குரிய மண்டபங்கள் இருந்ததாக கருதுகின்றார்.

இப்பகுதியில் அமைந்துள்ள மந்திரிமனை, சங்கிலியின் தோப்பு தோரணவாசல் என்பவை ஒல்லாந்தர் காலக்கலை மரபை பிரதிபலித்து நின்றாலும், ஒல்லாந் தர் காலத்துக்கு முன்னரேயே யாழ்ப்பாண மன்னர் கால கட்டிடத் தொகுதிகள் இங்கு இருந்ததென்ற உண்மையை தொல்லிய லாளர்கள் பலர் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். அத்துகைய ஒரு வரலாற்றுப்பாரம்பரியம் இவ்விடத்துக்கு இருந்தமையால் தான், ஒல்லாந்தர் தமது மரபுக்கேற்ப தமிழ்மன்னர்களின் கட்டிடத் தொகுதிகளை மாற்றி அமைத்துள்ளனர்.

எஞ்சிப்போயிருக்கும் இத் தொல்லியற் சான்றுகளும் அழிந்து - மறைந்து போகாமல் பேண வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வைபவமாலை

எஸ். பிரியங்கா
(விஞ்ஞானத் துறை)

ஈழவள நாட்டிலே, அதன் வட, கிழக்குப் பகுதிகளிலே பதின்மூன்றாம் நூற்றாண்டிலே ஒரு தமிழ் இராச்சியமும் வன்னிகள் என்றால் பல ஈழவள நாட்டிலே, அதன் வட, கிழாக்குப் பகுதிகளிலே பதின்மூன்றாம் நூற்றாண்டிலே ஒரு தமிழ் இராச்சியமும் வன்னிகள் என்ற பல குறுநில அரசுகளும் எழுச்சி பெற்றதன் விளைவாக அவற்றின் தோற்றம், வளர்ச்சி ஆகியன பற்றிய வரலாற்று மரபுகளை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்ட நூல்களிலே யாழ்ப்பாண வைபவமாலை என்பதே பிரதானமானது. இப்பொழுது கிடைக்கின்ற உரைநடையிலுள்ள ஈழத்துத் தமிழ் நூல்களிலே யாழ்ப்பாண வைபவமாலை, தேசவழமை ஆகிய இரண்டுமே மிகப் பழையவை. மாதகல் மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலையை எழுதினார். இவர் வையாபுரி ஐயரின் மரபில் வந்தவர் என்பது ஓர் ஐதீகம். யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த ஒல்லாந்த அதிகாரிகளின் வேண்டுதலுக்கிணங்கியே யாழ்ப்பாண வைபவமாலை எழுதப்பெற்றது. இந்நூல் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே எழுதப்பட்டதென்று கொள்ளப்படுகிறது.

இந் நூலின் மொழிநடை செந்தமிழ் வழக்காகும். அதுவும் ஈழத்தமிழர்களுக்குச் சிறப்பாகவுள்ள நடையாகும். அது எல்லோரும் எளிதிலே புரிந்து கொள்ளக் கூடிய வகையிலே இலகுவான நடையிலே எழுதப்பட்டுள்ளது. வையாபாடல், கைலாயமாலை, இராசமுறை, பரராசசேகரன் உலா போன்ற நூல்களை ஆதாரங்களாகக் கொண்டே தாம் யாழ்ப்பாண வைபவமாலையை எழுதியதாக மயில்வாகனப்புலவர் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாண வைபவமாலை வர்ணிக்கும் யாழ்ப்பாணத்து வரலாற்றை ஆரியச்சக்கரவர்த்திகளுக்கு முற்பட்டகாலம், ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் என இரு பிரிவுகளாக வகுத்து நோக்கலாம். ஆரியச்சக்கரவர்த்திகளுக்கு முற்பட்ட காலத்தைப் பற்றிய கதைகள் பெரும்பாலும் வரலாற்று ஆதாரமற்றவை. ஆரியச்சக்கரவர்த்திகள் சிங்கை நகரிலிருந்து யாழ்ப்பாணத்தை ஆண்டதனாற் சிங்கையாரியர் என்ற விருதினையும் பெற்றிருந்தனர்.

முதலாம் சிங்கையாரியன் காலத்தையடுத்து 1450 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த அரசரின் வரிசையை யாழ்ப்பாண வைபவமாலையில் ஆசிரியர் இவ்வாறு அமைத்துள்ளார்

குலசேகர சிங்கையாரியன்
குலோத்துங்க சிங்கையாரின்
விக்கிரம சிங்கையாரின்
வரோதய சிங்கையாரின்
மார்த்தாண்ட சிங்கையாரின்
குணபூசண சிங்கையாரின்
வீரோதய சிங்கையாரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயவீர சிங்கையாரின்
குணவீர சிங்கையாரின்
கனகசூரிய சிங்கையாரின்

இப்பத்து மன்னர்களைப் பற்றியும் மிகச் சுருக்கமாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. வேளாண்மை, கல்வி முதலியவற்றின் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய சேவைகளைப் பற்றியும் பிற அரசர்களுடன் அவர்கள் கொண்டிருந்த தொடர்புகள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. செய்வீரசிங்கையாரின் முத்துச்சலாபத்தைக் குறித்துப் புவனேகபாகுவுடன் புரிந்த போர் பற்றி யாழ்ப்பாண வைபவமாலை தரும் குறிப்புகள் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே ஆரியச்சக்கரவர்த்தி நடத்தியுள்ள போரின் விபரங்களைப் பெரிதும் ஒத்துள்ளன. பொதுவாக நோக்குமிடத்து யாழ்ப்பாண அரசர்களின் வரலாற்றை விரிவாகவும் தெளிவாகவும், வரன்முறை அடிப்படையிலும் யாழ்ப்பாண வைபவமாலையிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது.



**கோவை மகேசன்**

22.03.1938–04.07.1992 மகேஸ்வர சர்மா எனும் இயற்பெயர் கொண்ட கோவை மகேசன் அவர்கள் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சோ. இரத்தின சபாபதி ஐயர், இரத்தினம்மா தம்பதிகளின் புதல்வர். ஆரம்பக்கல்வியை கோப்பாய் நாவலர் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் பயின்றார். மனைவி விசாலாட்சி. சிலகாலம் யாழ் கச்சேரி தேர்தல் திணைக்களத்திலும் பணியாற்றினார். சுதந்திரன் வாரப்பத்திரிகை, சுடர் எனும் மாத இதழ் என்பனவற்றின் ஆசிரியராகப் பணியாற்றியவர். சென்னையில் காலமானார். மறவன்புலவு க. கச்சிதானந்தன் இவரைப் பற்றி எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழராஜா எல்லாளன்

எஸ். தர்சிகா
(ஆரம்பக்கல்வித் துறை)

கி.மு 3 ஆம் நூற்றண்டிற்கும் 1 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட 220 ஆண்டு கால அனுராதபுர அரசின் வரலாற்றை நோக்கினால் இக்கால எல்லைக்குள் ஆட்சி புரிந்த 19 மன்னர்களுள் 8 தமிழ் மன்னர்கள் 81 வருடங்கள் ஆட்சி புரிந்தனர். ஆயினும் தமிழ் மன்னர்களின் ஆட்சியை ஒரு சில செய்யுட்களில் மட்டுமே கூறமுடிகிறது. எல்லாளன் என்ற தமிழ் மன்னனை வெற்றி கொண்டதன் மூலம் துட்டகாமினியின் ஆட்சியை 843 செய்யுள்களில் மகாவம்சம் கூறுகின்றது. ஆனால் 44 வருடங்கள் நீதி தவறாது ஆட்சி நடாத்திய எல்லாளனை 21 செய்யுள்களில் மட்டுமே கூறுகின்றது.

கி.மு 145 ஆம் ஆண்டு எல்லாளன் உத்தர தேசத்திலிருந்து பெரும் படையுடன் வந்து அனுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். மீண்டும் இலங்கையின் ஆட்சி தமிழரிடம் வந்து சேர்ந்தது. எல்லாளனை சோழ இளவரசனாகவும், தென்னிந்தியாவிலிருந்து படையெடுத்து வந்தவனாகவும் பாளி இலக்கிய நூல்கள் கூறுகின்றன. ஆனால் அத்தகைய சோழ மன்னன் இருந்ததாக தமிழ் நாட்டு வரலாற்றில் எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை. ஏனெனில் வவுனியாக் குளத்தை முதன் முதலில் கட்டியவன் எல்லாளன் என அடையாளம் காணப்படுகிறது.

பாளி இலக்கியங்களில் "எலறா" என்று அழைக்கப்படும் தமிழ் மன்னன் எலேலன், எல்லாளன் எனத் தமிழில் அழைக்கப்பட்டு வருகின்றான். எல்லாளன் இலங்கையை 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனின் நீதி தவறாத ஆட்சியை புகழ்ந்துரைக்கும் பாளி நூல்கள், இவன் இந்து மதத்தினைத் தழுவியவன் எனக் கூறியுள்ளது. இவன் தனது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும் பழைய மதநம்பிக்கையைக் கைவிடவில்லை என மகாவம்சம் கூறுகின்றது. இங்கு பழைய மதநம்பிக்கை என இந்து மதத்தையே குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்லாளன் பகைவர்க்கும் நண்பர்களுக்கும் சமநீதி வழங்கியதாகக் கூறும் மகாவம்சம் அவனது நீதி தவறாத ஆட்சியை மனுநீதிச் சோழனின் கதைகளோடு இணைந்தும் கூறியுள்ளது. எல்லாளனின் சயன அறையில் ஒரு ஆராட்சி மணி கட்டப்பட்டிருந்தது. எந்த நேரமும் கோட்டை வாசலிற் தொங்கும் கயிற்றை இழுத்து இந்த மணியை ஒலி எழுப்பின்; மன்னன் உடன் வந்து விசாரித்து துயர் தீர்ப்பான்.

எல்லாளனின் நீதி வழுவாத தன்மையை பல ஐதீகக் கதைகளைக் கொண்டு செங்கோல் ஆட்சி புரிந்த மன்னன் என மகா வம்சம் கூறுகின்றது. எனினும் மகா வம்சம் கூறுகின்ற ஒரு கதை எல்லாளனின் மத ஒருமைப்பாட்டை அதாவது சமயத் துறையால் பௌத்தத்திற்கு ஆதரவளித்தான் என்பதையும் போற்றிப் பாதுகாத்தான் என்பதையும் நிரூபிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாளன் தேரில் ஏறி சேத்திய கிரி சென்ற போது தேரின் அச்சு தாதுகோபுரம் ஒன்றில் பட்டு, தாது கோபுரத்திற்கு சேதம் ஏற்படுத்தியது. உடனே மன்னன் தேரிலிருந்து குதித்து "தனது தலையை உடனடியாக சீவி விடுமாறு" கூறினான். தெரியாமல் நிகழ்ந்த நிகழ்வு இது, மறு சீரமைக்கலாம் என்று அமைச்சர்கள் கூறிய பின் அமைதியானான். 15 கற்கள் மட்டுமே சிதைவடைந்திருந்தன. ஆயினும் அதற்காக பதினாறாயிரம் கஹாப் பணங்களை புனரமைக்க எல்லாளன் செலவு செய்தான். எல்லாளனின் ஏகாதிபத்தியம் இலங்கை முழுவதும் பரவி இருந்தது. கல்யாணி, உறுகுணை ஆகி இரு தென் இலங்கைச் சிற்றரசர்கள் எல்லாம் எல்லாளனின் ஆட்சியை ஏற்றிருந்தனர். மாமன்னன் எல்லாளனுடைய நீதி தவறாத ஆட்சி 44 வருடங்களில் கி.மு101 இல் முற்றுப் பெற்று சிங்கள ஆட்சி அனுராதபுரத்தில் அரசாட்சி தொடங்கியது.

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**

இச்சங்கம் வெள்ளவத்தையில் / இல.07,57 ஆம் ஒழுங்கையில் அமைந்துள்ளது. இச்சங்கத்தில் தொன்மைக் காலம் முதல் இன்றுவரை வெளி வந்த ஏராளமான தமிழ் நூல்கள், சஞ்சிகைகள் முதலானவற்றைக்கொண்ட பெறுமதிமிக்க நூலகம் ஒன்றுள்ளது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சர்வதேசப் புகளுக்கு இது முக்கிய காரணம். மேலும் இத் தமிழ் சங்கத்தில் இருந்து 1960 ஆம் ஆண்டு முருகு என்ற பெயரில் ஒரு காத்திரமான மலர் வெளிவந்தது இதுவும் மறுபதிப்புச் செய்யப்பட வேண்டியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கோட்டையின் வரலாறு

ந.கலையரசி
(கணிதத் துறை ஆங்கிலம்)

போர்த்துக்கேய பறங்கியர்கள் யாழ்ப்பாணத்தை 1621 ஆம் ஆண்டு கைப்பற்றிக் கொண்டார்கள். பறங்கிகளின் தளபதியான பிலிப்தேஒலிவேற நல்லூரைத் தன்னுறைவிடமாக்கிக் கொண்டான்.

நல்லூரில் பெரிய கோயிலாக நல்லூர் கந்தசுவாமி கோயில் விளங்கியது. இன்று முத்திரைச் சந்தியில் கிறிஸ்தவ தேவாலயம் இருக்கும் இடத்தில் அக்கோவில் வானளாவிய ராஜகோபுரங்களுடனும் கோட்டை போன்ற மதிற் சுவர்களுடனும், தென்னிந்திய கோயில்களின் பாரிய வடிவில் அமைந்திருந்தது. பிலிப்தே ஒலிவேற இப்பெரிய கோயிலை இடித்துத் தரைமட்டமாக்குமாறு கட்டளையிட்டான். நல்லூர் கந்தசுவாமி கோயிலை அடி அத்திவாரத்தோடு கிளறிக் குவிக்குமாறு கட்டளையிட்டான். முருகைக் கற்களினாலும், சுண்ணாம்புக் கற்களினாலும் சுதை கொண்டு கட்டப் பட்ட அக் கோயிலின் கற்கள்ற மலை போலக் குவிந்தன.

இப்பெரிய கோயிலில் கிறீஸ்தவர்கள் அல்லாதவர்கள் மிக ஈடுபாடு உள்ளவர்களாக இருந்தனர். அவன் அதனை அழிக்காது விட்டால் அவன் விரும்பிய அனைத்தையும் வழங்குவதாக யாழ்ப்பாணப் பிரமுகர்கள் அவனுக்கு வாக்குறுதி அளித்தனர். ஆனால் அவன் ஒரு மதப்பற்று மிக்க கத்தோலிக்கனாதலால் அவர்களின் நடவடிக்கை அக் கோயிலை அழிப்பதற்கு கொண்டிருந்த விருப்பத்தினை மேலும் அதிகரிக்க வைத்தது. எனவே அதனை அத்திவாரமில்லாது அழிக்குமாறு கட்டளையிட்டான். என குவறோஸ் பாதிரியார் தனது நூலிற் கூறுகிறார். ஒலிவேறா யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளிலிருந்த சைவ வைணவ ஆலயங்கள் அனைத்தையும் உடைத்துத் தள்ளுமாறு பணித்தான். போர்த்துக்கேய பறங்கியர்களின் கண்களிற் பட்ட சைவக் கோயில்கள் அனைத்தும் கற்குவியல் ஆக்கப்பட்டன.

நல்லூரில் இருந்து போர்த்துக்கேய ஆட்சியை பிலிப்தே ஒலிவேறா நடத்திய போதிலும், தமிழர்களுடன் நடந்த போர் முடியவில்லை. சுதந்திர வேட்கை கொண்டு கிழர்ந்தெழுந்த தமிழ் வீரர்கள் தங்களது தாயக மண்ணிலிருந்து அந்நியரை துரத்தி விடும் எண்ணம் கொண்டவர்களாக இடைக்கிடையே படை திரட்டிப் பறங்கிகளை தாக்கி வந்தனர்.

நல்லூரில் சமதரையில் கிழர்ந்தெழும் தமிழர்களுக்கு மத்தியில் தங்கியிருப்பதிலுள்ள பாதுகாப்பின்மையைப் போர்த்துக்கேயத் தளபதி புரிந்து கொண்டான். தானும் தனது வீரர்களும், பறங்கியர்களும் தங்கியிருப்பதற்கு பாதுகாப்பான கோட்டை இருக்க வேண்டியதன அவசியத்தை ஒலிவேறாவுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதல்கள் உணர்த்தின அதனால், நல்லூரில் இடித்துக் குவிக்கப்பட்ட கற்களைப்பற்றி பண்ணையில் ஒரு கோட்டையைக் கட்டி முடிக்க பிலிப்தே ஒலிவேறா விரும்பினான்.

முஸ்லிம் வர்த்தக சாலைகள் அமைந்திருந்த இடம், கோட்டை அமைப்பதற்கான மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சாவினால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டது கொள்ளையிடப்பட்ட முஸ்லிம் பண்டகசாலைகள் இருந்த இடத்தில் யாழ்ப்பாணக் கோட்டைய கட்ட திட்டமிடப்பட்டது. எவ்விடத்தின் அமைவிடம் பலமான கோட்டையொன்றினை அமைப்பதற்கு மிக வாய்ப்பானதாகவிருந்தது.

போக்குவரத்துக்கு வாய்ப்பான கடனீரேரி, அருகிலிருந்த கொழும்புத் துறை, அலுப்பாந்தித்துறை, அகழிகளுக்கு நீர் தரக்கூடிய கடல், பகைவர்களின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு வழங்கக் கூடிய இடவமைப்பு என்பன ஒலிவேறாவுக்கு திருப்தியை தந்தன. தமிழ் சைவர்கள் வாழும் நல்லூர் நகரில் இருந்து விலகி பாதுகாப்பான அரண் ஒன்றினை அமைத்துக் கொள்வதுடன் கத்தோலிக்கர்கள் மட்டும் வாழ்கின்ற 'பறங்கித் தெரு ' (சீதாரி) என்ற புதியதொரு நகரினையும் உருவாக்க அவன் எண்ணம் கொண்டான்.

கோட்டை கட்டுவதற்கான இடம் தெரிந்தெடுக்கப்பட்டும், அதனைக் கட்டுவதற்காக கற்கள் அவ்விடத்தில் சேகரிக்கப்பட்டன. முதற்கட்டமாக நல்லூர் பெரிய கோயிலை இடித்தால் கிடக்கும் கற்குகைகள் அவ்விடத்திற்குக் கொண்டுவரப்பட்டன. முருகைக் கற்கள், சுண்ணாம்புக் கற்கள், செங்கட்டிகள் என்பன பாரிய கூடார வண்டிகளில் முதலில் ஏற்படும் பண்ணைக் கரையில் சேர்க்கப்பட்டன.

அவை கால தாமத்தை ஏற்படுத்துகிறது என்பதையுனர்ந்த ஒலிவேறா, யாழ்ப்பாண மக்களையும் தனது படைவீரர்களையும் நல்லூரிலிருந்து பண்ணை வரை மனிதச் சங்கலியாக வரிசையாக நிற்கவைத்துக் கற்களை வேகமாகக் கரம்மாற்றி அனுப்பிப் பண்ணைக் கரையில் குவிப்பித்தான். அதே முறையில் யாழ்ப்பாணத்தில் இடித்து தள்ளப்பட்ட சைவ ஆலயங்களில் கற்களையும் பண்ணைக் கரையில் சேர்ப்பித்தான். குவித்த கற்கள் கோட்டை கட்டுவதற்கு போதுமானதாக இருக்கவில்லை. எனவே எஞ்சிய கோயில்களையும் அவசியமாயின் சைவரின் பெரும் வீடுகளையும் அவன் இடித்து தள்ளிவிடுவான் என்ற பயத்தில் கோட்டை கட்டுவதற்குத் தேவையான முருங்கைக்கற்களை யாழ்ப்பாணத்திற்கு அருகில் இருக்கும் தீவுகளில் இருந்து தோணிகள் மூலம் சேகரித்துத் தருவதாக யாழ்ப்பாணத்து முதலிமார்களும் வன்னிமைகளும் வலிந்து ஒத்துக் கொண்டனர்.

போர்த்துக்கேயரின் யாழ்ப்பாணக் கோட்டை **1625** ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட கோட்டை இன்று அழிந்துள்ள கோட்டையைப் போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திர வடிவத்தினை ஐங்கோண வடிவத்தை கொண்டதன்று அது ஒரு சதுர வடிவக் கோட்டையாகும்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டை போன்று வேறு பகுதிகளிலும் கோட்டையைக் கட்டியுள்ளனர். ஊர்காவற்றுறை, காங்கேசன் துறை, பரித்தித்துறை, வெற்றிலைக்கேணி, இயக்கச்சி, ஆனையிறவு முதலான பகுதிகளிலும் இவர்கள் கோட்டைகளை அமைத்தனர். ஆனால் இவை யாழ்ப்பாணக் கோட்டையைப் போன்று பெரியனவல்ல.

**வடகோவை சபாபதி நாவலர் (1844.1903)**

சபாபதி நாவலர் கோப்பாய் வடக்கில் சுயம்புநாதபிள்ளை, தெய்வயானை தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். ஆரம்பக்கல்வியை ஜகந்நாத ஐயரிடமும் தமிழ், சமஸ்கிருதம் இரண்டையும் நீர்வேலிச் சிவசங்கர பண்டிதர் (1821–1891) அவர்களிடமும் கற்றார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் (1822–1879), நாவலரின் மருகரான வித்துவ சிரோமணி ந.ச.பொன்னம்பல பிள்ளை (1836–1902) ஆகியோரிடத்தும் பாடங்கேட்டவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் எனும் மூன்று மொழிகளிலும் பாண்டி மத்தியமுடைய இவர், நாவலரது ஏற்ப்பாட்டில் அவரின் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இவர் சுழிபுரம் சரவணமுத்து என்பவரின் மகளைத் திருமணம் புரிந்தார். யேசுமத சங்கற்ப நிராகரணம் , சிதம்பர சபாநாதபுராணம், திராவிடப் பிரகாசிகை, இலக்க விளக்கப்பதிப்புரை மறுப்பு முதலான நூல்களின் ஆசிரியர். மாகறல் கார்த்திகேய முதலியார், வதிரி சி.தாமோதரம்பிள்ளை பண்டிதர் மாவை வே. விசுவநாதப்பிள்ளை முதலானவர்கள் இவரின் மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் அரசின் வரலாற்றுத்தடம்

**ப. அபிராமி**
செயலாளர், தமிழ்மன்றம்.

தமிழர் பாரம்பரியத்தின் தேக்க நிலைகளை பறைசாற்றுவனவாக தமிழர் பண்பாட்டின் பண்டைய சின்னங்களின் பாதுகாப்பற்ற தன்மைகள் வெளிப்படுத்தப்படுகின்றன, பண்பாட்டுச் சின்னங்களை பாதுகாப்பதில் தமிழர்கள் பின்தங்கியவர்கள் என்பது தெரிந்த விடயமே. பண்டைய சின்னங்களை பாதுகாப்பதில் நம்மவர்கள் அக்கறை யற்றவர்கள் என்பதனை பறைசாற்றுவதாக நல்லூர் தொல்லியல் சின்னங்கள் காணப்படுகின்றன.

நல்லூர் இராசதானியின் வரலாற்றினை எடுத்தியம்பும் கட்டிடங்களிலும் கட்டிட எச்சங்களிலும் ஆரம்பக் கட்டமைப்பில் மாற்றங்களுடன் காணப்படும் நல்லூர் கந்தசாமி கோயில், சட்டநாதர் சிவன்கோயில், வெயிலுகந்த பிள்ளையார்கோயில், கயிலாசநாதர் கோயில், வீரகாளியம்மன் கோயில், கைலாசப்பிள்ளையார் கோயில், பூதராயர் கோயில் என்பனவும் ஆரம்பக்கட்டமைப்பில் அதிக மாற்றங்களின்றித் தொல்லியற் சின்னங் களாகக் காணப்படும் மந்திரிமனை, யமுனை ஏரி, பூதத்தம்பி வளைவு, முத்திரை மண்டபம் என்பனவும் மிக முக்கியமானவை.

மந்திரிமனை, யமுனைஏரி, பூதத்தம்பிவளைவு, முத்திரைமண்டபம் என்பன காணப்படும் இக்காணியின் பெயர் சங்கிலித் தோப்பென அழைக்கப்படுகிறது. இது மன்னனுக்குரியதா, அல்லது மந்திரிக்குரியதா வென்பதை தீர்மானிப்பது சிறிது சிக்கலானது. ஆனாலும் இப்பகுதிக்கண்மையில் அரச வெளி, அரச வீதி, சங்கிலியன் வீதி, பண்டாரக்குளம், பண்டாரமாளிகை, வளைவு என்பன அரசகுலத்திற்குரிய அதிமுக்கியமான பகுதிகள் அதிகமாக இருப்பதும் சிந்தனைக்குரியது. தமிழரசுக்கு சொந்தமான தோப்பொன்று இப்பகுதியில் இருந்திருக்கலாம் பின்னாளில் அன்னியர் ஆட்சிக்காலத்தில் அடங்கிப்போயிருக்கலாம். ஆட்சி புரிந்த தமிழ் மன்னரின் வம்சத்தவர்கள் காலகட்டத்தில் அல்லது அதற்குப்பின்னர் மந்திரியொருவனின் இருப்பிடமாக இத்தோப்பு இருந்திருக்கலாமென நினைக்கலாம் என்றொரு கருத்துமுண்டு.

கி.பி 1478 ஆம் ஆண்டு சிங்கைப் பரராசசேகரன் என்பான் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனாகினான். அவன் காலத்திலேயே இந்த மந்திரிமனை அமைக்கப்பட்டிருக்க வேண்டும். பரராசசேகரனின் பின்னர் தனது சகோதரர்களை கொன்றழித்து மன்னனாகிய சங்கிலி செகராசசேகரன் 1517 இல் யாழ்ப்பாண அரசின் அரியணையில் அமர்ந்து கொண்டான். தனது தமையனாகிய பரநிருபசிங்கனைத் தனது பேச்சாலும் பலத்தாலும் அடக்கித் தனக்கு மந்திரியாக்கிக் , கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரியாகிய பரநிருபசிங்கன் வசித்த மாளிகைதான் இந்த மந்திரி மனையாகும் என்றொரு மற்றுமொரு கருத்துமுண்டு.

ஐரோப்பிய திராவிடக் கட்டடக் கலையின் கூறுகளை இக்கட்டடத்தில் காணலாம். இன்று காட்சி தருகின்ற மந்திரி பர் மனைக்கட்டிடம் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒல்லாந்தர் கால முன்முகப்பினையும் சேர் பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழரசின் பிரதான கட்டிடத்தையும் கொண்டமைந்துள்ளது. பிரதான கட்டிடம் கல்லினாலும், சுதையினாலும் சுதேச கட்டமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது. முன் முகப்பு ஒல்லாந்த மண்டபத்தினை நீக்கிவிட்டுப்பார்த்தால் பழைய கட்டிடத்தின் முகப்பினைக் காணலாம். கற்றூண்களின் மீது மரச்சிற்பப் பொதிகை வேலைப்பாட்டின் மேல் இரண்டு யானைத்தந்தங்களைப் பொருத்தி யதைப்போன்ற குழிவு வளைவிலான இரு மரச்சட்டங்கள் கூரை முகட்டினைத்தாங்கி - நிற்கின்றன. இதுதான் பழைய மந்திரி மனையின் முகப்புத்தோற்றம். இம் முகப்பு வாயிலில் உள்ள படியில் கால் பதித்து முன் விறாந்தையில் ஏறினால் வாயிலினில் இரண்டு பக்கங்களிலும் அரைச்சுவரோடான இரு கல்லிருக்கைகள் , காணப்படுகின்றன.மாளிகையில் . வசித்த பிரமுகரைச்சந்திக்க வருவோர் அமர்ந்து காத்திருக்கும் இருக்கைகள் அவை. முன் விறாந்தையைக் கடந்ததும் அகன்ற உயர்ந்த வேலைப்பாட்டுடன் கூடிய வீட்டுக்கதவு காணப்படும். இது மந்திரி மனையின் வடக்குப் பக்கத்தில் பழையகாலக்கிணறு ஒன்றுள்ளது. அதன் அரைப்பகுதி கட்டடத்திற்குள்ளேயும் கட்டடத்திற்கு வெளியேயும் அமைந்துள்ளன. கட்டடத்திற்குள்ளமைந்துள்ள பகுதி நவீன குளியலறைத்தோற்றத்தினைத் தருகின்றது. இக்கிணத்திற்கும் பகரவடிவ யமுனாஏரிக்கும் நிலத்தடியில் ஒரு சுரங்கம் இருப்பதான ஐதீகம் உண்டு. மன்னன் சிங்கைப் பரராசசேகரன் யமுனா நதியின் நீரை ஏரியில் பெய்து பகரரியை அமைத்த போது மந்திரிமனையின் கிணற்றிலும் அப்புனித நீர் கலக்க சூத்திரமார்க்கம் செய்ததாக ஐதீகம். மந்திரி மனையின் பிற்பக்கத்தில் உடைந்த சிதைந்த சுவர்கள், காணப்படுகின்றன. கட்டிடத்தின் தென்மேற்குப்பக்கத்தில் நிலவறை ஒன்று காணப்படுகின்றது. அது இன்று சிதைந்து வாயில் மூடிக்காணப்படுகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் மந்திரிமனையின் முன்முகப்பு ஒல்லாந்தக்கட்டடப்பாணியில் புதிதாக அமைக்கப்பட்டது. பின்னர் ஒல்லாந்தரால் இந்த மந்திரிமனையையும் சங்கிலித்தோப்பையும் ஏலத்தில் விடப்பட்டதாகவும் அவற்றினை யாழ்ப்பாணப் பிரமுகர்கள் சிலரும் கோயில் தர்மகர்த்தாக்கள் சிலரும் வாங்கியதாகவும் தெரிய வருகின்றது.

இவ்வாறான வரலாற்றினைக் கொண்ட மந்திரிமனை இன்று பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது. "நான் தமிழன்" எனத்தலை நிமிர்ந்து நின்ற ஒரு தமிழ் மன்னனினுடைய பண்டைய சின்னங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழர்களாகிய ஒவ்வொருவருடைய கடமை என்பதனை தமிழர்கள் மனத்தில் கொள்ள வேண்டும்.

"நல்லூர் மந்திரிமனை ஒவ்வொருவரும் பாதுகாக்க வேண்டிய தொல்லியல் சின்னமாகும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டையின் மேலாதிக்கத்தின் கீழ் யாழ்ப்பாண இராச்சியம்

**நிருஜா சிறீஸ்கந்தராசா**
**(விஞ்ஞானத் துறை)**

கி.பி 1450 இல் செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதன் மூலம் 17 ஆண்டுகள் யாழ்ப்பாணம் கோட்டையின் மேலாதிக்கத்திற்குள் வந்தது. இப்படையெடுப்பை நடாத்திய மலையாள இளவரசன் எனக் கருதப்படும் செண்பகப்பெருமாள் எனப்படும் சபுமல் குமாரய கோட்டை மன்னன் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனாவான். கி.பி 1415 இல் கோட்டை மன்னனாகப் பதவிபெற்ற பராக்கிரமபாகு பல நூற்றாண்டுகளாகப் பலவீனமுற்றிருந்த சிங்கள இராச்சியத்தை வலுப் பெறச் செய்ததன் மூலம் இலங்கை வரலாற்றில் மன்னர்களில் ஒருவனாகக் கருதப்படுகிறான். இலங்கை முழுவதையும் தன் மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வரப் போராடிய இவன் கண்டி, யாழ்ப்பாணம், வன்னிச் சிற்றரசுகளை வெற்றி கொண்டதன் மூலம் பூஜாவலிய மற்றும் சமகால சிங்கள இலக்கியங்களில் தலைசிறந்த மன்னனாகப் புகழ்ந்துரைக்கப்படுகின்றான். இவன் சார்பாக செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்தின்மீதுபடையெடுத்தபோது ஆட்சியில் இருந்த கனகசூரிய சிங்கை ஆரியன் படையெடுப்பை எதிர் கொள்ள முடியாது மனைவி, மக்களுடன் தமிழகம் சென்றதாகக் கூறப்படுகிறது.

17 ஆண்டுகள் ஸ்ரீ புவனேகபாகு என்ற பெயருடன் ஆட்சி செய்த செண்பகப் பெருமாளின் வரலாறு கைலாயமாலையில் தனிச் செய்யுளாகக் காணப்படுகிறது. இவன் ஆட்சியில் புதிய அரசமாளிகை, பிற கட்டிடங்கள், கோட்டை என்பன கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. நல்லூர் கந்தசுவாமிக் கோயிலை செண்பகப் பெருமாள் ஸ்தாபித்தான் என்பதற்கு அக்கோவிலில் இன்று வரை ஓதப்பட்டு வரும் கட்டியம் ஆதாரமாக உள்ளது. யாழ்ப்பாண பிரதான வீதியில் கண்டுபிடிக்கப்பட்ட இவனது கல்வெட்டு யாழ்ப்பாண அரச வரலாற்றை அறிய ஓரளவு உதவுகிறது. கோட்டை மன்னன் ஆறாம் பராக்கிரமபாகு இறந்ததன் பின் அங்கு ஏற்பட்ட அரசியல் குழப்பத்தால் செண்பகப்பெருமாள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்ய முடியவில்லை இதனால் யாழ்ப்பாணத்திலுள்ள தனது படைகளோாடு கோட்டைக்குச் சென்று அங்கு 1467 இல் அதிகாரத்தைக் கைப்பற்றி ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்ற பெயருடன் ஆட்சி புரிந்தான்.


செண்பகப் பெருமாள் கோட்டை திரும்பியதும் முன்னர் பதவியிழந்த கனகசூரிய சிங்கை ஆரியன் தமிழகப் படை உதவிகளுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். இவனின் பின்னர் அவன் மகன் பராச சேகரன் நீண்ட காலம் ஆட்சி செய்தான். இப்பெயர் பிற்பட்ட மன்னர்களால் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டதால் இது பட்டப்பெயராகப் பயன் படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இக்காலத்தில் இருந்து ஆரியச் சக்கரவர்த்திகளைக் குறிக்கும் அடைமொழி மறைந்து போவதால் ஆரியச்சக்கரவர்த்திகளது ஆட்சி முடிவுற்றது என்றே கூறலாம். இதன் பின்னர் முதலாம் சங்கிலியன், காசிநாயனார், பெரியபிள்ளை, புவிராஜபண்டாரம், எதிர் மன்ன சிங்க குமாரன் முதலான மன்னர்கள் ஆட்சி புரிந்த வரலாறு காணப்படுகிறது. அவர்களுள் முதலாம் சங்கிலி, இரண்டாம் சங்கிலி மன்னர்களது ஆட்சி யாழ்ப்பாண வரலாற்றில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. யாழ்ப்பாண அரசில் நீண்டகால ஆட்சியிலிருந்த முதலாம் சங்கிலி மன்னன் (கி.பி 1519-1561) காலத்தில்தான் போர்த்துக்கேயப் படையெடுப்புக்களும் அவர்களது தலையீடுகளும் அதிகரித்துக் காணப்பட்டன.

இந்துக்கள் கத்தோலிக்க மதத்திற்கு மாறக் கூடாதென்பதில் தீவிர அக்கறை காட்டிய இவன் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிட்ட சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னை கோட்டை மன்னன் விதிய பண்டாரன் ஆகியோருடன் இணைந்து போரிட்டான். ஆயினும் 15 ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தில் எழுச்சி பெற்ற விஜயநகரப் பேரரசும், நாயக்க அரசும் அடிக்கடி யாழ்ப்பாண அரசில் தலையீடு செய்ததால் காலப்போக்கில் யாழ்ப்பாண இராச்சியம் விஜய நகரப் பேரரசின் மேலாண்மையை ஏற்க நேர்ந்தது. இவ்வாறான சூழ்நிலையில் இரண்டாம் சங்கிலி மன்னன் ஆட்சியில் இருந்தபோது 1619 இல் அவன் போர்த்துக்கேயரால் சிறைப்பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரின் நேரடி ஆதிக்கத்திற்குள் வந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் சிறந்த துறைமுகமாக விளங்கிய ஊர்காவற்றுறை

யோ. வினுசியா
(சித்திரத்துறை)

யாழ்ப்பாணம், யாழ்ப்பாண தேசம், யாழ்ப்பாணப் பட்டினம் எனப் பலவாறு வழங்கி வந்த தமிழ் இராச்சியம் கி.பி 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே பாண்டியரின் ஆதிக்கம் வட இலங்கையிலே ஏற்பட்டுப் படிப்படியாக வலுப் பெற்று வந்தது. அக்காலகட்டத்தில் இலங்கையின் வடபகுதியில் உருவாகியிருந்த தனி இராச்சியமானது பாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டு வந்தது. கி.பி 1283 ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட பாண்டிய படையெடுப்பின் விளைவாக யாழ்ப்பாணத்திலே ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்டது. தென்பாண்டி நாட்டு செவ்விருக்கை நாட்டைச் சேர்ந்த அந்தணராகிய ஆரியச் சக்கரவர்த்திகள் மாறவர்மன் குணசேகர தேவரின் ஆட்சியிலே பாண்டிய நிருவாகத்திலே சேனாதிபதி போன்ற உயர் பதவிகளைப் பெற்றிருந்தனர்.

ஈழத்தில் சங்ககாலத்திலிருந்தே இலக்கியத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட போதிலும் தமிழகத்தைப்போல் தனியரசு நிறுவப்படாமையால் ஈழத்தில் சுமார் கி.பி 12 ஆம் நூற்றாண்டு வரை வெற்றிடமே காணப்படுகின்றதெனலாம். எனினும் சமஸ்கிருத மொழிப் பயிற்சியும் தமிழ் மொழி வளர்ச்சியில் ஈடுபாடுங் கொண்டிருந்த ஆரியச் சக்கரவர்த்திகள் கல்வி வளர்ச்சிக்கும் கவிவாணருக்கும் ஆதரவுகள் புரிந்தனர். யாழ் மன்னர்கள் புலவர்களைக் கூட்டி தமிழ்ச் சங்கமொன்றினை அமைத்திருந்தனர். என்பது மரபுவழிக் கதையாகும். இம்மன்னர்களின் ஆட்சியும் தமிழ்ப் பாரம்பரியத்தின் புத்துருவாக்கமும், அரசகேசரியுடன் எழுச்சி பெற்ற புலவர் மரபும் ஈழத்து இலக்கியத்திற்குப் பெரும் உந்து சக்தியாக அமையப் பெற்று யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் தமிழ் இலக்கியங்களை முகிழச் செய்தன. அவர்களின் அரண்மனையிலே வேதத் திருமறைகள், சைவத்திருமறைகள், ஆகமங்கள், புராணங்கள், காப்பியங்கள், இலக்கண நூல்கள், மருத்துவ சோதிட நூல்கள் ஆகியவற்றின் ஏட்டுப் பிரதிகள் சேர்க்கப்பட்டு இரு மொழிப்பயிற்சி பெற்ற அறிஞர்களாலேயே ஆராயப்பட்டன என்று அறிய முடிகிறது. ஆரியச்சக்கரவர்த்திகள் கல்வி வளர்ச்சிக்கும் கவிவாணருக்கும் ஆதரவளித்தனர் என்பதை சமகால நூல்கள், தனிப்பாடல்கள் மூலமாக அறிய முடிகின்றது. அவர்களுள் ஒருவன் யானையையும் மூவாயிரத்தெழுநூறு காசுகளையும் பாவலருக்குப் பரிசிலாக கொடுத்தானென்று செகராசசேகரமாலை குறிப்பிடுகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகளின் தூண்டுதலினாலும் ஆதரவுடனும் தோன்றிய இலக்கியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. காப்பியங்கள் - இரகுவம்சம், வழக்குரை காதை
2. அறிவியல் இலக்கியங்கள்
3. வைத்தியம் சார்ந்தவை - செகராசசேகரம் பரராசசேகரம்
4. சோதிடம் சார்ந்தவை - செகராச சேகரமாலை
5. வரலாற்று இலக்கியங்கள் - வையா பாடல், கைலாய மாலை, கோணேசர் கல்வெட்டு

04) சமய சார்பு இலக்கியம் - தட்சிண கைலாய புராணம்
திருக்கரைசைப்புராணம்
கதிரைமலைப்பள்ளு

தமிழிலே தோற்றம் பெற்ற பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரத்தையும் இராமாயணத்தையும் தழுவி இக்காலத்தில் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. குறிப்பாக சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வழக்குரையை அடிப்படையாகக் கொண்டு கண்ணகி வழக்குரை காதை சிலப்பதிகாரத்திலிருந்து நீட்டியும் குறைத்தும் சகவீரனால் படைக்கப்பட்டுள்ளதுடன், இவ்விலக்கியம் முல்லைத் தீவில் சிலம்பு கூறல் என்றும், யாழ்ப்பாணத்தில் கோவலனார் பாட்டு எனவும் அழைக்கப்படுவதுடன் பொதுமக்களின் இலக்கியச் சாயலைப் பின்பற்றியும் உள்ளது. அதேபோல் அரசகேசரியால் உருவாக்கப்பட்ட இரகுவம்சம் இராமாயணத்தின் முன்னுரையாகவும் முடிவுரையாகவும் அமையப்பெற்று 2444 பாடல்களையும் 12 சருக்கங்களையும் கொண்டிருப்பதால் காப்பிய மரபைப் பேணிய நிலையை உணர முடிகின்றது. இரகுவம்சமானது ரகுவின் மகன் தசரதனின் வரலாற்றையும், தசரதனின் மகன் இராமனின் வரலாற்றையும் இராமனின் மகன்களான லவன், குசன் ஆகியோரது வரலாற்றினை சித்தரிப்பதாக அமையப்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்து தமிழ் மன்னர்கால இலக்கியங்களின் அறிவியல் இலக்கிய மரபும் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது 7ஆம் நூற்றாண்டிற்கு முன்பே ஈழத்து தமிழ் மக்களிடத்தில் வைத்தியம், சோதிடம் என்பன பயிலப்பட்டு கலையாக இலக்கியமாகக் காணப்பட்டதை அறிய முடிகின்றது. குறிப்பாக வைத்தியம் சார்ந்த நூல்கள் செகராச சேகரம், பரராச சேகரம் சோதிடம் - செகராச சேகர மாலை என இரு வகைப்பட்ட இலக்கியங்கள் தோன்றியுள்ளமை அறிவியல் இலக்கியப் பாணியை வெளிப்படுத்த சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். இவ் வைத்திய சோதிட நூல்கள் 14 ஆம் நூற்றாண்டில் வரோதய சிங்கையாரியனின் ஆட்சியில் எழுதப்பட்டன. செகராச சேகரன் என்னும் பட்டப் பெயரைக் கொண்ட அவ்வரசனின் பேராதரவுடன் அவை எழுதப்பட்டதால் அவனை நினைவு கூறும் வண்ணமாக அவை முறையே செகராச சேகர மாலை, செகராச சேகரம் என்று நூலாசிரியர்களினாலேயே பெயரிடப்பட்டுள்ளன. வடமொழியிலுள்ள சோதிடமதனைத் தமிழிலே நூல் செய்யுமாறு மன்னன் பணித்ததால் அரசகுலத்தவனும் மறைநூல் வல்லுநருமாகிய சோமசர்மா செகராச சேகர மாலையைப் பாடினார். விருத்தப் பாவிலமைந்த செகராச சேகர மாலை செந்தமிழ் நடை விரவிய இலக்கிய நயம் பொருந்திய நூலாகும். ஆரியச்சக்கரவர்த்திகளின் வம்ச வரலாறு பற்றிய அம்சங்களும் ஆளும் மன்னனாகிய வரோதய சிங்கையாரியனைப் பற்றிய பிரதானமான வரலாற்றுக் குறிப்புகளும் அரண்மனை வாழ்க்கை, வேளாண்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாய வழக்கங்கள் முதலியன பற்றிய சில செய்திகளும் அதிலே உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்துத் தமிழ் நூல்களிலே ஆயுள்வேத மருத்துவம் பற்றியவை மிகப் பிரதானமானவையாகும். வடமொழியிலுள்ள ஆயுள்வேத நூல்களின் ஏட்டுப் பிரதிகள் பலவற்றை இந்திய தேசத்திலிருந்தும். பெற்று அவற்றிலே ஆராய்ச்சிகளை நடாத்தித் தமிழிலே பல மருத்துவ நூல்களை எழுதுவித்தமை ஆரியச்சக்கரவர்த்திகளின் சிறப்பான சாதனையாகும். செகராச சேகரனொருவன் சத்திர வைத்திய முறையிலும் நாடி சாஸ்திரத்திலும் வல்லுநனாக விளங்கினான் என்பதை செகராச சேகரம் கூறுகின்றது. சர்ப்ப சாஸ்திரம், நயன சாஸ்திரம், பரராசசேகரம் என்ற பிற மருத்துவ நூல்களும் யாழ்ப்பாண மன்னர் காலத்திற்குரியவையாகும். தமிழிலுள்ள ஆயுள்வேத மருத்துவ நூல்களுட் செகராச சேகரம் என்பதே மிகப் பழமையானதென்று கருதப்படுகிறது.

சைவசமயச் சார்புடைய நூல்களிலே கோணேசர் கல்வெட்டு, தட்சிண கைலாச புராணம், திருக்கரைசைப் புராணம் ஆகிய மூன்றும் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்திற்குரியவை. கோணேசர் கல்வெட்டு என்பதைக் கவிராசர் என்ற புலவர் பாடியுள்ளார். அந்நூல் செய்யுள் வடிவிலும் வசனரூபமாகவும் அமைந்துள்ள பல பகுதிகளைக் கொண்டுள்ளது. அவற்றிற் குளக்கோட்டன் கஜபாகு என்னும் மன்னரிருவரைப் பற்றிய செய்யுள் வடிவிலுள்ள பகுதிகள் கல்வெட்டு என்ற இலக்கிய வகையைச் சார்ந்தது. அவையிரண்டும் வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டிருக்க வேண்டும். குளக்கோட்டனைப் பற்றிய பகுதியே கவிராசரின் படைப்பு எனவும், வசனரூபமாகவுள்ள பகுதிகள் பாமர மக்களிடையே நிலவிய கதைகள் எனக் கூறப்படுகிறது. கோணேசர் கோயிலின் வளர்ச்சி, அதன் நிர்வாக ஏற்பாடுகள், கோயிற் சேவைகள், நிலமானியங்கள் முதலியவற்றின் தகவல்களும், புராணக் கதைகளும் கூறப்பட்டுள்ளன.

ஈழத்து தலபுராணங்களில் தலை சிறந்ததான தட்சிண கைலாய புராணம் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்துப் பேரிலக்கியமாகும். அது கோணேசர் கோயிலைப்பற்றிய தல புராணமாகும். வழிபாட்டு நிலையம் என்ற வகையிலும் கவர்ச்சியான கலைவனப்புமிக்க கோபுரங்களைப் பெற்ற கட்டிட வடிவமைப்பு என்ற வகையிலும் சமுதாயத்தின் பல்வேறு கூறுகளை ஒன்றிணைத்து சமுதாய ஒழுங்குகளையும் நிலைநிறுத்துஞ் சாதனமென்ற வகையிலும் கோயில் மிகுந்த வளர்ச்சி பெற்றிருந்த காலத்திலே கோயிலை அடிப்படையாகக் கொண்ட தலபுராணமாகும். தலபுராணங்களுக்கு உரிய பண்பைப் பெற்றுள்ளதோடு, பக்திச் சுவையும், கவி நயமும் விரவியதாய் தட்சிண கைலாய புராணம் திகழ்கின்றது. திருக்கரசைப் புராணமானது கரைசைநாதர் தொடர்பாக எடுத்தியம்புகின்றது.

இக்கால இலக்கியங்களின் பண்புகளின் வரலாற்றைப் பேணும் பண்பு காணப்பட்டது. அதாவது ஈழத்து மக்கள் தேசப்பற்று, இனப்பற்று, மதப்பற்று என்பவற்றுடன் காலத்துக்குக் காலம் தமது பதிவை ஆவணக் களஞ்சியமாக மாற்றம் செய்துள்ளனர். இவ்வகையில் தோன்றிய வரலாற்று வையா பாடலானது தமிழ் நாடுகளிலிருந்து ஈழத்துக்கு வந்த அடங்காப்பற்று என வழங்கிய வன்னியை அடக்கி அங்கு அதிகாரம் பெற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியரின் வரலாற்றைப் பொருளாகக் கொண்டு செகராச சேகரன் என வழங்கிய முதற் சங்கிலி காலத்து அவைகள புலவரான வையாபுரி ஐயர் இந்நூலை எழுதினார் என்பது மரபாகும்.

வையாபாடலில் புனைக்கதைகளும் புராணக் கதைகளும் இடம் பெற்றுள்ள தோடு இராமாயணத்தில் வரும் சில கதைகளையும் யாழ்ப்பாணன், மாருதபுரவீகவல்லி என்போர் பற்றிய கதைகளையும் வன்னியர் வரலாற்றோடு இணைத்து வையாபுரி ஐயர் இந்நூலை வழங்கியுள்ளார். யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் இன்னொரு நூலாக கைலாயமாலை திகழ்கின்றது. சிங்கையாரியன் நல்லூரில் அமைத்த கைலாச நாதர் கோயிலின் வரலாற்றைப் பொருளாகக் கொண்டுள்ளது. எனினும் சிங்கையாரியனைப் பற்றியும் அவனோடு வந்த பிரதானிகளைப்பற்றியும், அவன் செய்த நிர்வாக ஏற்பாடுகள் தொடர்பாகவும் இந்நூல் விபரிக்கிறது.

உறையூர்ச் செந்தியப்பனின் மகனான முத்துராச கவிராசர் என்ற புலவர் கைலாய மாலையை எழுதினார். இந்நூலானது மாருதபுரவீகவல்லி, யாழ்ப்பாணன் பற்றி மிகச் சுருக்கமாகச் சொல்லி சிங்கையாரியன் பற்றிய வரலாற்றுச் செய்திகளை விரிவாகக் கூறுகிறது. சிங்கையாரியன் மதுரையிலிருந்து வந்து யாழ்ப்பாணத்திலே தங்கி இராசதானி அமைத்தமையையும் அம்மன்னனின் பட்டாபிஷேகம் தொடர்பாகவும் இந்நூல் வர்ணிக்கின்றது. சிங்கையாரியன் தன் வழிபாட்டுத் தேவைகளுக்காக தலைநகரிலே கைலாயநாதர் கோயிலை அமைத்ததாகவும், அக்கோயிலின் அமைப்புப் பற்றியும், அதன் வனப்பு பற்றியும் முத்துராசகவிராயர் இலக்கிய நயம் பொருந்திய வகையில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழவள நாட்டிலே வட கிழக்குப் பகுதியில் ஒரு தமிழ் இராச்சியமும் வன்னிகள் என்ற பல குறுநில அரசுகளும் எழுச்சி பெற்றதன் விளைவாக அவற்றின் தோற்றம், வளர்ச்சி ஆகியன பற்றி எழுதப்பட்ட நூல்களில் ஒன்றே யாழ்ப்பாண வைபவமாலையாகும். இதனை யாழ்ப்பாணத்தில் ஆட்சி புரிவதில் மரபு வழியான நிர்வாக முறையினை ஒல்லாந்த அதிகாரிகள் பின்பற்றியதனால் யாழ்ப்பாணத் தமிழரின் வரலாறு, சமுதாய வழமைகள் ஆகியவற்றைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டதால் ஒல்லாந்தரின் வேண்டுதலுக்கிணங்க மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலையை ஆக்கினார் எனக் கூறப்படுகிறது. யாழ்ப்பாண வைபவமாலையானது பண்டைய இலங்கையில் வாழ்ந்ததாகக் கருதப்படும்இயக்கர், நாகர்தொடர்பாகவும் அவன் அமைத்த குடியேற்றம் கோயில்கள் தொடர்பாகவும் கூறுகிறது. மேலும் முதலாம் சிங்கையாரியன் காலத்தையடுத்து 1450 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த அரசர்களின் வரிசையையும், அவர்களின் ஆட்சிச் சிறப்பையும் ஒல்லாந்தர் கைப்பற்றிய பின் அவர்களின் ஆட்சி, கல்வி, மதமாற்றம் தொடர்பாக இந்நூல் விரிவாகவும், ஈழநாட்டுத் தமிழர்களின் செந்தமிழ் வழக்கினை பேணியும் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வகையில் ஆரியச்சக்கரவர்த்திகளின் காலத்தில் அவர்களின் ஆட்சி, போர், வீரச்சிறப்பு, வரலாறு என்பவற்றை எடுத்தியம்பக் கூடிய வகையில் இலக்கியங்கள் உருவாகியுள்ளன. அவை காலத்தைப் பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடியாகத் திகழ்ந்த தமிழர் தம் வரலாற்றையும், சிறப்பையும் பறைசாற்றி நிற்கின்றது என்பது திண்ணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வடமாகாணத்தில் சிறப்புமிக்க துறைமுகமாக விளங்கியது ஊர்காவற்றுறை துறைமுகமாகும். வேலணையின் வடமேற்கில் ஊர்காவற்றுறை அமைந்துள்ளது. ஊர்காவற்றுறையானது கி.மு.6 ஆம் நூற்றாண்டிலிருந்தே துறைமுகமாக இருந்துள்ளது என சரித்திர ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் ஊர்காவற்றுறைத் துறைமுகம் மிகவும் பிரபல்யமடைந்து காணப்பட்டதாக வரலாற்று சான்றுகள் கூறிநிற்கின்றன.

அந்தவகையில் ஊர்காவற்றுறையின் தொன்மையை ஆராயுமிடத்து ஊர்காவற்றுறை எனப் பெயர் வரக் காரணம் யாதெனில், இவ்விடம் சிறப்புவாய்ந்த துறைமுகமாக அமைந்திருந்தமையாலும் (துறை) அத்துடன் இத் துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி எனப் பொருட்கள் குவிந்து கிடந்தமையால் கள்வர்களிடமிருந்தும் எதிரிகளிடமிருந்தும் இத்துறைமுகத்தைப் பாதுகாக்க அதிகமான காவல்காரர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டமையாலும் (காவல்) இவ்விடம் ஓர் சிறிய ஊராகக் காணப்படுகின்றமையாலும் (ஊர்) இச்சிறப்புக்களைக் கவனத்தில் கொண்டு சொற்களை ஒன்றிணைத்து ஊ+காவல்+துறை = ஊர்காவற்றுறை எனும் பெயர் வந்தது என எனது செவிவழியாகக் கேட்டறிந்துகொண்ட தகவலாகும். மேலும் ஊரைக் காவல் செய்கின்ற வகையில் இந்தத் துறைமுகம் அமைந்திருந்தமையால் அவ்வாறு பெயர் வந்தது எனக் கூறுபவரும் ஊர், அத்துடன் "ஊரான் தோட்டம்" என முன்பு வழக்கிலிருந்த பெயர் சிங்களத்தில் "ஊராதொட்ட" என அழைத்ததாகவும் சில வரலாற்று சான்றுகள் குறிப்பிடுகின்றன. மேலும் பன்றிகள் ஏற்றிய துறை என்ற காரணத்தால் "ஊராத் தொட்ட" எனப் பெயர் வந்தது எனச் சொல்பவரும் உளர். அவ்வாறே தற்பொழுது ஆங்கிலத்தில் கயிற்ஸ் (Kayts) என வழங்கப்படும் பெயர் ஆங்கிலேயரால் சூட்டப்பட்டது என்பர். ஆய்வுகளின்படி இது போர்த்துக்கேய சொல்லிலிருந்து மருவி வந்தது என தெரிகிறது. போர்த்துக்கேய மொழியில் கேயிஸ் என்றால் துறைமுகம் என்பது பொருள். அதிலிருந்தே பின் கயிற்ஸ் என்ற பதம் ஆங்கிலத்தில் மாற்றியமைக்கப்பட்டிருக்கலாம் என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஊர்காவற்றுறை என்று இன்று எழுத்துத் தமிழ்வடிவம் பெற்றிருக்கும் இவ்விடப் பெயர் "ஊறாத்துறை" என்றே பேச்சுவழக்கிலுள்ளது. 12 ஆம் நூற்றாண்டுத் தமிழ்க் கல்வெட்டுக்களில் "ஊராத்துறை" என்றே அழைக்கப்பட்டிருக்கிறது. "ஸிகர தித்த" என்று சூளவம்சத்திலும் "ஹிராதொட" அல்லது "ஊராத் தொட்ட" என்று பூஜாவலிய, ராஜாவலிய, நிகய ஸங்கிரஹய போன்ற இலங்கை நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஊர்காவற்றுறையின் பெயரின் வரலாற்றை ஆராயும்போதே ஊர்காவற்றுறை துறைமுகத்தின் தொன்மையும் சிறப்பும் தெளிவாக விளங்குகின்றது எனலாம். இதனடிப்படையில் ஊர்காவற்றுறைத் துறைமுகத்தின் சரித்திரத்தையும் தனித்துவத்தையும் ஆராய்வோமாயின் வடபகுதியில் அமைந்துள்ள ஒரு இயற்கைத் துறைமுகம் இதுவேயாகும். வடகீழ், தென்மேல் பருவ காலங்கள் இரண்டிலும் பாதுகாப்பான துறைமுகமாக விளங்குவது விசேட அம்சமாகும். இத்துறைமுகம் பன்னெடுங்காலமாக காவலூர் கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்தில் சிறந்து விளங்கியுள்ளதுடன் தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்பு இருந்தமையால்அந்நாட்டுத்துறைமுகங்கள் வரை சென்று பண்டமாற்று வணிகம் செய்திருக்க வாய்ப்பிருந்தது. மேலும் பல தென்கிழக்காசிய நாடுகள் வரை காவலூரர் மாலுமிகள் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். இத்துறைமுகமானது எப்பொழுதும் கப்பல்கள், படகுகள், தோணிகள் என்று மரக்கலங்களால் நிறைந்திருக்கும். பனைமர அளவுக்கு உயரமான பாய்மரங்கள் வானை முட்டி உயர்ந்து நிற்க பாரிய கப்பல்கள் எந் நேரமும் நங்கூரமிட்டு சரக்குகளை இறக்கும் ஏற்றும் சிறப்புமிக்கது. இத் துறைமுகத்தில் கறிச்சரக்கு வகைகள், வெங்காயம், மிளகாய், சக்கரை முதல் கலிக்கட் ஓடுவரை இறக்கப்பட்ட அந்த செழிப்பான காலத்தை எண்ணிப் பார்க்கப் பெருமையளிக்கிறது. மேலும் பட்டுக் கோட்டைச் செட்டிமாரின் செல்வாக்கில் காவலூரிலும் கப்பல் கட்டும் தொழில், படகுத்துறைத் தொழில் என்பன விருத்தியடைந்தன. இதன் மூலம் பலர் வேலைவாய்ப்புப் பெற்றதோடு மாலுமிகளாகவும் கப்பல் உரிமையாளர்களாகவும் மிகுந்த உச்ச நிலையில் இருந்துள்ளனர்.

பாய்க்கப்பல்கள் போய் நீராவிக் கப்பல் வந்த காலத்தில் பாக்கு நீரிணையின் ஆழம் போதாததால் ஊர்காவற்றுறை பன்னாட்டு முக்கியத்துவத்தை இழந்திருப்பினும் இந்தியாவின் கிழக்குக் கரையுடன் வணிகம் அண்மைக் காலம் வரை தொடர்ந்தது. யாழ்ப்பாணப் பரவைக் கடலின் சங்கு வங்காளம் வரை சென்றதையும், விசாகப் பட்டினத்து வடக்கன் மாடு இங்கு வந்ததையும் ஊர்காவற்றுறையில் இன்றும் காணப்படும் சங்குக் கழிவுக் குவியல்களாலும் இழந்து போன கால்நடைத் தொற்று நோய்த்தடுப்புக் கட்டிடங்களாலும் அறிந்து கொள்ளலாம். ஊர்காவற்றுறையில் இறக்கப்பட்ட சரக்குகள், மாட்டு வண்டித் தொடர்புகளால் அநுராதபுரம், கண்டிவரை சென்றமை செவிவழியாக அறியப்பட்ட தகவலாகும். இவ்வாறு சிறப்புப் பெற்றிருந்த துறைமுகம் காலணித்துவம் போய் தேசியங்கள் வந்தகாலத்திலும் வணிகம் நின்று போனாலும் கேந்திர முக்கியத்துவம் போய்விடவில்லை என்பது யாவரும் அறிந்ததே.

அந்த வகையில் 12 ஆம் நூற்றாண்டில் ஊர்காவற்றுறையின் கேந்திர வணிக முக்கியத்துவங்களை இரு தமிழ் கல்வெட்டுக்கள் அறியத்தருகின்றன. 2ஆம் இராஜராஜ சோழனது (1163-1178) திருவாலங்காட்டு கல்வெட்டு சோழர்களுக்கும் பராக்கிரம பாகுவிற்கும் இடையில் நடைபெற்ற மோதலில் படைத்தளங்களுள் ஒன்றாகஊர்காவற்றுறை இருந்ததை குறிப்பிடுகின்றது. மேலும் தற்பொழுது நயினாதீவுக் கோயிலில் வைக்கப்பட்டுள்ள1 ஆம் பராக்கிரபாகுவின் தமிழ் சமஸ்கிரத கல்வெட்டு ஊர்காவற்றுறையின் பன்னாட்டு வணிகம் ஊக்குவிக்கப்பட்டதைத் தெரியப்படுத்துகின்றது. கடற்கோட்டைக்கு அண்மித்ததாக நீரோட்டங்கள் கலக்கும் அபாயகரமான ஏழாற்றும் பிரிவில் அடிக்கடி மரக்கல விபத்துக்கள் நடந்ததையும் இக்கல்வெட்டைக் கொண்டு ஊகிக்க முடிகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் வந்த பொருட்கள் எவ்வாறு பகிரப்பட்டன என்பதையும் இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது.

அந்த வகையில் ஊர்காவற்றுறை துறைமுகமானது முன்னைய காலத்தில் சிறந்த துறைமுகமாகக் காணப்பட்டதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிச்சிறப்புடன் அமைந்த துறைமுகமாகவும் விங்கியிருந்தது என்பதை இதன் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

மேலும் ஊர்காவற்றுறைக்குப் பெருமை சேர்த்தது சங்கிலிய மன்னன் காலத்தில் ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கடற் கோட்டையாகும். இக்கடற் கோட்டை கட்டப்பட்டதன் வரலாற்றை ஆராயும் போது காரைநகரில் இராசாந் தோட்டத்தில் யாழ்ப்பாண அரசர்களுக்குச் சொந்தமான இருப்பிடமொன்று இருந்திருக்கின்றது. இதற்கு முன்னர் வியாவில் என்ற இடத்தில் ஐயனார் கோயிலொன்று யாழ்ப்பாண அரசர் ஒருவரால் போர்த்துக்கேயர் இறுதியாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு சற்று முன்னதாகக் கட்டப்பட்டது. இக்கோயில் போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்படா விட்டாலும் பின் ஒல்லாந்தர் காலத்தில் இடிக்கப்பட்டு அக்கற்களைக் கொண்டு ஒல்லாந்தரின் கட்டளையை ஏற்று இக்காலப்பகுதியில் ஊர்காவற்றுறையை ஆட்சி புரிந்த பூதத்தம்பி முதலியாரால் ஒல்லாந்தருக்காக வரிசையாக ஆட்களை நிறுத்தி கற்களை கைமாற்றித் தூக்கிச் சென்று கடற் கோட்டை கட்டப்பட்டிருக்கலாம். என்பதை கோட்டைக்குள் காணப்படும் வேலைப்பாடமைந்த சில கற்களை வைத்து ஊகிக்கலாம். இவற்றுள் இரு கற்களில் சோழர்காலக் கல்வெட்டுக்கள் அறியப்பட்டுள்ளன. ஒன்று மாத்திரமே படிக்கப்பட்டுள்ளது. மற்றயதன் பெரும் பாகம் சாந்தினால் பூசப்பட்டுள்ளதால் முழுமையாகப் படிக்கப்படவில்லை. படிக்கப்பட்ட கல்வெட்டு 1 ஆம் இராஜேந்திர சோழன் காலத்தது. இலங்கையை வெற்றி கொண்ட சோழத்தளபதியின் பெயரை அறியத் தருகிறது.

அந்நதவகையில் இக்கோட்டையானது தற்போது சுற்றுலாப் பயணிகளைக் கவரும் பகுதியாகத் திகழ்ந்து வருகிறது. இவ்வாறு ஊர்காவற்றுறைக்குப் பெருமையையும் சிறப்பையும் வழங்குவதில் ஊர்காவற்றுறை துறைமுகமும், கடற் கோட்டையும்பெரும் பங்காற்றுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியத்தின் தனித்துவம்

ம. நிர்மலா
ஆரம்பக்கல்வித்துறை

1210 இல் கலிங்கபாகுவுடன் ஆரம்பித்த யாழ்ப்பாண இராச்சியத்தின் செல்வாக்கு 1450க்கும்1467க்கும் இடைப்பட்ட காலம் தவிர்ந்து 250 வருடங்களாக 1478 வரை நீடித்தது. கி.பி 1450க்கும் கி.பி 1467க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் யாழ்ப்பாண இராச்சியம் கோட்டை அரசுக்குட்பட்டிருந்தது. இக்காலத்தில் அரசன் இந்தியாவில் இருந்தான். 1467 இல் திரும்பவந்து தனது அரசை மீட்டெடுத்தான்.

சிங்கை ஆரியன் நல்லூரில் ஒரு நகரத்தை நிர்மாணித்தான். இவன் பின் வந்தவர்களும் ஆரியச்சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்டனர். இக்காரணம் பற்றியே சேது சின்னமும் யாழ் அரசர்களால் பின்பற்றப்பட்டது குறித்துப் பலவித கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டன. கி.பி 745இல் வடபகுதியை ஆட்சி செய்த உக்கிரசிங்கன் என்பவனின் கலிங்க வம்சத்தைச் சேர்ந்த இளவரசி ஒருத்தியை இராமேஸ்வரத்தைச்சேர்ந்தஒருபிராமணன் மணந்ததால் அதனைத் தொடர்ந்து அரசுக்கு தொடர்ந்து அரசுக்கு வந்தவர்கள் தமக்கு ஆரியர் என்ற அடையாளத்தை ஏற்படுத்திக் கொண்டனர் என்பது ஒன்று. இன்னொன்று, இராமர் இலங்கையை வென்ற பின் இராமேஸ்வரம் உட்பட்ட இலங்கையின் வடபகுதியை ஆள்வதற்கு இரு பிராமணர்களை நியமித்தார் என்றும், அதன்பின் வழிவழியாக ஆண்டவர்கள் தம்மை ஆரியர் என்று அழைத்துக் கொண்டனர். என்பதும் ஆகும். இவற்றுள் முன்னையதே பொருத்தமுடையதாக இருக்கிறது. ஏனெனில் இராமரின் வருகையின் பின்னரும் இலங்கையின் வடபகுதியை ஆண்டவர்கள் நாகர்களே. வைபவமாலையின் படி, ஆரிய அரசர்களின் முதலாவது அரசன் சோழ இளவரசன் என்றும் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண அரசர்கள் தம்மை மாறிமாறி பரராசசேகரன், செகராசசேகரன் என்ற பெயர்களால் அழைத்தனர். 13$^{ம்}$ நூற்றாண்டு முதல் 15$^{ம்}$ நூற்றாண்டு வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட அரசர்கள் பின்வருமாறு; 1210 - 1236 கலிங்கமாகன், விஜய கூழங்கைச் சக்கரவர்த்தி 1242 - 1246 (இவனே கலிங்கமாகன் என நம்பப்பட்டான்.). குலசேகர பரராசசேகரன் 1246 - 1256, குலோத்துங்கன் செகராசசேகரன் 1256 - 1279, விக்கிரமன் பரராசசேகரன் 1279 - 1302, வரோதயன் செகராசசேகரன் 1302 - 1325, மார்த்தாண்டன் பரராசசேகரன் 1325 - 1348, குணபூசணம் செகராசசேகரன் 1348 - 1371, வரோதயன் பரராசசேகரன் 1371 - 1380, ஜெயவீரன் செகராசசேகரன் 1410 - 1446, கனகசூரியன் செகராசசேகரன் 1446 - 1478 போன்றோர் ஆவார்.

வண,பிதா எஸ். ஞானபிரகாசர் அவர்களால் வெளியிடப்பட்ட ''யாழ்ப்பாண அரசர்கள்'' என்ற கைநூலில் 1467ல் இருந்து யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசில் இருந்த அரசர்கள் பெயர்கள் பின்வருமாறு உள்ளது. பரராசசேகரன் கி.பி 1478 - 1519, சங்கிலி செகராசசேகரன் கி.பி 1519 - 1561 (1561ல் சங்கிலி போர்த்துக்கீசரால் சிறைபிடிக்கப்பட்டான். அதில் இருந்து 1620 டச்சுக்காரர் வருகை வரை போர்த்துக்கேயரது மேலாண்மையை ஏற்றுக்கொண்டு அவர்கள் கைப்பாவைகளாக இருந்தவர்களே அரசர்களாக இருந்தனர்.) புவிராசபண்டாரம் கி.பி 1561 - 1565, குச்சிநயினார் பரராசசேகரன் கி.பி 1565 - 1570 இவன் அரசை அநீதியான முறையில் அபகரித்தவன். பெரியபிள்ளை செகராசசேகரன் கி.பி 1570, புவிசார பண்டாரம் பரராச சேகரன் கி.பி 1582, எதிர்மன்ன சிங்கன் பரராசசேகரன் கி.பி 1591.

1615ல் அரசகேசரி என்பவனது பராமரிப்பிலும் 1620 இல் சங்கிலிகுமாரன் பராமரிப்பிலும் இளையவனான ஒரு அரச குமரன் இருந்தான். 1616 இல் எதிர்மன்ன சிங்கன் பரராசசேகரன் இறக்கும் தருணத்தில் மூன்று வயதுக் குழந்தையாக இருந்த தன் ஒரே புத்திரனை தன் தமையன் முறையான அரசகேசரியிடம் ஒப்படைத்து அவன் வயதாகும் வரை இராச்சியத்தைப் பராமரிக்குமாறு கேட்டுக் கொண்டான். தனது விருப்பத்தை இந்தியாவில் இருந்த போர்த்துக்கல் அதிகாரிக்கும் தெரியப்படுத்தினான். ஆனால் அரச பதவியை அபகரிக்க விரும்பிய சங்கிலி என்னும் வேறொரு அரச குமாரன் அரசகேசரி உட்பட அரச குடும்பத்தவர் பலரையும் கொல்லுவித்தான். இதனால் குடிமக்கள் கோபம் அடைந்தனர். போர்த்துக்கேயரிடம் சரணடைந்து அவர்கள் உதவி பெற்று சிலகாலம் அரசனாக இருந்தான். ஆனால் அவன் அவர்களுக்கு விசுவாசமாக நடக்காததை அறிந்த போர்த்துக்கேயர் அவனையும் அவன் குடும்பத்தவரையும் கோவாவுக்கு அனுப்பினர். சங்கிலி சிரச்சேதம் செய்யப்பட்டான். அவன் மனைவி கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்து ஒரு மடத்தில் சேர்ந்தாள். ஏழு வயது பாலகனாக (எதிர்மன்ன சிங்கனின் மகன்) இருந்த அரச வாரிசு கிறிஸ்தவ குருமார் மனையில் வளர்க்கப்பட்டான். அவனது தாயும் எதிர்மன்ன சிங்கனின் இன்னொரு மனைவியும் கிறிஸ்தவராகி கன்னியாஸ்திரி மடம் ஒன்றில் வசித்தனர்.

1478ல் பரராசசேகரன் காலத்தில் அவனது அரண்மனைக்கு வந்த சுபத்த முனிவர் பரராசசேகரனுக்குப்பின் அவனது பட்டத்து இளவரசர்கள் அரசராக மாட்டார்கள் என்றும் அவனது மூன்றாவது மனைவியின் மகனான சங்கிலியே அரசனாவான் என்றும்; அவனுக்குப் பின் அவனது பரம்பரைக்கே அரசு கிடையாது என்றும் கூறிச்சென்றார். இத்தகைய ஆரூடம் அக்காலத்து நடைமுறையில் இருந்தது என்பதற்கு ஆதாரமாக திருக்கோணேஸ்வரக் கோவில் பிரகாரத்தில் இருந்த கல்வெட்டு உள்ளது.

இவை தவிர, யாழ்ப்பாணம் என்று இப்போது அழைக்கப்படும் பிரதேசம் ஐரோப்பியர் வருகையின் பின்னரே முக்கியத்துவம் பெற்றது. அவர்களது கடல் மூலமான வர்த்தகத் தொடர்புகளுக்கு யாழ்ப்பாணத்தை அவர்கள் பொருத்தமான இடமாகத் தெரிவு செய்ததன் பின்னரே யாழ்ப்பாணத்துக்கு அதிக முக்கியத்துவம் கிடைத்தது. அதற்கு முன்னர் மாந்தை, முல்லைத்தீவு, திரிகோணமலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு என்பனவே பிரதான வர்த்தக தளங்களாக இருந்தன.

சங்க காலத்தில் மக்களிடையே வழங்கிவந்த பாடல் வடிவிலான கதைகள் பல வழக்கொழிந்து போய்விட்டன. சில இன்னும் கிராம மக்களிடையே நிலைத்துள்ளன. அவை போன்ற பாடல்கள் இலங்கையின் வடபகுதி மக்களிடையேயும் வழங்கி வந்தன. இவை அக்காலங்களில் இருந்த சமூகநிலை, பழக்கவழக்கங்கள், வரலாறுகள் பற்றி நமக்குத் தெரிவிப்பவை யாழ்ப்பாண அரசை ஆண்ட பரராசசேகரனது அரசவைப் புலவராக இருந்த வையாபுரிஐயர் அவர்களால் இவை "வையாபாடல்" என்ற நூல்வடிவிற் தரப்பட்டன.



**பழமையும் புதுமையும்**

தமிழ்மொழி, மிக்க பழமையும் பெருமையும் இனிமையுமுடையது. அவற் றோடு புதுமையுமுடையது. கன்னித்தமிழ் எனக்கூறப்படுகிறதாலே தமிழுக்கு புதுமையுண் டென்பது தெரியப்படும். ஒரு பகுதியினர் பழந்தமிழை போற்றுகிறதிலே காலத்தைக் கழிக்கின்றனர். இன்னொரு பகுதியினர் புதுமையை மாத்திரம் கைக்கொள்ளுகின்றனர். பழமையும் புதமையையும் தனித்தனி நோக்குவது முழுமையாகாது. இரண்டும் இணைய வேண்டும். உடம்புக்கு அதன் பழைய இரத்தத்துடன் நாடோறும் புதிய இரத்தம் கலக்க வேண்டும். இங்கனம் கலக்காமற் பழைமையை இரத்தமளவிலே நின்றாலும் பழைய இரத்தத்தை நீக்கி புதிய இரத்தமளவிலே நின்றாலும் உடம்பு கெடுவதை யாவரும் ஒப்புக்கொள்வர். அதைப்போல பழமையிலே தனித்து நிற்பதும் புதுமையிலே தனித்து நிற்பதுங் கேட்டையே தரும்.

**பேராசிரியர் ஆ. சதாசிவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியம்

**எஸ். தபோசினி**
சிறு குறிப்புக்கள்

இலங்கையின் தூர வடக்குப் பகுதியான யாழ்ப்பாணக் குடாநாடு புவியியல் அடிப்படையிலே தனிப் பண்புகளைக் கொண்ட ஒரு நிலப்பகுதியாகும். பனைமரங்கள் இப்பிரதேசத்திலே இயற்கையாகவே பெருமளவில் உற்பத்தியாகின்றன. இலங்கையின் வடபகுதியிலுள்ள தமிழர் வாழும் பிரதேசங்களில் பெரும்பாலானவற்றை இணைத்து, அவற்றை ஒரு இராச்சியமாக அமைத்து நெடுங்காலம் நிலைபெறச் செய்தமை ஆரியச்சக்கரவர்த்திகளின் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

மத்திய காலப்பகுதியில் இலங்கையில் அமைந்திருந்த இராச்சியங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பட்டினம் இலங்கையின் வடபகுதியிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தது.

யாழ்ப்பாண நாட்டை ஆட்சி புரிந்த மன்னர்கள் சிங்கையாரியன் குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் குலத்தை அழித்துவிட்டு, பிலிப்பன் என்னும் தளகர்த்தன். தலைமையிலே போர்த்ததுக்கேயர் இராச்சியத்தைக் கைப்பற்றினார்கள் பின்பு அதனை ஒரு கிளை இராச்சியமாக அமைத்து ஆட்சி புரிந்தார்கள். அவர்கள் தங்கள் கொடுமையான ஆட்சியிலே சைவசமயத்திற்கு இடர் விளைவித்தார்கள். ஒல்லாரின் வருகையால் அவர்களின் கொடுமைகளினின்றும் விடிவு கிடைத்தது.

யாழ்ப்பாணத்து அரசர்கள் சிங்கையாரியன், சேதுகாவலன், கங்கை நாடன் என்னுஞ் சிறப்புப் பெயர்களையும் பரராசசேகரன், செகராச சேகரன் என்னுஞ் சிங்காசனப் பெயர்களையும் கொண்டிருந்தார். ஆட்சியுரிமையானது தந்தைக்குப் பின் மகன் என்ற படியாக அமைந்திருந்தது. ஆட்சியுரிமை கொண்டவனைப் பட்டாபிஷேகம் பண்ணி முடிசூட்டுவது வழக்கம்.

ஒவ்வொரு அரசர் குலமும் தனக்கெனச் சிறப்பாக உள்ள சின்னங்களையும் முத்திரைகளையும் கொண்டிருந்தது. இராச முத்திரைகளைப் பெற்ற ஆவணங்கள், நாணயங்கள் போன்றனவே நிர்வாக அதிகாரிகளினாலும் நாட்டு மக்களினாலும் ஆதாரபூர்வமானவையாகக் கொள்ளப்படும்.

சோழருக்குப் புலி போலவும் பாண்டியருக்கு இணைக்கயல்கள் போலவும் குப்தருக்குக் கழுகு போலவும் ஆரியச் சக்கரவர்த்திகளுக்கு நந்தியும் சின்னமாக அமைந்தது. "விடைக்கொடியும் சேதுவும், நீள்கண்டிகள் ஒன்பதும் பொறித்து மிகைத்த கோவும்" என வரோதய சிங்கையாரியனைக் குறித்துச் செகராச சேகரமாலை செப்புகின்றது.

சோழராட்சி இலங்கையில் ஏற்பட்டிருந்த காலத்தில் சோழர்காலப் பண்பாட்டின் செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பானதாகும். சோழராட்சியில் குளம், கால்வாய், கோயில் என்பன பற்றிய பணிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வன்னிய பகுதியிலும் நடைபெற்றமை பற்றிய ஐதீகங்கள் உண்டு.

யாழ்ப்பாணப் பொருளாதாரத்தில் போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் காலங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. புகையிலை, மிளகாய், மரவள்ளி, போன்ற பயிர்களின் செய்கை முறை விவசாயத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றது.

அரசியல், நிர்வாகமுறை, சமயவழிபாடுகள், தமிழ்மொழி, இலக்கியநெறி, பயிர்ச்செய்கை, நிலங்களைப் பயன்படுத்தும் முறை முதலான துறைகளிலே யாழ்ப்பாணத்துக்கு சிறப்பாகவுள்ள மரபுகள் பூர்வகாலம் முதலாக உற்பத்தியாகி மரபு வழியாக நிலவிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலங்களில் சில மாற்றங்கள் ஏற்பட்டன. புகையிலை, மிளகாய், மரவள்ளி, போன்ற பயிர்களின் செய்கை முறை விவசாயத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றது.

அரசியல், நிர்வாகமுறை, சமயவழிபாடுகள், தமிழ்மொழி, இலக்கியநெறி, பயிர்ச்செய்கை, நிலங்களைப் பயன்படுத்தும் முறை முதலான துறைகளிலே யாழ்ப்பாணத்துக்கு சிறப்பாகவுள்ள மரபுகள் பூர்வகாலம் முதலாக உற்பத்தியாகி மரபு வழியாக நிலவிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணம் எனும் பெயர் பிற மொழிப் பெயரன்று

யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறை எனும் துறை உண்டு. வடக்கிலிருந்து கொழும்புக்குச் செல்வோர் கொழும்புத்துறையிலேயே கப்பல் ஏற வேண்டும். தென்னிலங்கைக்கு கொண்டு வரப்படும் பொருட்கள் கொழும்புதுறையிலேயே பாய்மரக்கப்பல்களில் ஏற்றப்படும்.

தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் செல்பவர்கள் கப்பல் ஏறும் துறை பாணன் துறை என வழங்கப்பட்டது. அத்துறையிலிருந்து பாய்மரக்கப்பல் யாழ்ப்பாணம் சென்றாதாலேயே பாணன் துறை எனும் பெயர் உருவாயிற்று. இச் செய்தி யாழ்ப்பாண வைபவ கௌமுதி ,1918 நூலில் உண்டு. பாணன்துறையில் யாழ்ப்பாண பாய்மரக்கப்பல்கள் தரித்து நின்றதால் அப்பகுதியில் கணிசமான தமிழ்க் குடியிருப்புக்கள் இருந்தன.

ம. க. அ. அந்தனிசில்
வீரகேசரி 17.09.1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் பூத்த யாழ்ப்பாண இராச்சியம்

**வி. ஜீவகி**
கணிதத்துறை

யாழ்ப்பாண இராச்சியத்தினை உலக வரைபடத்திலே நோக்கும் போது கடுகளவாயினும் அதன் சரித்திரத்தினை நோக்கும் போது பெரிய பிரதேசங்களின் சரித்திரங்களுடன் ஒப்பிடும் அளவிற்கு சிறப்புடையது என்பது பெருமைக்குரிய விடயமாகும். அந்த வகையில் எமது இராச்சியத்தின் வரலாற்றினை அறிந்திருப்பது நமது கடமை ஆகும்.

இலங்கைத் தீவின் வடபகுதியாகிய யாழ்ப்பாண இராச்சியம் நாகதீபம் அல்லது நாகதீவு என அழைக்கப்பட்டது. இலங்கையின் பூர்வீகக்குடிகளான நாகர்கள் வாழ்ந்த பிரதேசம், பண்டையநாளில் நாகதீபம் என அழைக்கப்பட்டது. நாகதீபம் என்ற பெயர் சுட்டும் ஆள்புலம் நயினாதீவு எனச் சிலவிடத்தும்; அவ்வாறன்று யாழ்ப்பாணக்குடாநாடு எனச் சிலவிடத்தும் கருதப்பட்டது. மற்றும் ''வரலாற்றுக் காலத்தில் நாகதீபம்'' என்ற பிரதேசம் இலங்கையின் இன்றைய வட மாகாணமாகிய யாழ்ப்பாண இராச்சியத்தைக் குறிப்பதாக டபிள்யூ. கெய்கர் கூறியுள்ளார். மகாவில்லாச்சியா (மதவாச்சி) இற்கு வடக்கேயுள்ள பகுதியையே நாகதீபம் குறித்ததாக செலிக்மன் என்பவர் கூறினார். இலங்கையின் வடபகுதியே வரலாற்றுக்கால நாகதீபம் என்பது பாக்கர் என்பவரின் முடிவு. இரு நாக மன்னர்களுக்கிடையிலான தகராறைத் தீர்த்து வைப்பதற்காக புத்தர் நாகதீவிற்கு இரண்டாவது முறையாக வருகைதந்தார் என மகாவம்சம் குறிப்பிடுகிறது. வசபன் என்ற மன்னன் அநுராதபுரத்தை ஆண்ட காலத்தில் சிங்கையன் என்பவன் நாகதீபத்தை ஆண்டதாக வல்லிபுரத்தில் கிடைத்த பொற்சாசனம் குறிப்பதில் இருந்து யாழ்ப்பாண இராச்சியம் "நாகதீபம்" என அழைக்கப்பட்டது என்பது நிரூபணமாகின்றது.

யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றிலே நல்லூர்க் கந்தசாமி ஆலயமானது முக்கியமானதாக விளங்குகின்றது. யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதனை அமைக்கப்பட்ட காலம், அமைத்தவர் பெயர் என்பன குறித்து யாவரும் ஆதாரமாகக் கொள்ளும் பாடல் ஒன்று யாழ்ப்பாண வரலாற்றின் இலக்கிய ஆதாரங்களில் ஒன்றாகக் கொள்ளப்படும் கைலாய மாலையின் முடிவில் தனிப்பாடலாக வந்துள்ளது.

இலக்கிய சாகாத்த மெண்ணூற்
-றெழுபதா மாண்டதெல்லை
அலர் பொலி மாலை மார்பனாம்
-புவனேகபாகு
நலமிகும் யாழ்ப்பாண நகரி கட்டுவித்து
-நல்லைக்
குலவிய கந்தவேட்குக் கோயிலும்
-புரிவித்தானே

இப் பாடலில் இருந்து நல்லூர் கோவிலைக் கட்டியவன் புவனேகபாகு எனவும் இக் கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ற்றெழுபதாமாண்டில் கட்டப்பட்டது எனவும் தெரிகிறது. மற்றும் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாணச்சரித்திரம் என்ற நூலில் காணப்படும் விசுவநாதசாஸ்திரியார் சாவக்குறிப்பிலும் நல்லூர் கந்தசுவாமி கோவிலை புவனேகபாகு கட்டினார் என குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு

**இலக்கிய சகாத்த மெண்ணூற்**
**-றெழுபதாமாண்டதெல்லை**
**அலர்திரி சங்கபோதியாம் புவனேகபாகு**
**நலமுறும் யாழ்ப்பாணத்து நகரி**
**-கட்டுவித்துக்**
**குலவியகந்தனார்க்குக்**
**-கோயிலொன்றமைப்பித்தானே**

என்ற பாடலின் மூலம் அறியலாம்

யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆட்சி செய்த மன்னர்களில் சங்கிலிய மன்னனுக்கு முக்கிய இடமுண்டு. இவனே யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி மன்னன் ஆவான். கி.பி 1591 இல் போர்த்துக்கேயர் மூன்றாவது தடவையாக அந்திரே பூர்த்தாடு தே மென்டோன்சா எனும் படைத்தலைவனை, பெரும்படையுடன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தனர். தமிழர் படையுடன் பறங்கியர் படையும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கும் வீரமாகாளிஅம்மன் கோயிலுக்குமிடையில் மோதின. தமிழர்படை தோல்வியைத் தழுவ நேர்ந்தது. பூர்த்தாடு, பெரியபிள்ளையின் மகனாகிய எதிர்மன்னசிங்கனை மன்னனாக்கி மீண்டான். எதிர்மன்னசிங்கன் கி.பி 1616 மரணமடைய சங்கிலியகுமாரன் செகராசசேகரன் அரியணையில் அமர்ந்து கொண்டான். கி.பி 1620 ஆம் ஆண்டு போர்த்துகேயரின் இறுதிபடையெடுப்பு நிகழ்ந்தது. இப்போர்த்துக்கேயப் படையெடுப்புக்கு பிலிப்தே ஒலிவேறா என்பவன் படைத்தலைமை தாங்கினான்.

இப் படையெடுப்பில் போர்த்துக்கேய வீரர்கள் அதிகமாகக் கொல்லப்பட்டார்கள் சங்கிலியன் சூழ்ச்சியால் குடும்பத்துடன் சிறைப்பிடிக்கப்பட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியம் பற்றிய குறிப்புக்கள்

ரி. சுகன்யா
கணிதத்துறை

யாழ்ப்பாணமானது யாழில் வல்ல ஒரு பாணனுக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டமையின் காரணத்தால் யாழ்ப்பாணமெனப்படுவதாயிற்று. மணற்றி என்பது அதன் பூர்வ நாமம். அது பின்னாளில் மணற்றிடல் என்னும் பெயரில் விளங்கியது. இம் மணற்றி என்னும் பெயர் இறையனார் அகப்பொருள் உதாரணச் செய்யுட்களில் வருகின்றது.

அதன் வடக்கும் கிழக்கும் வங்காளக்குடாக்கடலும் தெற்குப் பூநகரிக்கடல், பண்ணைக்கடல்களும் மேற்குக் கோடிக்குடாக்கடலும் எல்லைகளாகும்.

யாழ்ப்பாண வரலாற்று மூல நூல்களில் ஒன்றான வையாபாடலில், அரசின் ஆரம்பத்தைக் கி.மு 101 என்று கூறுகிறது. இன்னொரு நூலான வைபவமாலை இவரது கி.பி 1314 இல் தொடங்கியதாகச் சொல்கிறது. எனினும் பல ஆய்வாளர்கள் யாழ்ப்பாண அரசு கி.பி 13ம் 14ம் நூற்றாண்டை அண்டிய காலப்பகுதியிலேயே தொடங்கியிருக்கக் கூடும் எனக் கருதுகிறார்கள். 11ம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழனின் இலங்கைப் படையெடுப்பு 13ம் நூற்றாண்டில் கலிங்க மாகனின் படையெடுப்பு என்பன யாழ்ப்பாண அரசு உருவாக்கத்திற்கான களம் அமைத்துக் கொடுத்தன. ஆயினும் அதன் தோற்றம் பற்றிய வாத எதிர்வாதங்கள் தொடர்ந்தும் நிலவியே வருகின்றன.

யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றி தெளிவற்ற கருத்துக்களும் வரலாற்று ஆய்வாளர்களான கே. எம். டி. சில்வா, சிவசுப்ரமணியம் பத்மநாதன், கா. இந்திரபாலா போன்றோர் பரவலாக ஆரியச் சக்கரவர்த்திகள் அரசு யாழ்ப்பாணத்தில் 1215 இல் இந்தியாவின் கலிங்க நாட்டைச் சேர்ந்த தளபதி கலிங்க மாகன் படையெடுப்புடன் ஆரம்பமாகியது என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். பொலன்னறுவை அரசின் தன்னுடைய படையினர் மற்றும் கலிங்கம், கேரளம், தமிழ் நாடு, ஆகிய இடத்து கூலிப்படையினர் உதவியுடன் ஆட்சி செய்த பாண்டிய மன்னன், இரண்டாம் பராக்கிரம பாண்டியனை கலிங்கமாகன் சிம்மாசனத்தை விட்டு அகற்றினான். இலங்கையில் யாழ்ப்பாண அரசு உட்பட பாண்டியர்களுக்கு கப்பம் செலுத்திய நிலப்பகுதிகள் கிட்டத்தட்ட 1250 ஆகும்.

யாழ் தீபகற்பத்தில் அரசு "பாறு" என்ற துணைப்பிரிவுகளுடன் மாகாணங்களாகப் பிரித்து இருந்தது. ''பாறு'' பெரிய நிலப்பகுதிகளாகக் காணப்பட்ட, சிறிய பிரிவுகளாக ஊர் அல்லது கிராமங்கள் காணப்பட்டன. இவை பிராந்திய அடிப்படையில் அல்லது படிநிலை அடிப்படையில் நிறுவகிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் படிநிலையின் உச்சத்தில் இருந்தான். அவனுக்குப் பின் அவனுடைய மூத்தமகனுக்கு அது சென்றது. இதற்கு அடுத்தபடி நிலையில் அதிகாரிகள் மாகாண நிருவாகிகளாக இருந்தனர்.

இந்தியாவிலிருந்து ஆரம்ப காலத்தில் குடியேறியவர்கள் முதற்கொண்டு தொடர்ச்சியாக வரலாற்றை சைவசமயம் இலங்கையில் கொண்டுள்ளது. பௌத்த சமயம் செயற்பாட்டில் இருந்த போது கூட இந்து சமய வழிபாடு பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இலங்கையில் சோழர் காலத்தில் கிட்டத்தட்ட 9ம் 10ம் நூற்றாண்டுகளில், அலுவலக சமயத் தகுதியை இந்து சமயம் பெற்றிருந்தது. சோழருக்குப்பின் ஆட்சி செய்த கலிங்க மாகன் அக்காலத்தில் சுதேச இலக்கிய இந்து மறுமலர்ச்சிக்கு உதவினார். யாழ்ப்பாண அரச காலத்தில் சைவம் அரச சமயமாக இருந்து எல்லாச் சலுகைகளையும் பெற்றுக்கொண்டது.

அரச குல மன்னர்கள் இலக்கியத்திற்கும் கல்விக்கும் ஆதரவு வழங்கினர். கோயில் பள்ளிகள் வீட்டுத்தாழ்வார பாரம்பரிய குருகுலம் என்பன மேல் வகுப்பினருக்கு தமிழ்மொழி சமஸ்கிருதம், சமயம், போன்றவற்றில் அடிப்படைக் கல்வியினை வழங்கினர். ஜெயவீர சிங்கையாளரின் ஆட்சிக் காலத்தில் மருத்துவ விஞ்ஞான செயற்பாடு, சோதிடம், கணிதம் ஆகியன எழுதப் பட்டன.

**சிலப்பதிகாரம் ஒரு பண்பாட்டுக் காவியம்**

சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் மட்டுமன்றி தலை சிறந்த பண்பாட்டுக்காவியமாகவும் இலக்கியமாகவும் திகழ்கின்றது. அது ஆராயுந்தோறும் அறிவைப்பெருக்கும் அமுதசுரபியாகத் தோன்றுகின்றது. ஒரு பிறவியில் படித்தாலும் முழுமையான உள நிறைவு பெற்று விட முடியாத அளவு சிறப்பும் பெருமையும் உடையது. எளிமையும் தூய்மையும் பெற்று வாழ்க்கை இலக்கியமாகவும் திகழ்கின்றது.

**பேராசிரியர் ஆ.சதாசிவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப் பெருமைமிக்க யாழ்ப்பாண இராச்சியம்

**கே. ஜனனி**
**கணிதத்துறை**

இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்பு (161 B. C) அரசு, ஏலேலன் காலத்தில் தொடங்கியது. அரசின்றி சிலகாலம்; வழி வழி அரசோடு நெடுங்காலம்; சிங்கள அரசு சிலகாலம், தமிழரசு சிலகாலம் என ஆட்சி நடைபெற்றது. 1700 வருடங்களாக சுதேச அரசு ஆட்சி நடந்தது. 40 வருடங்களாகப் பறங்கிய அரசு ஆட்சியும் 150 வருடங்களாக ஒல்லாந்து அரசு ஆட்சியும் இடம்பெற்றது. ஏறக்குறைய 2000 வருட சரித்திரத்தை யாழ்ப்பாணமுடையது. வைபவமாலை, கைலாய மாலை, பரராசசேகரனுலா, இராசமுறை, வையாபாடல் ஆகியவை யாழ்ப்பாண சரித்திரத்தினை எடுத்துக் கூறும் ஆதாரநூல்களாக உள்ளன.

இலங்கையின் வடக்கேயுள்ள துவிகற்பமானது ''மணற்றி'' எனும் பூர்வ நாமத்தையுடையது. பின்னர் இது ''மணற்றிடல்'' என அழைக்கப்பட்டது. வடக்கே, கிழக்கே வங்காளக் குடாக்கடல், தெற்கே, பூநகரிக்கடல் பண்ணைக்கடல், மேற்கே கோடிக்குடாக்கடல் எனும் எல்லைகளால் சூழப்பட்ட பூர்வத்தில் சிறிய இடம் கடல் கொள்ளப்பட்ட பின்னர் திடராகி மணல் கொண்டு காலடைவில் உருவானது பண்டைக்குடிகளான நாகர்கள், திராவிடர்கள் வாழ்ந்த ஈழமண்டலத்தின் ஒரு பகுதியே யாழ்ப்பாணமாகும். காரை, வேலணை, புன்குடி, அனலை, நயினா, நெடுந்தீவு ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. விஜயன் (கி. மு 483 - கி. மு 445), பண்டுவாசுதேவா (444 - 414), அபயன் (414 - 394), பண்டுகாபயன் (377 - 307), முத்துசிவன் (307 - 247), தேவநம்பியதீசன் (247 - 207), உத்தியன் (207 - 197), மகாசிவன் (197 - 187), சூரத்தீசன் (187 - 177), அசேலன் ஆகிய ஆட்சியாளர்களினால் ஆளப்பட்டது யாழ்ப்பாண இராச்சியமாகும்.

யாழ்பாடி (யாழ்ப்பாணன்) என்பவன் பாடி எல்லாளனிடம் பரிசாகப் பெற்ற ''மணற்றி'' யாழ்ப்பாணம் என அழைக்கப்படுகின்றது. நல்லூரிலுள்ள சித்திவிநாயகராலயம் தற்போது சிவயாதெருவிலுள்ள விக்கினேசுரமூர்த்தி என அழைக்கப்படுகின்ற இவ்வாலயத்தை யாழ்பாடி. நெற்பயிர்ச்செய்கையை அறிமுகப்படுத்தியவரும் இவரே. 70 வருடங்கள் ஆட்சியின் பின்னர் தென்பகுதி தலைவனானபோது, நல்லூரில் பெரிய மாளிகை, அரண், மதில், அகழி, சிங்காரவனம், மந்திரி, பிரதானிகளுக்கான மாளிகைகள், அந்தணர், வணிகர், வேளாளர்களுக்கான இருக்கைகள் மற்றும் வீதிகள், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, யானை குதிரையேற்றச் சவாரிக்கான வீதிகள் அத்துடன் வடக்கே சட்டநாதர் ஆலயம், கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம், தெற்கே கைலை விநாயகர் ஆலயம், மேற்கே வீரமாகாளி ஆலயம் ஆகியவற்றை அமைத்தான். அத்துடன் அந்தணர், கங்காதர ஐயர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னபூரணியார் ஆகியோருக்கான அகிரகாரம் என்பதையும் யமுனை ஏரி என்பதனையும் அமைத்தான்.

மந்திரியாக புவனேகபாகு, திருநெல்வேலிக்கு மழவராயன், மயிலம்பட்டிக்கு நரசிங்கதேவன், தல்லிப்பள்ளிக்கு சம்பகமாப் பாணன், சேகரமாப் பாணன், கனகராயன் ஆகியோரும் இணுவிலுக்கு பேராயிரவன், பச்சிலைப்பள்ளிக்கு நீலகண்டன், புலோலிக்கு கனகமழவன், தொல்புரத்திற்கு கூபகேந்திரன், கோயிலாக்கண்டிக்கு தேவராசேந்திரன், இருபாலைக்கு மண்ணாடு கொண்ட முதலி, நெடுந்தீவுக்கு தனிநாயக முதலி, பூநகரி பல்லவராயன், கட்டு, பொன்னாவெளி ஆகிய இடங்களுக்கு பல்லவன் ஆகியோரைப் பொறுப்பாக நியமித்தான். குளங்கள், வாய்க்கால்கள், மற்றும் தமிழ் அறிவை வளர்க்க தமிழ்ச்சங்கம், சிவாலயங்களை அமைத்தமை பற்றி கைலாசமாலை குறிப்பிடுகின்றது.

பின்னர் குலசேகர சிங்கையாரிய சக்கரவர்த்தி, குலோத்துங்க சிங்கையாரியன், விக்கிரமசிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரிய சக்கரவர்த்தி, குணபூஷண சிங்கையாரியன், வீரோதய சிங்கையாரியன், ஜெயவீர சிங்கையாரியன், குணவீரசிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி செய்தனர்.

இவர்களின் ஈட்சியின் பின்னர் சிங்கள அரசினால் கைப்பற்றப்பட்டது. இவர்களுடைய காலத்தில் மானிப்பாய், சண்டிருப்பாய், கோப்பாய், சுன்னாகம், மல்லாகம், கொடிகாமம், சூராவத்தை, சித்தாவத்தை, கற்பொக்கணை, உடுவில், கோண்டாவில், கொக்குவில், மிரிசுவில் ஆகிய சிற்றூர்கள் உருவாகின. புத்தகோயில்களும் பாஞ்சாலைகளும் தோற்றம் பெற்றன.

பின்னர், பாண்டிய குமரன் 27 வருடங்களும், தத்துசேனன் ஏகசக்கராதிபதியாகவும் சிறிதுகாலமும் வீரதேவசோழனும் மூன்றாம் ஸ்ரீ சங்கபோதி மன்னனும், 4ஆம் அக்கிரபோதி மன்னனும், வீரவேந்திரனும், புவனேகபாகு, சயசிங்கன் ஆகியோரின் ஆட்சியைத் தொடர்ந்து விஜயபாகு, பரராசசேகரன், செகராசசேகரன், சிங்கவாகு, பரநிருபசிங்கன், சங்கிலியன் ஆகியோரின் ஆளுகையைத் தொடர்ந்து பறங்கிக்காரர் சங்கிலியனால் துரத்தி விடப்பட்டனர். பரராசசேகரன் மற்றும் சங்கிலியன் ஆகியோரின் மரணத்தின் பின்னர் ஒல்லாந்தர் வசமானது. அதன் பின்னர் ஆங்கில அரசாட்சி வந்தது. கல்வி வளர்ச்சியடைந்தது இவர்களது காலகட்டத்திலாகும். 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கை சுதந்திரமடைந்ததுடன் ஆங்கிலேய அரசாட்சி முடிவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியத்தின் பெருமை

**கே. கிருஸ்திகா**
ஆங்கிலத்துறை

யாழ்ப்பாணப் பட்டினம் என வழங்கிய தமிழரசின் தலைநகர் எங்கிருந்தது? அது யாரால் அமைக்கப்பெற்றது என்பன பற்றி பல்வேறுபட்ட மாறுபாடான கருத்துக்கள் நிலவி வருகின்றன. சிங்கள நூல்கள் யாவும் ஆரியச் சக்கரவர்த்தி "யாப்பா பட்டுன" என்னும் நகரிலிருந்து ஆண்டான் என்று கூறுகின்றன. சிங்கள நூல்களில் யாப்பா பட்டுன என வருவது தமிழாதாரங்களில் யாழ்ப்பாணம் என வரும் நகரமே ஆகும்.

ஆரியச் சக்கரவர்த்திகள் சிங்கை நகரிலிருந்து ஆண்டானரென்று சில தமிழ் நூல்கள் கூறுகின்றன. ஆரியச் சக்கரவர்த்தியைச் சிங்கையாதிபன் சிங்கை காவல் மன்னன் எனத் தக்ஷிண கைலாசபுராணம் குறிப்பிடுகின்றது இதே போல செகராசசேகரமாலை, செகராசசேகரம் ஆகிய இரு நூல்களும் முறையே சிங்கையெங்கோமான் எனவும் சிங்கைமேவுமாரியர் கோன் எனவும் யாழ்ப்பாண மன்னனை வர்ணிக்கின்றன. பதினைந்தாம் நூற்றாண்டின் நடுகூற்றில் வாழ்ந்த அரசசேகரி பராக்கிரமபாண்டியனின் பட்டயமொன்றிலும் யாழ்ப்பாணத்து அரசன் சிங்கை மன்னனென்றே கூறப்பெற்றுள்ளான். ஆகவே ஆரியச் சக்கரவர்த்திகளின் தலைநகர் சிங்கை நகரென வழங்கிற்றென்பது தெளிவாகும். இம்மன்னர் சிங்கை நகரிலிருந்து ஆட்சி புரிந்தமையாலே சிங்கையாரியர் எனவும் வழங்கப்பெற்றது.

போர்த்துக்கேயர் வட இலங்கையைக் கைப்பற்றிக்கொள்வதற்கு முந்தியகாலத்தில் ஒன்றரை நூற்றாண்டுகளாக யாழ்ப்பாண மன்னர்கள் நல்லூரிலிருந்தே ஆட்சி புரிந்தனர். போர்த்துக்கேய நூல்களும் யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களும் சங்கிலி முதலிய அரசர்கள் நல்லூரிலிருந்தே ஆண்டனரென்பதை உறுதிப்படுத்துகின்றன. மேலும் யாழ்ப்பாண மன்னர் நல்லூரிலிருந்து ஆண்டதற்குச் சான்றாகச் சில கட்டட அழிபாடுகளும் இடப்பெயர்வுகளும் உள்ளன. எனினும் சிங்கை நகரென வழங்கிய நகரம் வல்லிபுரமெனவும், அங்கிருந்தே செண்பகப் பெருமாளின் படையெடுப்புவரை ஆரியச்சக்கர வர்த்திகள் ஆண்டனரெனவும், பின், செண்பகப் பெருமாளே நல்லூரில் இராசதானியை அமைப்பித்தான் எனவும் முதலியார் இராசநாயகம் எழுதியுள்ளார்.

முந்திய காலங்களில் யாழ்ப்பாணப் பட்டினமே வட இலங்கையில் நிலைத்த அரசின் தலைநகராக இருந்தது. யாழ்ப்பாண பட்டினமே சிங்கை நகரெனவும் வழங்கிவந்ததென்று கொள்ளப்படுகிறது. பறங்கியர் 1590 இல் கொழும்புத்துறையிலிருந்து நல்லூரை நோக்கிச் செல்லும் வழியில் சிங்கைநகரெனும் ஒரு பலம் பொருந்திய அரணிருந்ததெனக் குவறொஸ் சுவாமியார் கூறுவதும் இம்முடிவுக்கோர் ஆதாரமாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கைநகரென வழங்கிய யாழ்ப்பாண நகரம் அந்நாட்களில் இராசதானியான நல்லூரையும், இன்று யாழ்ப்பாண நகரமென வழங்கும் துறைமுகத்தைக் கொண்ட நிலப்பகுதியையும் உள்ளடக்கியிருந்ததென்று கொள்ள வேண்டும். கைலாயமாலையும் நல்லூரிலேயே சிங்கையாரின் அரசிருக்கையை அமைப்பித்தான் என்று ரைக்கின்றது. கைலாயமாலையைத் தழுவி மயில்வாகனப் புலவரும் சிங்கையாரியன் நல்லூரில் அரண்மனையையும் அத்துடன் குதிரைப்பந்தி, யானைப்பந்தி, போர் வீரருக்கான இல்லங்கள் ஆகியவற்றையும் அமைப்பித்தான் என கருதப்படுகின்றது.

பாண்டியரின் மேலாதிக்கம் ஏற்பட்ட காலத்திலோ அதற்கு முன் சோழராட்சி நிலவிய காலத்திலோ நல்லூர் என்ற பெயர் வழக்கில் வந்திருக்க வேண்டும். புவனேகபாகு என்னும் பெயரைக் கொண்ட ஏழு மன்னர்கள் ஈழத்திலாண்டனர். அவர்களுட் கோட்டையிலிருந்து ஆண்ட ஆறாம் புவனேகபாகு (1467 - 72) மட்டுமே வடஇலங்கையையும் ஆண்டான்.

தமிழரசின் தலைநகராகவிருந்த யாழ்ப்பாணப் பட்டினத்தின் சிறப்புக்களை கோகில சந்தேஸய என்ற சிங்கள நூல் பின்வருமாறு கூறும்.

யாழ்ப்பாணப் பட்டினத்திற் பொன்மயமான கொடிகள் பொருந்திய மாளிகைகள் நிரை நிரையாகவுள்ளன மாடங்களிலே பதிந்துள்ள மணிகளும் நகரைப் பிரகாசிக்கச் செய்கின்றன. இந்நகரம் சிறப்பிலும் அழகிலும் அழகாபுரியென விளங்குகின்றது.

இதன் மூலம் யாழ்ப்பாண இராச்சியத்தின் சிறப்புக்கள் தெளிவாக எடுத்துரைக்கப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிசார் பண்பாட்டுக் கூறுகள்

ரி. முபீதா
சித்திரத்துறை

யாழ்ப்பாணப் பிரதேசத்திற்கெனத் தனித்துவமான சிறப்பானதோர் மொழிப் பண்பாடு உண்டு எனக் கூறப்படுகிறது. தமிழ் மொழிப் பண்பாட்டில் 'யாழ்ப்பாணத் தமிழ்' என அடையாளம் சுட்டும் மரபும் உண்டு. இலங்கையின் ஏனைய பகுதி ஆய்வாளர்களும் தமிழகத்து ஆய்வாளர்களும் 'யாழ்ப்பாணத் தமிழ் நல்ல தமிழ்' என்று கூறும் வழக்காறு உண்டு. (இராஜாஜியின் சிறுகதையில் வரும் சம்பவம் ஒன்று நல்ல சான்றாகும்.)

யாழ்ப்பாணத்து மொழிவழக்கில் எழுத்து மொழி பெரும்பாலும் ஒரே தன்மையாகவே காணப்படுகிறது. ஆனால் பேசும் மொழியில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணப் பிரதேசத்தினுள்ளும் வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப்பற்று ஆகிய பிரதேசங்களிலே வெவ்வேறு வகையான பேச்சு மொழி வழங்கி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று இவை பெருமளவுக்குக் குறைந்துவிட்ட கல்வி மற்றும் போக்குவரத்து, சமுகமாற்றம், நவீன மயமாக்கல் முதலியவற்றால் இன்று யாழ்ப்பாணம் பிரதேசப் பேச்சு வழக்கில் பெருமளவிற்குப் பொதுத் தன்மை காணப்படுகிறது. எனினும் சிற்சில பகுதிகள், கிராமங்களில் இன்றும் தனித்தன்மையுடைய மொழி வழக்குப் பண்பாடு உண்டு என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஈழத்துப் புனைகதை எழுத்தாளர்களில் பலர் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கைப் பதிவு செய்துள்ளனர். குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் முதல் மூன்று, நான்கு தசாப்தங்களுள் வெளிவந்த நாவல்கள், நாடகங்கள் சிறுகதைகளிலே யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்குச் சொற்களைப் பண்பாடு அடையாளமாக இனங்கண்டு பிரக்ஞை பூர்வமாகத் தமது படைப்புகளிலே பேராசிரியர் கணபதிப்பிள்ளை பதிவு செய்தமை குறிப்பிடத்தக்கது. இந்த வகையிலே டானியல் செ. கணேசலிங்கன் தொணியான் செங்கையாழியான் முதலான நாவலாசிரியர்களுக்கும் பல சிறுகதை ஆசிரியர்களுக்கும் முக்கியத்துவம் உண்டு.

யாழ்ப்பாணத்து மொழி வழக்கில் இடம் பெறும் பேச்சு வழக்குச் சொற்கள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், விடுகதைகள் முதலியவை மிகவும் முக்கியமானவை யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் வாழ்வியற் பண்பு காரணமாக உருவான அல்லது உருவாக்கப்பட்ட சொற்களை முழுமையாக தொகுக்கும் பணி இன்னும் குறிப்பிடத்தக்க அளவுக்கு நடைபெறவில்லை.

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு மொழி வழக்குச் சொற்களையும் அதனைச் சுட்டும் பொருளையும் பட்டியலிடுவது நமது நோக்கமன்று; அவை தனியான ஒரு நூலுக்கு உரியவை. எனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைமாதிரிக்குச் சில சொற்களைச் சுட்டிக் காட்டலாம்.

அவிச்சோர் (ஏமாற்றுக்காரன்)
அசுமாத்து (சந்தடி)
அல்க்கமலுக்க (அந்திரப்பட்டு)
அக்கப்பாடு (கஷ்டம்)
இறப்போர் (கஷ்டம்)
எடுபாடு (படாடோப வெளிப்பாடு)
ஊரத்தொழுவாரம் (ஊர்வேலை பயனற்றது)
தறுதலை (குழப்படிகாரன்)
முட்டுப்பாடு (கஷ்டம்)
கந்தறுந்த (ஒன்றுமில்லாத)
எம்டன் - எமில் (ஏமாற்றுக்காரர்)
கெடிமண்ட (அதிகமாகப் பயப்பட)

போன்ற இத்தகைய சொற்களின் பயன்பாட்டை யாழ்ப்பாணத்துக் கிராமங்களில் இன்றும் காணலாம்.

இவ்வாறே பழமொழிகள், மரபுத் தொடர்கள், விடுகதைகள் போன்றனவும் யாழ்ப்பாணப் பண்பாட்டிலே காணப்படுகின்றன. உதாரணமாகப் பனைமரத்திலே படவாள் பார்ப்பது கள்ளுக்குப் புரியன் கதை, கள்ளைக் கொடுத்து உள்ளதைக் கேள். இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கே உரிய பலவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

இப் பிரதேச மொழிவழக்குச் சமூக மாற்றம் காரணமாக அருகிப் போவதும் புகுவதான சொற்கள் வந்து சேர்ந்து வழங்குவதும் இயல்பானதே பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகையினானே (நன்னூல்)

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" - திருமூலர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலாயக் குடிப்பெயர்வும் யாழ்ப்பாண சமூகமும் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட நிலமைகள்

**சு. சரண்யா**
சித்திரத்துறை

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சி நிலவிய காலத்தில் யாழ்ப்பாணத்தில் மிஷனரி இயக்கம் காணப்பட்டது. இவை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன அவர்களால் நடாத்தப்பட்ட பாடசாலைகளிலே ஆங்கிலக்கல்வி பெற்று வெளியேறியவர். இலங்கையின் பிறபாகங்களிலும் பிரித்தானியர் ஆட்சி நிலவிய இந்தியா, பர்மா, மலாயா போன்ற இடங்களிலும் அரசாங்க உத்தியோகமும் வேறு தொழில்களும் காணப்பட்டது.

மிஷனரிமார்களிற்கு எதிராகத்தோன்றிய இந்து நிறுவனங்களினால் ஆங்கிலக்கல்வி பெற்று வெளியேறியோரும் இந்த மரபிலே இணைந்து கொண்டனர். இவற்றால் யாழ்ப்பாண சமூகத்திலே அரசாங்க தனியார் உத்தியோகம் பொறுத்து தனியான கௌரவமும், சமூக அந்தஸ்தைப் பொறுத்து உயர்வு மனப்பான்மையும் வளர்ந்து வந்தது.

இப்பின்னணியிலே யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்பட்ட அரசியல், பொருளாதார சமூக நிலைமைகள் எந்தளவிற்கு யாழ்ப்பாணத்தவர் மலாயாவிற்குக் குடிபெயர்வதற்கு உதவியிருந்தன என்பது நுணுகி நோக்க வேண்டிய ஒன்றாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் சிறிது முன்பாகவே யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து யாழ்ப்பாண மக்கள் குடிபெயர்ந்து செல்லத் தொடங்கி விட்டனர். இக் குடிப்பெயர்வு யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து புறப்பட்டு மற்றைய இலங்கை பிரதேசங்களிற்குச் செல்வதோடு மட்டுமல்லாது கடல் கடந்து இந்தியா, பர்மா, மலாயா போன்ற பிரதேசங்களுக்கும் செல்வதாக அமைத்து இவற்றுள்ளே மலாயத்தீபகற்பத்தில் காணப்படும் ஐக்கிய மலாய அரசுகள் தொடுவாய் குடியேற்றங்கள் ஐக்கியப்படாத மலாய அரசுகள் ஆகிய இம்மூன்றிற்கும் 1870 லிருந்து 1925 வரை பெருந்தொகையான யாழ்ப்பாணத்தவர் குடிபெயர்ந்து சென்றுள்ளவர்.

இக்காலப் பகுதியின் பின்னருங்கூட 1940 வரையுள்ள காலப்பகுதியுள்ளேயும் முதற்பகுதியைப் போல பெருமளவினர் அல்லாவிடினும் குறிப்பிடத்தக்க யாழ்ப்பாணத்தவர் குடிபெயர்ந்துள்ளனர். பொதுவாகக் குடிபெயர்வு எனும் போது தனியார் ஒருவரோ அல்லது ஒரு குழுவோ தனது இருப்பிடத்தை நிரந்தரமாக மாற்றி அமைப்பதே கருதுகின்றது ஒரு சமூக அமைப்பில் இருந்து இன்னோரு அமைப்பை நோக்கி குடிபெயர்வு இடம்பெறும் போது புதிய அமைப்புடன் ஒத்துப் போகக் கூடிய தன்மையைப் பெற்றுக் கொள்வது அவசியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையிலே மானிடக் குடிபெயர்வு பற்றி அதன் இயக்கத்தை ஆராய்ந்துள்ளனர் இக்கோட்பாடுகளாக காணப்படுகின்றன.

தள்ளுவிசை எனக் கூறும் போதும் ஒரு பிரதேசத்தில் இயற்கை வளங்கள் அழிந்து அதனால் வறுமை ஏற்பட்டு அங்குள்ளவர் வேறிடங்களுக்குச் செல்லத் தூண்டப்படுவதைக் கொள்ளலாம். உ- ம் 1845 இலும் 1846 இலும் அயர்லாந்திலும் ஜேர்மனியின் றைன் நதிப்பிரதேசத்திலும் உணவுப் பொருளாக இருந்த உருளைக்கிழங்கு விளைச்சல் தொடர்ந்து தோல்வி அடைந்தமையினால் குடியேற்றுவதைத் தவிர அப்பிரதேசத்தவருக்கு வேறு வழியே இருக்கவில்லை என்பதைக் காட்டலாம்.

இழுவிசை என்று கூறும் போது ஒரு பிரதேசத்தில் சிறந்த வேலை வாய்ப்பு வசதிகள், அதிக சம்பளம், இருப்பிட வசதிகள் உயர்ந்த வாழ்க்கைத் தரம் தங்கம், வெள்ளி போன்ற பெறுமதிக்க பொருள் கிடைப்பது என்பவற்றால் மக்கள் கவரப்பட்டு இப் பிரதேசங்களுக்கு இழுத்துச் செல்லப்படலாம் எப்படி இருந்த போதும் அநேகமான குடிபெயர்புகளில் இந்த இரண்டு சக்திகளும் செயற்படுவதனை அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து மலாயதீபகற்பகத்திற்கு குடி பெயர்ந்தமை அத்லாந்திக் பெருங்குடி பெயர்வுடனோ தென்னிந்தியாவில் இருந்து பிரித்தானியா ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களுக்குக் குடிபெயர்ந்தமையுடனோ ஒப்பிடக்கூடிய அளவிற்கு பெரிதாக இல்லாவிடினும் அதனுடைய அளவு, தன்மைக் கேற்ற வகையில் முக்கியத்துவமான ஒன்றேயாகும். எனவே யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்து சென்றமைக்கான காரணங்களையும் மேற்குறிப்பிட்ட இரு காரணங்களின் ஊடாக விளக்கிக் கொல்லலாம்.

அரியதும் பெரியதுமான யாழ் நூலகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியம் (கி.பி 13-கி.பி 17 வரை)

ய. தரணிகா
ஆரம்பக்கல்வித்துறை

யாழ்ப்பாண இராச்சியம் என்று கூறும் பொழுது போர்த்துக்கேயர் இலங்கை வந்த பொழுது யாழ்ப்பாணம், மன்னார், பனங்காமம், முள்ளியவளை தென்னமரவடி ஆகிய வன்னி மையங்களைக் கொண்டிருந்த இராச்சியமாகக் கருதப்படுகின்றது. இவர்களது ஆதிக்கம் சிலவேளையில் புத்தளம் கற்பிட்டி வரைக்கும் பின்னர் நீர் கொழும்பு வரைக்கும் கிழக்குப் பகுதியில் பாணமை வரைக்கும் பரவியிருந்தது. பின்னர் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியுற்றது. கி.பி 13ம் நூற்றாண்டிலே தோன்றிய யாழ்ப்பாண இராச்சியம் 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நீடித்தது. பொதுவாக இதனை ஆண்ட அரசை ஆரியச்சக்கரவர்த்தி என்று அழைப்பர். இவர்கள் தென்னிந்தியாவில் இருந்து இங்கு வந்து படையெடுப்பு நடத்தி வெற்றி கொண்ட பரம்பரை ஆகும். இவர்களது ஆட்சி மிகச் சிறப்பாக இருந்து வந்த காலத்திலே போர்த்துக்கேயர் ஆதிக்கத்துக்குப் பின்னர் அதனை எதிர்த்த சங்கிலி மன்னனுடைய தோல்வியோடு முடிவிற்கு வருகின்றது. சங்கிலியன் இவர்களின் ஆதிக்கத்துக்கு எதிராகச் செயற்பட்டமையால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற போர்த்துக்கேயர் முயன்றனர். இதன் பின் 1560 ஆம் ஆண்டு சங்கிலியனுக்கு எதிராகப் படையெடுப்பு நடத்தப்பட்டது. இதனைச் சங்கிலியன் முறியடித்தான். எனினும் பின்னர் ஏற்பட்ட பதவிப் போட்டிகள் காரணமாக சங்கிலியன் இறக்க பிலிட்டி ஒலிவேரா என்ற போர்த்துகேய தளபதி தலைமையில் ஒரு படை; தரை வழியாகவும் அனுப்பப்பட்டது. தரை வழியாக வந்த 5000 போர் வீரரைக் கொண்ட படை பூநகரிக் கூடாகவே வந்தது.

இவ்வாறாக 1019 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சி அடைந்தது. அப்போது ஆண்ட சங்கிலி குமாரன் என்பவன் சிறைபிடிக்கப்பட்டு கோவாவிற்கு அனுப்பப்பட்டான். கி.பி 13ம் நூற்றாண்டில் இருந்து கி.பி 1620 இல் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்படும் வரை யாழ்ப்பாண அரசு நிலவி வந்ததற்கான தெளிவான ஆதாரம் உண்டெனினும் அதன் தோற்றம் பற்றிய வாத எதிர்வாதம் தொடர்ந்தும் நிலவியே வருகின்றது. எனினும் பல ஆய்வாளர்கள் யாழ்ப்பாண அரசு கி.பி 13 ஆம் 14 ஆம் நூற்றாண்டை அண்டிய காலப்பகுதிகளிலேயே தொடங்கியிருக்கக் கூடும் எனக் கருதுகிறார்கள். 11ம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழனின் இலங்கைப் படையெடுப்பு. 13ஆம் நூற்றாண்டில் கலிங்க மாகனின் படையெடுப்பு என்பன யாழ்ப்பாண அரசு உருவாவதற்கான களத்தை அமைத்துக்கொடுத்தன. யாழ்ப்பாண அரசின் தலைநகரமாக இருந்தவையென சிங்கை நகர், நல்லூர் என இரண்டு பெயர்கள் கூறப்படுகின்றன. தற்போதைய யாழ்ப்பாண நகருக்கு அருகேயுள்ள நல்லூர் அரசின் இறுதிக்காலத்தில் தலைநகரமாயிருந்ததென்பதில் ஐயமெதுவும் இல்லை. சிங்கை நகரென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக் கரையிலுள்ள வல்லிபுரப் பகுதியில் அமைந்திருந்ததென்றும் இவ்வரசின் ஆரம்பகாலத் தலைநகரம் இதுவேயென்றும் சிலர் கூற, சிங்கை நகரென்பதும் நல்லூரையே குறிக்குமென்றும், யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரம் நல்லூர் மட்டுமேயென்றும், வரலாற்று ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சி எல்லை குடாநாட்டுப் பகுதியை தளமாகக் கொண்டு,சமயங்களில் இவ்வரசின் எல்லை. வன்னிப் பகுதி முழுவதையும் உள்ளடக்கி மேற்குக் கரையில் புத்தளம் வரை கூடப் பரந்து இருந்ததாகக் கூறப்படுகின்றது. 16 ம் நூற்றாண்டின் முற்பகுதியில் போர்த்துக்கீசரின் நடமாட்டம் இலங்கையையண்டிய கடற்பிரதேசத்தில் அதிகரித்து இலங்கை அரசியலிலும் அவர்கள் தலையிட துவங்கிய பின்னர், யாழ்ப்பாண இராச்சியத்திலும் அவர்கள் பார்வை விழுந்தது. போர்த்துக்கீசரின் செல்வாக்கால் இப் பிராந்தியத்தில் கத்தோலிக்க மதம் தலையெடுக்க ஆரம்பித்து, யாழ்ப்பாண இராச்சியத்திலும் மத மாற்றங்கள் தொடங்கிய போது அப்போதைய யாழ்ப்பாண அரசின் , தனது, ஆளுகைக்குட்பட்ட மன்னாரில் அவ்வாறு மதம் மாறியோரைச் சிரச் சேதம் செய்வித்ததாக சொல்லப்படுகிறது.

இதனைச் சாக்காக வைத்துக்கொண்டு, 1560 இல் போர்த்துக்கீசத் தளபதி டொம் கொன்சுடன்டீனா டி. பிரகன்சா, யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினான். எனினும் நாட்டுக்குள்ளேயே போர்த்துக்கீசருக்குப் போக்குக்காட்டிய யாழ்ப்பாண அரசன் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள இணங்கினான். எனினும் போர்த்துக்கீசரின் கடுமையான நிபந்தனைகளை நிறைவேற்ற முடியா யுக்தியினால் அவர்களை நாட்டை விட்டு விரட்டினான். ஆனாலும் போர்த்துக் கீசரும் யாழ்ப்பாண அரசுக்குக் கீழ்ப்பட்ட மன்னார் தீவைத் தாக்கி அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். தொடர்ந்து1591 இல் அந்தரே பூத்தாடோ (Andre Furtado) என்னும் தளபதி தலைமையில் போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தை தாக்கிக் கைப்பற்றிக் கொண்டனர்.

இப்போரில் யாழ்ப்பாண அரசன் கொல்லப்பட, அவனுடைய மகனுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு அவனை அரசனாக்கி மீண்டனர். இதன் பின் 1620 வரை போர்த்துக்கீசரின் தயவிலேயே யாழ்ப்பாண மன்னர்கள் நாட்டை ஆண்டு வந்தனர். 1620 இல் இராச்சியத்தில் ஏற்பட்ட பதவிப்போட்டியைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றித் தங்கள் நேரடிக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததின் மூலம் யாழ்ப்பாண மன்னராட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

1658 இல் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டது. இவர்கள் 138 வருட காலம் ஆண்ட பின் 1796 இல் யாழ்ப்பாண இராச்சியத்தை பிரித்தானியரிடம் பறி கொடுத்தனர். பிரித்தானியர் யாழ்ப்பாண இராச்சியத்தையும் அவர்களால் கைப்பற்றப்பட்ட இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகளுடன் சேர்த்து ஒரே அலகாக நிர்வகித்தனர். 1948 மாசி 4 ஆம் திகதி முழுத்தீவையும் ஒரே நாடாகவே சுதந்திரம் கொடுத்து விட்டு வெளியேறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பண்பாடு (குழு நாடகம்)

**இ. இந்து**
விஞ்ஞானத்துறை

**இடம்:-** வீட்டு முற்றம்

**பாத்திரம்:-** தாத்தா, பாட்டி, அம்மா, அப்பா, கமலா, விமலா.

**தாத்தா:-** எங்களுடைய ஊரின் பண்பாடும் பாரம்பரியமும் இப்போது குறைந்து கொண்டு, இல்ல அழிந்து கொண்டே வருகிறது.

**பாட்டி:-** எவ்வளவு கால பண்பாடும், கலாசாரத்தையும் கொண்டது எங்களின் யாழ்ப்பாண இராச்சியம்.

**கமலா:-** பாட்டி அதன் பண்பாடு பற்றியும் அதன் பெருமையைப் பற்றியும் கூறுங்களேன்

**அப்பா:-** யாழ்ப்பாணத்துக்கு என்று பல தனித்துவங்களும் பெருமைகளும் உள்ளன. இதுக்கு என பல சிறப்பு உணவுகள் உண்டு "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற இலக்கிய மரபு ஒன்று உண்டு.

**அம்மா:-** யாழ்ப்பாண மக்களின் வாழ்வோடு இணைந்தது பனை. உணவுத் தேவையை பூர்த்தி செய்ய பனம் பண்டங்களை அதிகம் செய்தனர். மொசு மொசுக்கை அடை, பனங்காய் பலகாரம்,பனங்காய்பிட்டு, ஒடியற்பிட்டு, ஒடியற்கூழ், பிட்டு, இடியப்பம், அப்பம், பதநீரும் கள்ளும், சிறுதானிய உணவுகள் என உணவு வகைகள் உள்ளன. இவையாவும் இப்போது அழிந்து வருவதே கவலையாக உள்ளது.

**தாத்தா:-** யாழ்ப்பாணக் குடாநாட்டை கடல் சூழ்ந்து இருப்பதால் கடல் உணவுகளும் இங்கே சிறப்புத்தான்.

**பாட்டி:-** காலனித்துவ காலத்துக்கு முன் பால்,மோர், பழங்கஞ்சி, பதநீர் என யாழ்ப்பாணத்துக்கு என தனித்துவமான பானவகைகளும் கூட உண்டு மா, பலா, வாழை,வெள்ளரி,வத்தகை முதலான பழங்களும் சிறப்பு இங்கு. இன்று கூட யாழ்ப்பாண மாம்பழத்திற்குத் தனி மதிப்பு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அப்பா:-** யாழ்ப்பாணத்துக்கு என கிழங்கு வகைகளான இராசவள்ளி, மோதகவள்ளி, மரவள்ளி, வத்தாளை, சட்டிக்கறணை, என சிறப்புக் கொண்ட கிழங்குகள் உள்ளன. இக்கிழங்குகளுக்கு இப்போது யாழ்ப்பாணத்துக்கு வெளியில் மதிப்பு உண்டு என்பது மகிழ்வு தரும் செயல்.

**விமலா:-** பாட்டி யாழ்ப்பாண மக்களின் உறையுள் பண்பாடு பற்றிக் கூறுங்கள்

**பாட்டி:-** மனிதனுக்கு உணவுக்கு அடுத்தபடியாக தேவையாக உறையுள் தானே! இதுவும் யாழ்ப்பாண மக்களுக்கு எனத் தனித்துவமானது.

**தாத்தா:-** பொருளாதார நிலைக்கு என வீடுகள் அமைத்தனர். வறிய அடி நிலை சமூகத்தை சேர்ந்தோர் குடிசை இடைப்பட்டோர் மண் வீடுகளிலும் வாழ்ந்தனர். வசதி படைத்தோர் நாற்சார்வீடு, திண்ணையுடன் கூடிய வீடு என வாழ்ந்தனர். 2/3 குடும்பம் சேர்ந்து நாற்சதுரவீடும் அமைத்து வாழ்ந்தனர்.

**விமலா:-** அம்மா யாழ்ப்பாண மக்களுக்கு என சிறப்பு ஆடை அணிகலன் கூட இருந்தனவாம் அதைப் பற்றிக் கூறுங்கள்.

**அப்பா:-** 19ஆம் நூற்றாண்டுக்கு முன் இருந்த ஆடை அணிகலன் பற்றி அறிய இலக்கியங்கள்தான் உதவுகிறது.

**தாத்தா:-** வேளாளர் ஆடை பற்றி "வேளாளர் சீலையை இடுப்பிற்கட்டிக் கால்களுக்கூடாக இழுத்துச் சொருகிக் கொள்வார் காலில் செருப்புத் தொடுப்பர்கள் மேற்சொல்லிய அரைச்சீலையிலே மடிவிட்டு அதிலே வெற்றிலை பாக்கும் வைத்து இடையிலே ஒரு வெள்ளி காட்டி உறைக்குள்ளே கத்தி தொங்கவிடுவார்" என பல்டேயஸ் கூறியுள்ளார்.

**அம்மா:-** அவ்வளவு சிறப்பு வாய்ந்தது யாழ்ப்பாண ஆடைஅணி.

**பாட்டி:-** பெண்களின் உடை கிராமத்துக்குக் கிராமம் வேறுபட்டது.

**அம்மா:-** கெட்டிப்பூரன், அட்டியல், காசுமாலை,பதக்கம் என நகைகள் இருந்தன. மூக்குத்தி ,பிலாக்கு, சிமிக்கி,வளையல்

**அப்பா:-** அவற்றில் பல இன்று இல்லை என்பதே கவலையான விடயம்.

**தாத்தா:-** யாழ்ப்பாணத்துக்கு என சிறப்பான புழங்கு பொருட்களும் இருந்தன. ஆட்டுக்கல், அம்மி, திரிகை,செம்பு, மூக்குப்பேணி, மூடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டி, கடகம், சுளகு தட்டம் , திருகணை என பல. இதில் பல இத்தலைமுறைக்குத்தெரியாது.

**விமலா:-** யாழ்ப்பாணத்துக்கு என சிறப்பான போக்குவரத்து முறைகளும் இருந்தனவாம் அதைப் பற்றிக் கூறுங்கள்.

**தாத்தா:-** மாட்டுவண்டி, குதிரைவண்டி, றிச்சோ, வள்ளம், தோணி எனவும் பின் மோட்டார்வண்டி, புகைவண்டி என்பனவும் பயன்பட்டன.

**பாட்டி:-** கால் நடையாகப் பிரயாணம் செய்யும் வழக்கமே ஆரம்பத்தில் இருந்தது. இவர்கள் இளைப்பாற வீதியோரங்களில் சுமை தாங்கியும் மடங்களும் காணப்பட்டது. சுமைதாங்கி உடன் கேணி, குளம் காணப்பட்டன.

**அப்பா:-** தீபகற்பத்தைச் சூழவுள்ள தீவுக்கு போக்குவரத்துசாதனமாகத்தோணி, வள்ளம் பயன்பட்டது. பண்ணைப்பாலம் கட்டுவதற்கு முன் இவையே பயன்பட்டன.

**விமலா:-** யாழ்ப்பாணத் தமிழ் பற்றிக் கூறுங்கள்

**பாட்டி:-** யாழ்ப்பாண மொழிவழக்கில் எழுத்துமொழி ஒரே மாதிரித் தான் இருந்தது. பேச்சுமொழியே பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டது. வடமராட்சி,தென்மராட்சி,வலிகாமம், தீவு பகுதியில் வேறுபட்டாலும் இன்று குறைந்து விட்டன.

**தாத்தா:-** பிரதேசப்பேச்சு வழக்கில் பொதுத்தன்மை காணப்பட்டாலும் சில கிராமங்களில் இன்றும் வழக்கு பண்பாடு காணப்படுகிறது.

**அம்மா:-** இரவு 9 மணிக்கு மேல் ஆகிவிட்டது. காலை பாடசாலைக்குப் போகவும் வேண்டும் இன்று போய் அனைவரும் தூங்குங்கள் இன்னொரு நாள் யாழ்ப்பாண இராச்சிய சிறப்பு பற்றிக் கலந்துரையாடுவோம். (அம்மா, விமலா, கமலாவை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் போக அனைவரும் பின்னாலேயே சென்றனர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சிய ஆட்சிமுறை

ச.தர்சிகா
விசேட கல்வித்துறை

மத்தியகாலப் பகுதியில் இலங்கையில் அமைந்திருந்த இராச்சியங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பட்டினம் இலங்கையின் வட பகுதியிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களை உள்ளடக்கியிருந்தது.

யாழ்ப்பாணத்து அரசர்கள் சிங்கையாரியன், சேதுகாவலன், கங்கை நாடன் என்னுஞ் சிறப்பு பெயர்களையுங் செகராசசேகரன், பரராசசேகரன் எனும் சிம்மாசனப் பெயர்களையுங் கொண்டிருந்தனர். ஆட்சியுரிமையானது தந்தைக்குப் பின் மகன் என்ற படியாக அமைந்திருந்தது. ஆட்சியுரிமை கொண்டவனைப் பட்டாபிஷேகம் பண்ணி முடி சூட்டுவது வழக்கம். சிங்கையாரியன் ஒருவனின் பட்டாபிஷேகத்தைக் கைலாயமாலை விரிவாக வர்ணிக்கின்றது. சோதிடர் நிச்சயித்த சுபவேளையிற் பல்வேறு புனித நதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட நீரால் அரசனை அமைச்சர்களும் அதிகாரிகளும் நீராட்டினர். அதன் பின்னர் அலங்காரமான வஸ்திரங்களை அணிவித்து வீரக்கழல் பதக்கம் பூட்டிய முத்துமாலை முதலானவற்றைப் புனைந்து அவனை அரியணையில் இருத்தினர். மறையவர்கள் மங்கள கீதம் பாட பல்வகை வாத்தியங்களும் முழங்க பாண்டிமழவன் அரசனுக்கு முதற்பட்டத்தை சூட்டினான்.

பட்டாபிஷேகம் முடிந்ததும் அரசன் தானங்கள் பலவற்றை வழங்கினான். முடிசூட்டு விழாக்காலத்தில் இராசதானி விழாக்கோலமாயிருக்கும். சுற்றமும், சேனையும் உயரதிகாரிகளும் படைசூழ அரசன் யானை மேலேறி உலாப்போக அவனை நகரமாந்தர் வாழ்த்துவர்.

ஆரியச்சக்கரவர்த்திகளின் சேனாபலம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நிசங்க அழகக்கோனார் என்னுந் தென்னிலங்கைப் பிரதானி போர் ஏற்படுத்திய பொழுது அவனுக்கெதிராக இலட்சக்கணக்கான சேன வீரர்களை ஆரியச்சக்கரவர்த்தி அனுப்பியிருந்தானென்று சிங்கள நூல்கள் மிகைப்படக் கூறுகின்றன.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த காலத்தில் முதலாம் சங்கிலி (கி.பி 1519-1561) இராசதானியைப் பாதுகாப்பதற்கு 12000 இற்கும் மேலான தொகையினரான போர் வீரர்களை நிறுத்தியிருந்தானென்று கேறோஸ் பாதிரியார் குறிப்பிடுகின்றார். தங்கள் படைகளிலே சேவை புரிவதற்கு அரசர்கள் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் படை வீரர்களை வரவழைப்பது வழக்கம்.

ஆறாம் பராக்கிரமபாகுவின் சேனாதிபதியான செண்பகப் பெருமாள் என்னுஞ் சப்புமல் குமாரன் 15 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்துச் சென்றபோது கருநாடர், கேரளர், தமிழர், துளுவர், வன்னியர், சோனகர், முதலியோர் ஆரியச்சக்கரவர்த்தியின் படையில் இருந்தனரென்று 'ராஜாவலிய' நூல் குறிப்பிடுகின்றது.

போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் அரசாங்கம் ஐரோப்பியரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் படைகளையும் சேவையில் ஈடுபடுத்தியிருந்தது. ஆரம்பகாலத்தில் 250போர்த்துக்கேயர் இராணுவத்திலே சேவை புரிந்தனர். காலப்போக்கில் அவர்களின் எண்ணிக்கை 200 ஆகியது. அவர்களுக்குப் பக்கபலமாகச் சிங்களப் படைகளையும் வைத்திருந்தனர். கண்டி மன்னனோடு தொடர்ச்சியான போர் ஏற்பட்டிருந்த காலத்திலே தென்னிலங்கையில் இருந்து படைகளை வரவழைத்துக் கொள்ள முடியவில்லை. எனவே போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்திலே இராணுவசேவை புரிவதற்கு எனத் தென்னிந்தியர்களை வரவழைத்தனர். யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை, மன்னார் ஆகிய இடங்களிலே பலமான கோட்டைகளை அமைத்து அவற்றைத் தமது பிரதானமான இராணுவ தளங்களாகப் போர்த்துக்கேயர் பயன்படுத்தினார்கள்.

ஒல்லாந்தரின் ஆட்சியின் ஆரம்பத்திலே யாழ்ப்பாணப் பட்டினத்திலும் அதன் எல்லைப் புறங்களிலும் 408 ஐரோப்பியர்களும் 165 லஸ்கோரிப் படைகளும் இராணுவ சேவையில் ஈடுபட்டிருந்தனர். யாழ்ப்பாணத்துக் கோட்டையிலும் அதன் வெளிப் புறங்களிலும் 245 ஐரோப்பியர்கள் தங்கியிருந்தனர். மன்னார், மாதோட்டம், அரிப்பு, கற்பிட்டி ஆகிய தலங்களில் எல்லாமாக 109 லஸ்கோரிப் படைகள் 5 அதிகாரிகளின் தலைமையிற் சேவை புரிந்தனர்.

1619ஆம் ஆண்டிலே யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிப் போர்த்துக்கேயர் அதனை ஒரு கிளைராச்சியமாகப் பிரகடனப்படுத்தினார். போர்த்துக்கேய தளகர்த்தன் ஒருவனை அதன் உயரதிகாரியாக நியமித்தனர். நிர்வாகப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கென்று திசாவையாகப் போர்த்துக்கேய அதிகாரி ஒருவனை நியமித்தனர். இவர்கள் கொழும்பிலுள்ள தளபதியின் மேற்பார்வையின் கீழே செயல்புரிய வேண்டும் ஆயினும் நடைமுறையில் யாழ்ப்பாணத்திலிருந்தே அதிகாரிகள் கோவாவிலுள்ள உயரதிகாரிகளோடு, நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர். 1560 ஆம் ஆண்டிலிருந்து தனிப் பிரிவாகப் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்டிருந்த மன்னார் பிராந்தியம் 1640 இல் மீண்டும் யாழ்ப்பாணப் பட்டினத்தோடு இணைத்துக் கொள்ளப்பட்டது.

போர்த்துக்கேயரின் ஆட்சியில் முற்காலத்து நிர்வாக முறையும் நிர்வாகப் பதவிகளும் தொடர்ந்தும் நிலை பெற்று வந்தன. குடிசனங்கள் நில புலங்கள், தொழில்துறைகள் முதலியன சம்பந்தமான விபரங்களைத்தோம்புகளில் எழுதும் வழக்கத்தைப் போர்த்துக்கேயர் ஏற்படுத்தினார்கள். தேசவழமையிலே அவர்களாற் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. பெற்றோர் தாம் விரும்பியவாறு முதுசொம், சீதனம் என்ற வகைக்குரிய சொத்துக்களைத் தங்கள் பெண்பிள்ளைகளைக் கலியாணம் முடித்து வைக்குஞ் சமயத்திலே அவர்களுக்குச் சீதனமாக கொடுக்கலாம் என்றவொரு புதிய ஏற்பாட்டைச் செய்தனர்.

ஒல்லாந்தர் 1658 ஆம் வருடத்தில் யாழ்ப்பாணப் பட்டினம் என்னும் இராச்சியம் முழுவதையும் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றி விட்டனர். இலங்கையில் அவர்கள் ஆட்சிபுரிந்த காலத்தில் அவர்களின் வசமிருந்த மூன்று பெரும் பிரிவுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாக அது விளங்கியது. கொம்மாந்தர் (Commandeur) என்னும் பதவிப் பெயர் கொண்ட படைத்தலைவன் ஒருவனே அதன் உயரதிகாரியாக விளங்கினான். முழு இராச்சியத்தின் பாதுகாப்பிற்கும், நிர்வாகத்திற்கும் அவனே பொறுப்பாயிருந்தான். இராச்சியத்தில் நிலை கொண்டிருந்த படைகளெல்லாம் அவனுடைய கட்டுப்பாட்டிலிருந்தன. இலங்கையிலுள்ள ஆட்சிக்குழுவில் அவன் அங்கத்தவனாகியிருந்தான். அதிலே தேசாதிபதிக்கு அடுத்த ஸ்தானம் அவனுக்குரியது என்பது குறிப்பிடற்குரிய ஒன்றாகும். தேசாதிபதி கூட்டத்திற்கு சமூகமளிக்காதவிடத்து, அதற்குத் தலைமை தாங்கும் உரிமை யாழ்ப்பாணத்துக் கொம்மாந்தருக்கு உரியதாகும்.

யாழ்ப்பாணக் கோட்டை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் தேசம்

விண் உலகம் போற்றும் செந்தமிழ் பேசும்
எம் இனியதேசம் இது.
வில் அம்பு நெஞ்சத்தைக் குடைந்தெறிந்த போதும்
புறமுதுகிடா வீர மண் இது.
செங்குருதி ஊளர் எங்கும் சிந்திய போதும்
மன உறுதி தளர விடா
திடம் கொண்ட தேசம் இது.
பொக்கிஷமான நூல்களைப் பக்குவமாய்
காத்து வைக்கும் இணையில்லாத நூலகம் இது
பல வளங்களைக் காப்பதைப்போல்
பனைவளத்தையும் காத்து நிற்கும்
வளம் பொருந்திய தேசமிது.
மண்ணுலகம் போற்றும் மாமன்னர்கள் வாழ்ந்த
செங்கோல் ஏந்திய அழிவில்லா மண் இது
பல்லாண்டு காலம் பண்பாட்டுடன் வாழும்
இணையில்லா பரம்பரை தேசம் இது.
நம் தேசம், நம் மக்கள், நாம் தமிழர்
எனும் உணர்வு வையகம் உள்ளவரை ஒளிர்ந்திடுமே.

**திலக்ஷனா சிவானந்தன்**
**விஞ்ஞானத்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்

கலாசாரத்தின் எஞ்சிய மிச்சசொச்சங்களையும்
தன்னகத்தே கொண்டு
தன்மானத் திமிரோடு நிமிர்ந்து நிற்கும்
சங்கிலியன் ஆண்ட இறுதிக் கோட்டை..........
பக்தியின் ஊற்றாய் பெருங்கோவில்களையும்
ஆசியாவின் அதிசயமான பொதுநூலகத்தையும்
பாதி நிலப்பரப்பில் பயிர் செய்து பிழைக்கும்
உழைக்கும் கரங்களையும்
அறிவியலுக்கே சவால் விடும்
அற்புத கல்விமான்களையும்
இலட்சிய வேட்கையோடு காத்திருக்கும்
இளைய குருதிகளையும் கொண்டு
இலங்கை வரைப்படத்தின் உச்சத்தில்
மிளிர்ந்து கொண்டிருக்கும்
யாழ்ப்பாணம் எங்கள் சொர்க்க பூமி!

**நிறோஜா சிவயோகநாதன்**
ஆங்கிலத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண அரசுத் தமிழர்கள்

தமிழே பெருமை கொள்ளும்
சங்கிலியனின் தலைநகரமாம்
யாழ்ப்பாணமதில் தலை நிமிர்ந்து வாழ்ந்த
தமிழர் பரம்பரை நாங்கள்

சொல்லிலும் செயலிலும் சிந்தனையிலும் கூட
நேர்மையும் வீரமும் பண்பாட்டு விழுமியமும்
உயிர் மூச்சாய் என்றும் எம்முள்
உதிரத்தில் கலந்திருக்கும்

தமிழனே உன்னால் தமிழ் தழைத்தோங்கட்டும்
பிறரை வாழவைத்து உன் கரங்கள் சிவக்கட்டும்
யாழ் மண்ணின் தமிழன் என்றால் உலகமே தலை வணங்கட்டும்
வீரமோ பாசமோ தமிழா உன் போல் தரணியில் யாருண்டு?

**கி.கீர்த்திகா**
விஞ்ஞானத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மண்ணின் மகிமை

இந்து சமுத்திரத்தின் கண்ணீர்த் துளியானது இலங்கை
இலங்கைக்கு பிரதானம் யாழ்ப்பாணம்
கலைக்குப் பெயர்பெற்ற தமிழன் அதற்கு
புகழ் கொடுத்த மண் இந்த யாழ் மண்

கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம், பாண்டித்தியம்
வீரம், தமிழ்ச்சுவை சொட்டும் இலக்கியங்கள் போன்ற
பல்வேறு தனிச்சிறப்பம்சங்களைக் கொண்ட
தனித் தாரகையாகத் திகழ்வது யாழ் மண்

எம்மண்ணின் பெருமைக்கான ஒரு வீர அடையாளம்
வீர மன்னர் வாழ்ந்த பெருமையைப் பறை சாற்றுவதற்காக
சுவடுகளாய் சுடர்விட்டு எரியும் முக்காலச் சின்னங்கள்
அனைத்தையும் கொண்ட மண் வீரமண் எம் யாழ் மண்

செந்தமிழ் துணையோடு என்றும் என்வரை நீரும்
சிந்தும் என் கண்ணீரும் யாழ் மண்ணின் வீரத்தின்
மீது தலை நிமிர்ந்து நிற்கச்செய்யும் அதை
வையகத்துக்கு உணர்த்திடும் எம் யாழ் மண்.

**வீ.பிரதீஷா**
விஞ்ஞானத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் முந்திய யாழ்ப்பாண இராச்சியம்

பொன்முடி சிரமேந்தச் சிம்மாசனம் அமர்ந்து செங்கோல் கரமேந்தி சிங்காரத் தமிழ் கமழ யாழ்ப்பாண இராச்சியத்தில் அரசியற்றிய மன்னர்கள் பலர்!

இங்கிலாந்தில் ரியூடர் வம்சத்தினர் ஓர் நிலையான அரசை நிறுவுவதற்கு முன்னர் அமெரிக்காவில் ஐரோப்பியர் குடியேற்றி அங்கு தமது ஆட்சி அதிகாரத்தை தோற்றுவிக்க முன்னர் - ஏன் கொலம்பஸ் என்பவன் அமெரிக்காவை கண்டுபிடிக்கமுன்னரேயே இலங்கையில் யாழ்ப்பாண இராச்சியம் இருந்து வந்துள்ளது.

அது மட்டுமன்றி கோட்டை இராட்சியத்திற்கும் கண்டி இராட்சியத்திற்கும் காலத்தால் முந்திய இராச்சியம் யாழ்ப்பாண இராச்சியமாகும்.

**யாழ்ப்பாண இராச்சியம்**

யாழ்ப்பாண இராச்சியம் கொடியும் முடியும் செங்கோலும் கொண்டு திகழ்ந்த ஓர் சுயமான இராச்சியம். மிதுன யாழ் கொடியும் பின்னர் நந்திக்கொடியும் அதன் கொடிகளாக விளங்கின. விடையும்பிறையும் பொறித் தகாசுகள் யாழ்ப்பாண இராச்சியத்தின் நாணயங்களாகும். (விடை=எருது)

சேது எனும் சொல் பொறித்த அக்காசுகள் யாழ்ப்பாண அரசர்களின் நாணயங் களென்பதை வண. சா. ஞானப்பிரகாசர் O.M.I சுட்டிக்காடுகின்றார். (CEYLONANTI-QUARY, VOL.V), 'சேது' என்பது யாழ்ப்பாண அரசர்களின் ஆணைப்பெயர்.

யாழ்ப்பாண அரசர்களின் காலத்தில் தேச வழைமை நடைமுறையில் இருந்தது. பின்னர் வெள்ளை ஆட்சியாளர்களும் அதனையே சட்டமாக்கிக்கொண்டனர். அதாவது உரோமன் - டச் சட்டத்துடன் தேச வழைமை சட்டமும் அனுசரித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

எனவே கொடி, முடி, செங்கோல், இலச்சினை, சட்டம், நாணயம் அத்தனையும் அமையப்பெற்றிருந்த பூரணத்துவம் வாய்ந்த இராச்சியம் தான் யாழ்ப்பாண இராச்சியம். அது வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிளைப்பள்ளி எனும் நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது. அத்துடன் தீவுப்பற்றும் ஒன்று. தீவுப்பற்றில் காரைத்தீவு, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, பசுத்தீவு (நெடுந்தீவு), நயினாதீவு, அனலைதீவு, இரணைதீவு, எழுவைதீவு, காட்டுத்தீவு (பறவைதீவு), பாலைதீவு, காக்கைதீவு ஆகியன அடங்கும்.

யாழ்ப்பாண இராச்சியத்தில் மன்னார், ஊர்காவற்றுறை போன்ற சிற்றரசு பிராந்தியங்களும் இருந்தன. முத்துக்குளித்தல் யாழ்ப்பாண அரசர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. சில சிங்கள அரசர்கள் மன்னார் கடலில் முத்துக்குளிக்க எத்தனித்ததால் போர்கள் மூண்டிருக்கின்றன. போர்களின் பின்னனி முத்துக்குளித்தல் தொடர்பானது. ஆனால் சிங்கள சரித்திராசிரியர்கள் அப்போர்களுக்கு இனச்சாயம் பூசிக் காண்பித்திருப்பது உண்மையைத் திரையிட்டு மறைக்கும் கைங்கரியம் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இராச்சியத்தின் இராசதானி சிங்கைநகர் என்றும் அது வல்லிப்புரத்திற்கு அண்மையாக அமைந்திருந்ததென்றும், கடலரிப்புக் காரணமாக பின்னர் நல்லூருக்கு இராசதானி மாற்றப்பட்டதெனவும் சொல்லப்படுகிறது.

யாழ்ப்பாண சரித்திர நூல்களில் சொல்லப்பட்டுள்ள யாழ்ப்பாண இராச்சிய அரசர்களின் பெயர்கள் வருமாறு.

* சிங்கை ஆரியன்
* குலசேக சிங்கை ஆரியன்
* குலோர்த்துங்க சிங்கை மன்னன்
* விக்கிரம சிங்கை ஆரியன்
* வரோதய சிங்கை ஆரியன்
* மார்த்தாண்ட சிங்கை ஆரியன்
* குணபூஷண சிங்கை ஆரியன்
* வீரோதய சிங்கை ஆரியன்
* கனகசூரிய சிங்கை ஆரியன்
* சிங்க பரராச சேகரன்
* பண்டாரம்
* சங்கிலி
* பெரியபிள்ளை
* ராசராசதேசமகாராச சேகரம் (புவிராச பண்டாரம்)
* எதிர் மன்னசிங்க குமாரன்
* சங்கிலிகுமாரன்

சிங்க பரராசசேகரனின் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 1478 - 1519) யாழ்ப்பாண இராச்சியம் 32 பஞ்சாயத்துக்களாக வகுக்கப்பட்டிருந்தது. மதாக்கர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். (பின்னர் வந்த போர்த்துக்கீசர் சங்கிலியின் ஆட்சிக்குப் பின்னர் 32 பங்சாயத்துக்களையும் 32 கோவில் பற்றுக்களாக மாற்றினர். 32 பஞ்சாயத்து பிரதேசங்களில் 32 கத்தோலிக்க கோவில்களை அவர்கள் நிர்மாணித்திருந்ததால் கோவில் பற்று என்ற பெயர் உருவாயிற்று.) (1932 இல் ரெவ. எஸ். ஜி. பெரேரா எழுதிய நூலில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தில் அரசியற்றிய பரராச சேகரன், செகராசசேகரன் ( சங்கிலி) போன்ற அரசர்களின் பெயர்கள் இடம்பெற்றிருப்பதைச் கீழே காண்க.

**போர்த்துக்கேயர் காலம் 1505 - 1658**

1) கோட்டை அரசர்கள்
வீரபராக்கிரமபாகு 1484 - 1509
தர்மபராக்கிரமபாகு 1505 - 1509
விஜயபாகு 1509 - 1521

**2) யாழ்ப்பாண அரசர்கள்**
பரராச சேகரன் 1478 - 1519
செகராசசேகரன் 1519 - 1561
(சங்கிலி)

**3) கண்டி அரசன்**
விக்கிரமபாகு (ஜெயவீர பண்டார)

யாழ்ப்பாண இராச்சியத்தில் நீதித்தீர்ப்பு பெரும்பாலும் அரசர்களாலேயே வழங்கப்பட்டது. பிரபுக்களுக்கு ராயன் அதிராயன் போன்ற பட்டங்களை அரசர்கள் வழங்கினர். அக்காலத்தில் மிகவும் கௌரவிக்கப்பட்டவர்கள் புலவர்கள் தான். நாயன்மார்கட்டில் தமிழ் ஆராய்வதற்று 'சரஸ்வதி மகால்' கட்டப்பட்டிருந்தது. காளிதாசன் வடமொழியில் இயற்றிய இரகுவம்சம் யாழ்ப்பாண இளவரசனான அரசகேசரியால் தேன்தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. இசையிலும், கூத்திலும், கல்விகேள்விகளிலும் சிறந்து விளங்கிய யாழ்ப்பாண இராச்சியத்தில் நல்லூரில் அரண்மனையும் கோட்டையும் அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நல்லூரின் தெற்கேயுள்ள பல வளவுகளின் தான் உறுதிகளில் 'புறக்கோட்டை வளவு' என்று குறிப்பிடப் பட்டிருப்பதனைக் காணலாம்.

நல்லூர் கோட்டையில் நானாவித சேனைகள் இருந்தன. களிறுகளும் புரவிகளும் நடமாடின. கோப்பாயிலும் பாசறை இருந்தது. உயரமான பந்திகள் எழுப்பப்பெற்று யானைகள் கட்டப்பட்ட இடமே இன்றும் 'ஆனைப்பந்தி' என அழைக்கப்பட்டு வருகிறது. நாவாய்துறையில் (நாவாந்துறை) யாழ்ப்பாண இராச்சியத்தில் கடற்படையைச்சேர்ந்த நாவாய்கள் நங்கூரம் பாய்ச்சி நின்றன. நல்லூர் அரண்மனையில் இருந்து நாவாய் துறைக்கு செல்வதற்கு நேரான பாதையொன்றும் இருந்தது. யாழ்ப்பாண அரசர்கள் தமை ஆரியச்சக்கரவர்த்திகள் எனும் சிறப்புப்பெயரால் அழைத்துக் கொண்டனர்.

போர்த்துக்கீசர் முதன் முதல் இலங்கைத்தீவுக்கு கி.பி 1505 இல் வந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது. அது தவறு. அவர்கள் கி.பி 1506 இல் வந்தனர். அவர்கள் முதலில் தரையிறங்கிய இடம் காலி என்றும பின்னர் கொழும்புத்துறைமுகம் வந்து சேர்ந்ததாகவும் ஒரு 'கதை' உண்டு. அக்காலத்தில் கொழும்புத் துறைமுகத்தின் பெயர் கொல்லபுரம் என்பதாகும். இப்பெயரே போர்த்துக்கேயரால் கொல்லம்பு என பிழையாக உச்சரிக்கப்பட்டு பின்னர் கொலம்ப கொழும்பு என்று பெயர் மாறியது. போர்த்துக்கேயர் கொல்லம்புரம் வந்து சேர்ந்த காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தில் அரசியற்றியவன் (சங்க) பரராச சேகரன் எனும் அரசனாவான். அவனது ஆட்சி பலவாறாக புகழ் பெற்றதாகும். பரராச சேகரன் என்னும் பெயரால் எழுந்த மருத்துவ நூலின் செய்யுள் ஒன்று செப்புவதென்ன?

'பரராசசேகரன் பணித்த செங்கோல்
காத்த புவியோர்களிருள் நீங்குமாற்போல்
- கண்ணின்

'இருள் நீங்குமிது திண்ணந்தானே'
மேற்படி பரராசசேகரம் என்ற மருத்துவ நூலில் சொல்லப்பட்டுள்ள செய்யுள் திரிபலைக்குழம்பு எனும் கண்மருந்ததின் சிறப்பினைக் கூறுவதாக அமைந்ததுள்ளது. அதில் பரராசசேகரனது செங்கோலின் மகிமை கண்மருந்தின் சிறப்பிற்கு உவமானமாகச்சொல்லப்பட்டிருப்பதனை அறிய முடிகிறதல்லவா?

பரராசசேகரன், செகராசசேகரன் போன்ற பெயர்கள் யாழ்ப்பாண இராச்சிய அரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகளின் சிம்மாசன பெயர்களாகும். முதவ்லாம் பரராசசேகரன், இரண்டாம் பரராச சேகரன், முதலாம் செகராசசேகரன், இரண்டாம் செகராசசேகரன் என்றவாறாக தவிரவும் பரராசசேகரம் செகராசசேகரம் என்ற பெயர்களில் மருத்துவ, சோதிட நூல்களும் எழுதப்பெற்றிருந்தன. கணக்கதிகாரம் எனும் கணித நூலும் இயற்றப்பெற்றிருந்தது.

அவ்வாறு அக்காலத்தில் எல்லா வகையிலும் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய யாழ்ப்பாண இராச்சியத்தினை - அடிப்படையான தமிழ் இராச்சியம் இலங்கையில் எக்காலத்திலும் இருந்ததில்லையென இக்காலத்தில் சிலர் கூறப்பட்டிருப்பது தமிழரின் முன்னைய வரலாற்றுக்கு கருந்திரை விரிக்க முனையும் கபடத்தனமான செயல்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆதாராடம்**

ஒரு பொய்மை மீண்டுட் மீண்டும் சொன்னால் அது உண்மையாகி விடுமென்பது உலகில் மூண்டு போன இரண்டாம் மகாயுத்தத்தில் மாண்டுபோன ஹிட்லரின் பிரசார மந்திரியான கோயபெல்ஸ் என்பவனின் வரண்டுபோன தத்துவம்!

அவ்வரண்ட தத்துவத்தையே இங்கு சிலர் மறந்துபோகாமல் 'தத்து' எடுத்த தமிழரின்வரலாற்றைசித்துவிளையாட்டாக காண்பிக்கும் கட்டுரைகளையும் நூல்களையும் அவ்வப்போது வெளியிட்டு வருவது கண்கூடு.

இலங்கையின் ஆதி திராவிடரான நாகர், இயக்கரை மனிதரல்லாத மாயப்பிறவிகளாகச் சித்தரிப்பதும், அதன்பின் இலங்கையின் வடதிசையில் உருவான தமிழ் இராச்சியத்தை ஒரு மாயப்பொருளாகக் கயிறுதிரிப்பதும் சித்துவிளையாட்டுத்தான்! ஆனால் இத்துடன் வரலாற ஒத்துப்போகமுடியாது.

நாகவேந்தர்கள் வடபகுதியில் கந்தரோடையிலும், மாந்தையிலும், குதிரைமலையிலும் அரசியற்றிய பின்னர் கி.பி 10ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசு தோன்றியதாக வண.சா. ஞானப்பிரகாசர் O.M.I அவர்களை தலைமைஆசிரியராகக்கொண்ட 'யாழ்ப்பாண வைபவகௌமுதி' (1918) கூறுகிறது.

ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி கி.பி 8ஆம் நூற்றாண்டிலே தோன்றியதாக முதலியார் செ. இராசநாயகம் எழுதிய ANCIENT JAFFNA ( 1926) யாழ்ப்பாணச் சரித்திரம் (1933) ஆகிய நூல்கள் கூறுகின்றன.

அதற்குமுன் கி.பி 18ஆம் நூற்றாண்டில் (கி.பி 1933) மாதகலைச் சேர்ந்த சு. மயில்வாகனப் புலவர் என்பவர் முன்னைய நூல்களாக இராசமுறை, கைலாயபுராணம், பரராசசேகரன் உலா, வையா பாடல் போன்ற நான்கு நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றினைச் சித்தரிக்கும் 'யாழ்ப்பாண வைபவமாலை' எனும் நூலினை எழுதியிருந்தார். டச்சுக்காரருக்குப் பின் வந்த ஆங்கிலேய ஆட்சியினர் அந்நூலை இலண்டனுக்கு அனுப்பி வைத்தனர். ( இன்று அந்நூல் இலண்டன் மாநகர இரும் பொருட்காட்சிச்சாலையில் கிழைத்தேசநூல் நிலையப்பகுதியில் உள்ளது)

மயில்வாகனப்புலவர் எழுதிய 'யாழ்ப்பாண வைபவமாலை' இலண்டன் மாநகரில் உறக்கம் கொண்டால் அதனைத் தமிழ்மக்கள் அறிவதெப்படி? அதன் கண் 19ஆம் நூற்றாண்டில் இலங்கைச் சரித்திர சுவடிப் பாதுகாப்பு சபையில்) HISTORICAL MANUSCRIPTS COMMISSION)

உறுப்பினராகவிருந்த முதலியார் செ. இராசநாயகம் அச்சபையின் ஊடாக இலண்டனிலிருந்த'யாழ்ப்பாண வைபவமாலையின் கையெழுத் துப்பிரதியின் புகைப்படப் பிரதிகளை வரவழைத்து இலங்கையின் முதல் தமிழ்பத்திரிகையான'உதயதாரகை'ஏட்டில் பகுதி பகுதியாக வெளிவரச் செய்தார். ( உதயதாரகையின் முதற்பிரதி 1841 இல் வெளிவந்ததென்பது குறிப்பிடத்தக்கது. ) பின்னர் பிறிட்டோ (BRITTO) என்பவரால் 'யாழ்ப்பாணவைபவமாலை' ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

யாழ்ப்பாண வைபவமாலையை ஆராய்ந்த முதலியார் குல. சபாநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் 1949 இல் 'யாழ்ப்பாண வைபவமாலை' யை வெளியிட்டார்.

வண. சா. ஞானப்பிரகாசர் O.M.I., முதலியார் செ. இராசநாயகம் ஆகியோரின் நூல்களிலிருந்து யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றக்காலம் கி.பி. எட்டாம் அல்லது பத்தாம் நூற்றாண்டென்பதை நாம் அறியமுடியும். அக்காலத்தில் இங்கிலாந்தில் ஓர் நிலையான அரசு இருக்கவில்லை. அமெரிக்காவும் கண்டுபிடிக்கவில்லை!

கோட்டை இராச்சியம் கி.பி.15 ஆம் நூற்றாண்டில் உருவாகியிருப்பதை சூழ வம்சத்திலிருந்து அறிய முடிகிறது. அக்காலத்தையொட்டியே கண்டி இராச்சியமும் உருவானது. அதற்கு முன் சிங்கள அரசரின் இராசதானியாக கம்பளை விளங்கியது. ஆதலின் கோட்டை, கண்டி இராச்சியங்களுக்கு முன் யாழ்ப்பாண இராச்சியம் உருவாகியிருந்தமை பெரும் வரலாற்றுண்மையாகும். அதனாற் போலும் சிலர் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றை மறைப்பதில் முனைப்பாகவுள்ளனர்.

அதற்கமையவே இலங்கைத் தீவில் எக்காலத்திலும் வடக்கிலோ கிழக்கிலோ ஒரு சுதந்திரமான தமிழ் இராச்சியம் (TAMIL KINGDOM) இருந்ததில்லை என்று யாழ்ப்பாணமும் சிங்கள பாரம்பரியமும். எனும் தனது நூலில் ஈ.ரி . கன்னங்கரா அடித்துக்கூறியுள்ளார்.

யாழ்ப்பாண இராச்சியத்தை மறைப்பதற்காவே அவர் அப்படிக் கூறியுள்ளார். இதற்கு எவ்வாறு பதில் சொல்வது? வெறுமனே யாழ்ப்பாண இராச்சியம் இருந்தது. என்று சொன்னால் அவர் புரிந்து கொள்வாரா? அதலின் அவரைப் போலன்றி சில வரலாற்றுச் செய்திகளை இங்கு ஆதாரங்களுடன் முன் வைப்பது மிக்க அவசியமாகிறது.

யாழ்ப்பாண இராச்சிய அரசனான ஆரியச்சக்கரவர்த்தியிடம் சிங்கள அரசன் தோல்வியுற்றதைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்றினை இங்கு சான்றாக முன்வைப்பது பொருந்தும்.

கேகாலை மாவட்டத்தில் றம்புக் கணைக்கு அண்மையாகவுள்ள கோட்டகம என்னும் ஊரில் கிடைக்கப் பெற்ற அக்கல்வெட்டு கொழும்பு அரும் பொருட் காட்சிச்சாலையில் பேணப்பட்டுள்ளது. பழந்தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள அக்கல்வெட்டின் வாசகம் வருமாறு:-

**சேது**

கங்கணம்வேற் கண்ணிணையாற் காட்டினார் காமர்வளைப்

பயங்கயக்கை மேற்றிலதம் பாரித்தார் பொங்கொலி நீர்ச்

சிங்கை நகர் ராரியனைச் சேரா வனு ரேசர் தங்கள் மடமாதர் தாம்.

இக்கல்வெட்டினை முதன் முதல் வாசிப்புச் செய்த இலங்கையின் முன்னாள் ஆங்கிலேயேதொல்லியல்ஆணையாளரான எச்.சி.பி.பெல், இக்கல்வெட்டு 15 ஆம் நூற்றாண்டுக்குரியதெனக்கூறுகின்றார். (H.C.ELL., ARCHAEOLOGICAL REORT OF THE KEGALLE DIS TRICT, (1892) P.85) இக்கல்வெட்டு தென்னிந்திய சாசனத்தொகுதியிலும் பதியப்பெற்றுள்ளது. (NO.1413, SOUTH INDIAN INSCRI TIONS, VOL.IV)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்வெட்டு 15 ஆம் நூற்றாண்டின் எந்தக் காலப்பகுதியைச் சேர்ந்தது என்பதை ஆராய்ந்த பிரபல வரலாற்றாய்வாளரான கொட்றிங்டன் கல்வெட்டின் வாசகம் தொடர்பாக கூறியிருப்பதாவது:-

THERE CAN BE NO DOUBT THAT THIS REFERS TO THE CONQUEST OF A SINHALEASE KING BY THE ARYA CHAK RAVARTHI OF JAFFNA.

சிங்கள அரசனொருவன் யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தியால் வெற்றி கொள்ளப்பட்டதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறதென்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. (E.H.W. CODRINGTION, THE ROBLEM OF THE KOTAGAMA INSCRIOTI ON , JRAS CEYLON) VOL.XXXII NO.85, 1932 P.2214)

யாழ்ப்பாண அரசர் காலத்தில் உலோகத்தாலான நாணயங்கள் இருந்தமை ஏலவே சொல்லப்பட்டதே. அவற்றினை வண. எஸ் .ஞானப்பிரகாசர் ஆராய்ந்து வெளியிட்டிருந்தார். (REV.S.GNANAPRAGASAR, THE FORGOTTEN COINAGE OF THE JAFFNA KINGS, ANTIQUARY,VOL.V)

மேற் சொன்ன நாணயங்களின் பின்புறத்தில் விடையும் பிறையும் 'சேது' என்ற பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது. (விடை= எருது) சேது என்பது ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆணைப்பெயர். இந்த நாணயங்களின் படங்களை ANCIENT JAFFNA நூலில் காணமுடியும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சுதந்திரமான தமிழ் இராச்சியம் இயங்கி, வந்தமை கன்னங்கரா தனது நூலில் முற்றாக மறைக்க முயல்கிறார். ஆனால் சுதந்திரமான என்ற சொல் அவர் வைத்துள்ள பொடி! யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுதந்திரமான தமிழ் இராச்சியமாக விளங்கியதனாலேயே அங்கு தனியான நாணயங்கள் பழக்கத்திலிருந்தன. யாழ்ப்பாண அரசனான ஆரியச்சக்கரவர்த்தியிடம் அநுராத புரி அரசன் தோற்றுப்போன விடயத்தையும் அவர் தம் நூலில் மறைத்துள்ளார்.

விரும்பியோ விரும்பாமலோ யாழ்ப்பாண இராச்சியம் இயங்கி வந்திருப்பது ரெவ. எஸ் .ஜி .பெரேரா எழுதிய AHISTORY OF CEYLON FOR SCHOOLS எனும் நூலில் சொல்லப்பட்டுள்ளது. அதன் பகுதியை இக்கட்டுரையுடன் காணலாம்.

இந்நூல் கி.பி 1505 முதல் கி.பி.1796 வரையிலான இலங்கைச்சரித்திரத்தைச் சொல்லும் நூலாகும். இரு பாகங்களாக மொத்தம் 568 பக்கங்களைக் கொண்ட இந் நூலின் 10 ஆம் பக்கத்தில் பரராஜசேகரன் 1478-1591, செகராஜசேகரன் (சங்கிலி) 1519-1561 என்றவாறு யாழ்ப்பாண அரசர்களின் பெயர்களும் அட்சிக் காலமும் சொல்லப்பட்டுள்ளதை எவ்வித ஐயத்திற்கிடமின்றி அறியமுடிகின்றதல்லவா? இந்நூலில் சிங்கள அரசர் யாழ்ப்பாண அரசருக்கு திறை (கப்பம்) செலுத்தி வந்திருப்பதையும் காண முடியும்.

"....IT GREW TO BE A DISTINCT TAMIL KINGDOM WHICH SOON BECOME SO POWERFUL AS TO DEMAND TRIBUTE FROM THE OTHER KINGS" (P.2)

"......ஒரு தனியான தமிழ் இராச்சியமாக வளர்ச்சியுற்ற யாழ்ப்பாண இராச்சியம் விரைந்து பிற (சிங்கள) அரசர்களிடம் திறை கோருமளவிற்கு பெரும் பலம் கொண்டு திகழ்ந்தது."

இவ்வாறு யாழ்ப்பாண இராச்சிய அரசர்களுக்கு சிங்கள அரசர் சிலர் திறை செலுத்தி வந்தமை செகராசசேகரன் எனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய நூலிலும் சொல்லப்பட்டுள்ளது. அச்செயுள் வருமாறு:

"பாரிலுள்ள சூத்திரனாம் பாம்பு புற்றிற்
பார்த்திருக்கு மிரையெடுக்கிற் பலவுந் தின்னு
மேருடனே தானாடிற் பத்மராக
மிலங்குமணி முடினவையு மிலங்கை வேந்தர்
சீரிய பொன் றிறையளக்கச் செங்கோ லோச்சுஞ்
செகராச சேகரமன் சிங்கை மேவு
மாரியர் கோன் வெண்குடையினிழலே செய்யு
மவனிதனைப் பார்த்து நின்றே யமர்ந்தாடுமே

மேற் சொன்ன நூற்பாவில் திறை பெற்று அரசோச்சிய செகராஜசேகரன் எனும் அரசன் எவ்வாறு புகழப்பெற்றிருக்கிறான். என்பதை அறியமுடிகின்றதெல்லவா?

இலங்கையின் எப்பாகத்திலும் எக்காலத்திலும் ஒரு சுதந்திர தமிழ் இராச்சியம் இருந்ததில்லை என்று ஈ.ரி. கன்னங்கரா தனது யாழ்ப்பாணமும் சிங்கள பாரம்பரியமும் எனும் ஆங்கில நூலில் அழுத்திக்கூறியிருப்பதனாலேயே இச்சான்றுகளை நாம் முன்வைக்க வேண்டியது அவசியமாயிற்று.

கோட்டை இராச்சிய அரசன் ஏழாம் புவனேக பாகுவின் மருமகனான விதிய பண்டார, யாழ்ப்பாண இராச்சிய அரசன் சங்கிலியிடம் படையுதவி கோரி தனது பரிவாரங்களுடன் யாழ்ப்பாணம் சென்றதையும் இங்கு குறிப்பிடுதல் பொருந்தும்.

போர்த்துக்கேயர் முதன் முதல் கொல்லம்புரத்திற்கு (கொழும்பு) கி.பி.1506 இல் வந்தனர். அவர்கள் வந்த ஆரம்பத்திலேயே கோட்டை இராச்சிய அரசர்கள் அவர்களுக்கு திறை (கப்பல்) செலுத்தத் தொடங்கினர். அக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தை பரராஜசேகரன் (1478-1519) எனும் அரசனும் அவனுக்குப் பின் அவனின் மகனான சங்கிலியும் (1519-1561) அரசியற்றி வந்தனர். போர்த்துக்கேயருக்கு சங்கிலி அரசன் சிம்ம சொப்பனமாக விளங்கினான்.

அந்நியரான போர்த்துக்கேயர் அக்கரையில் கொச்சியிலும், கண்ணனூரிலும், கோவாவிலும் இக்கரையில் கோட்டை இராச்சியத்திலும் இடங்கோலியிருந்ததை அறிந்திருந்த சங்கிலி அவர்களை மூர்க்கமாக எதிர்த்து வந்தான்.

யாழ்ப்பாணம் பண்ணைக்கடலில் பாய் விரித்தோடிய போர்த்துக்கேயரின் கப்பல்களை அவன் துரத்தியடித்து வந்தான்.

கோட்டை இராச்சியத்தில் முதலில் போர்த்துக்கேயரை எதிர்த்து வந்த மாயா துன்னை கோட்டை இராட்சிய அரசன் ஏழாம் புவனேகபாகுவின் தம்பியாவான்.

சங்கிலி அரசனுக்கு அந்நியரான போர்த்துக்கேயர் மீது கடும் கோபம் இருந்தது. ஒரு சமயம் பண்ணைக் கடலில் பெருந்திரவியங்களுடன் வந்த போர்த்துக்கேயரின் கப்பலை வழிமறித்து அதிலிருந்த திரவியங்கள்,துப்பாக்கிகள், வெடிமருந்து யாவற்றையும் சங்கிலி அரசன் அபகரித்தான்.

தமது பெறுமதிமிக்க திரவியங்கள் பறி போன நிலையிலும் போர்த்துக்கேயர் உடனடியாக அவனுடன் போருக்குச் செல்லவில்லை! அதற்கான காரணம் என்ன?

சங்கிலியுடன் போர்புரிய போர்த்துக் கேயர் வலுவின்றி இருந்து விட்டனர். என்று புனித பிரான்ஸிஸ் சவேரியார் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலி அரசன் போர்த்துக்கேயருடன் கொண்டிருந்த பகைமை தென்னிலங்கை வரை அறியப்பட்டிருந்தது. எவ்வாறேனும் அந்நியரான போர்த்துக்கேயரை இத்தீவிலிருந்து துரத்திவிட வேண்டுமென்பதில் அவன் பிடிவாதமாக இருந்தான்.

பின்னர் சில ஆண்டுகள் கழிந்த போர்த்துக்கேயர் சங்கிலியுடன் நடத்திய முதற் போரில் அவர்களை வன்னிக்காடுவரை துரத்தியடித்தான் சங்கிலி! அத்தகைய அஞ்சா நெஞ்சம் கொண்ட பெரும் வீரராகத் திகழ்ந்தான் அவன்.

(போர்த்துக்கேயர் வந்தது முதல் அவர்களைப் பற்றியும், சிங்கள அரசர்கள் பற்றியும் ,பிற அந்நியர் பற்றியும் தகவல்களைத் தரும் சமூகக்கல்வி, சமாஜ அத்தியாபன ஆதியாம் நுல்கள் யாழ்ப்பாண ராச்சிய அரசர்களைப்பற்றி சரியான வரலாற்றுச் செய்திகளை இருட்டடிப்புச்செய்திருப்பதை நாம் அறிய முடியும்)

சங்கிலி அரசனைப்போல் விதிய பண்டாரவும் போர்த்துக்கேயரை வெறுக்கவே செய்தான். ஆனால் போர்த்துக்கேயரை எதிர்த்துப் போரிடுவதற்கு விதிய பண்டாரவிற்குப் படையுதவி தேவையாகவிருந்தது. சிங்கள அரசர்கள் போர்த்துக்கேயரை ஆதரித்து நிற்கும் போது விதி பண்டாவிற்கு இவ்வுதவியைச் செய்வது யார்? போர்த்துக்கேயரை எதிர்ப்பதில் சங்கிலி அரசின் வீரபிரதாபங்களை அறிந்திருந்த விதிய பண்டார யாழ்ப்பாண இராச்சியம் செல்லத்தீர்மானித்தான். அங்கு சென்றால் சங்கிலி அரசன் தனக்கு படையுதவி செய்வான் என்ற திடமான நம்பிவக்கையும் அவனுக்கிருந்தது.

அவர்களை சங்கிலி அரசன் சிறப்பாக வரவேற்று விதியபண்டாரவின் கோரிக்கையை அனுதாபத்தோடு செவிமடுத்து அக்கோரிக்கையை மகிழ்ச்சியுடன் ஏற்று வெறுக்கத்தக்க ஆக்கிரமிப்பாளர்களான போர்த்துக் கேயரைத் தண்டிக்கவும், நாட்டை விட்டுத்துரத்தவும் யாழ்ப்பாண சேனையோன்றினை விதியப் பண்டாராவுக்குக் கொடுத்துதவுதற்குச் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தான்......

UPON ARRIVAL IN JAFFNA , VIDYYA BANDARA AND HIS COMPANIONS WERE CORDIALLY RECEIVED BY THE TAMIL RULER (SANKILY) OF THE KINGDOM MORE THAN THAT, HE LIST ENED SYM PATHETICALLY TO VIDIYA S APPEAL FOR ASSISTANCE AND GLADLY UNDERTOOK WITH ALL POSSIBLE HAST TO FURNISH HIM WITH A JAFFNESE ARMYWHERE WITH TO PUNISH AND EXPEL THE HATED POR TUGUESE INVADER.... (GREAT SINHA LESE MEN OF HIS TORY JOHN.M.SENEVI RATNE, PUBLISHEDLTD BY THE ASSOCIATED NEWSPAPERS OF CEYLON LTD,180, FLEET ST., LONDON, E.C.I.1931 P.96)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சிகள்

இன்னிய வரவேற்பு :- நெறியாள்கை: திரு க.இ. கமலநாதன்
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)

மங்கலவிளக்கேற்றல் :- பி.ப 1.00 மணி

இறைவணக்கம் :- கல்லூரி ஆசிரிய மாணவர் - பி.ப 1.05 மணி

வரவேற்புரை :- செல்வி பாத்திதா ஜெயநாமமோகன் - பி.ப 2.00 மணி
(பொருளாளர், தமிழ்மன்றம் யாழ்.தே.க.க)

மன்றத்தலைவர் உரை :- செல்வன் பாலேந்திரன் துவாரகன் - பி.ப 2.05 மணி
(தலைவர், தமிழ்மன்றம், யாழ்.தே.க.க)

தலைமையுரை :- கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் - பி.ப 2.10 மணி
(பீடாதிபதி: யாழ்ப்பாணம் தேசியகல்வியியற்கல்லூரி)

மன்றக்காப்பளர் உரை :- திரு. பாலசிங்கம் பாலகணேசன் (காப்பாளர், தமிழ்மன்றம்)- பி.ப 2.20 மணி
(இணைப்பாளர், நிதிநிர்வாகம், யாழ். தே.க.க)

வாழ்த்துரை :- திருமதி செல்வமலர் சிவபாதம்
(உப பீடாதிபதி தொடருறு கல்வி, யாழ் தே.க.க.) - பி.ப 2.30 மணி

வீரசங்கிலி மலர் வெளியீடு :- நெறியாள்கை செல்வன் செல்வானந்தன் ராஜானந்தன்
(தலைவர், மலர்க்குழு, 2018, யாழ் தே.க.க)

வெளியீட்டு உரை :- கலாநிதி பாலசுப்பிரமணியம் தனபாலன் - பி.ப 2.40 மணி
(உபபீடாதிபதி, நிதியும் நிர்வாகமும், யாழ் தே.க.க)

முதற் பிரதி வழங்கல் :- கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் பீடாதிபதி, யாழ்.தே.க.க - பி.ப 2.50 மணி

முதற் பிரதி பெறுபவர் :- திரு. தர்மலிங்கம் சித்தார்த்தன் (பாராளுமன்ற உறுப்பினர், யாழ்மாவட்டம்)
திருமதி மீனா சித்தார்த்தன்

சிறப்பு பிரதி வழங்கல் :- கலாநிதி மைதிலி விசாகரூபன் (சிரேஷ்ட உதவிநூலகர், யாழ்ப்பாணம்)

நூல் நயப்புரை :- திரு. குமரேசன் பாலஷண்முகன் - பி.ப 3.00 மணி
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

ஏற்புரை :- செல்வி பியுலா அன்ரன் ரமேஷ் - பி.ப 3.10 மணி
(பத்திராதிபர், தமிழ் மன்றம், யாழ்.தே.க.க)

வாத்திய பிருந்தா :- இரண்டாம் வருட இசைத்துறை முகிழ்நிலை ஆசிரியர்கள் - பி.ப 3.20 மணி
நெறியாள்கை: திருமதி சிவை குகனேசன் (விரிவுரையாளர், யாழ் தே.க.க)

"வேழம் படுத்த வீராங்கனை" :- நெறியாள்கை: திரு க. திலகநாதன் - பி.ப 3.55 மணி
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)

பிரதமவிருந்தினர் உரை :- பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்
(தமிழ்த்துறை, யாழ் பல்கலைக்கழகம்) - பி.ப 4.05 மணி

நன்றியுரை :- செல்வி. ச. அபிராமி - பி.ப 4.15 மணி
(செயலாளர், தமிழ்மன்றம், யாழ் தே.க.க)

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

Harikanan, Jaffna



# முத்தமிழ் விழா 2018

"மரபு பேணுவோம்"

தலைவர் : கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம்
(பீடாதிபதி - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

இடம் : கல்லூரி பிரதான கலையரங்கு

காலம் : 16.11.2018 வெள்ளிக்கிழமை

நேரம் : காலை 8.30 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலை அமர்வு

## தமிழ் அறிஞர் கா.பொ.இரத்தினம் அரங்கு



பிரதமவிருந்தினர் :- கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்
( தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம் )

சிறப்பு விருந்தினர்கள்
* திரு. வே. ஞானசம்பந்தன்
( அதிபர், யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி)
* திரு.குலசேகரம்பிள்ளை சிவஞானசுந்தரம்
(முகாமையாளர், இலங்கைவங்கி, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்)
* திரு.த.கணேசமூர்த்தி
(ஓய்வு பெற்ற நிறைவேற்று அதிகாரி, இலங்கைவங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)

கௌரவ விருந்தினர் :- திரு. பாலசிங்கம் சிவசுப்பிரமணியம்
(உரிமையாளர், சிவாபிறதேர்ஸ், யாழ்ப்பாணம்)

*"நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்"*

## நிகழ்ச்சிகள்

இனிய வரவேற்பு :- நெறியாள்கை: திரு. கைலைநாதன் திலகநாதன்
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)

மங்கலவிளக்கேற்றல் :- இ.ப .08.30 மணி

இறைவணக்கம் :- கல்லூரி ஆசிரிய மாணவர்கள் - இ.ப .08.40 மணி

மேடை நிகழ்ச்சிகள் :- வரவேற்பு நடனம் - இ.ப .08.50 மணி
(நெறியாள்கை திருமதி புவனேஸ்வரி வேலநிதி )
பாட்டு: சிவை. குகனேசன்
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)

வரவேற்புரை :- செல்வி. ஜெ. பாத்திநா - இ.ப .9.00மணி
(பொருளாளர் தமிழ்மன்றம், யாழ்.தே.க.க )

மன்றத்தலைவர் உரை :- செல்வன். க. டினேசன் - இ.ப 09.05மணி
(தலைவர், தமிழ்மன்றம், யாழ்.தே.க.க )

தலைமையுரை :- கலாநிதி சதாசிவம் அமிர்தலிங்கம் - இ.ப .09.10மணி
(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி)

வாழ்த்துரை :- திரு இ.சந்திரயோந்திரம்பிள்ளை - இ.ப.9.20 மணி
( உபபீடாதிபதி, கல்வியும் தரமேம்பாடும் யாழ் தே.க.க.)

அறிஞர் கௌரவிப்பு :- கௌரவம் பெறுபவர்
கலாநிதி (திருமதி) ஜொமாலர் தியாகலிங்கம்
( ஓய்வு நிலை உபபீடாதிபதி, யாழ். தே.க.க.)

சான்றிதழ் வழங்கல் :- பிரதம விருந்தினர் - இ.ப. 9.40மணி

பேச்சு :- முகிழ்நிலை ஆசிரியர்கள் - இ.ப. 9.55மணி

கவிதை :- முகிழ்நிலை ஆசிரியர்கள் - இ.ப.10.10மணி

இசை விருந்து :- நெறியாள்கை: திருமதி சிவை. குகனேசன் - இ.ப.10.20 மணி
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)

கவியும் கானமும் :- நெறியாள்கை திரு. க.ரட்ணேஸ்வரன் - இ.ப. 10.30மணி
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)

இன்னிசை கானம் :- நெறியாள்கை: திருமதி. விக்கினேஸ்வரி நரேந்திரா - இ.ப.10.45 மணி
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)

நர்த்தனம் :- நெறியாள்கை: திருமதி ஞானசக்தி கணேசநாதன் - இ.ப.11.05 மணி
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)
பாட்டு விக்னேஸ்வரி நரேந்திரா
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)

பட்டிமன்றம் :- நெறியாள்கை: திருமதி. ஜெ. உதயகுமார் - இ.ப.11.20மணி
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)

"நெஞ்சில் வஞ்சம் கெட" :- எழுத்துரு நெறியாள்கை: திரு. க. இ. கமலநாதன் - இ.ப.11.55 மணி
(விரிவுரையாளர், யாழ்.தே.க.க)

பிரதமவிருந்தினர் உரை:- கலாநிதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்
(தலைவர், இந்துநாகரிகத்துறை, யாழ் பல்கலைக்கழகம்) - இ.ப 12.30மணி

நன்றியுரை :- செல்வி விதுசாளினி (தமிழ் மன்றம், யாழ்.தே.க.க)

### மதிய உணவு இடைவேளை

# மாலை அமர்வு

## பேராசிரியர் ஆ.சதாசிவம் அரங்கு



பிரதம விருந்தினர்
* பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்
( தமிழ்த் துறை, யாழ் பல்கலைக்கழகம்)
* கலாநிதி மைதிலி விசாகரூபன்
(சிரேஷ்ட உதவி நூலகர், யாழ் பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்
* திரு. தில்லையம்பலம் வரதன்
(அதிபர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை)
* திரு. யுவராஜா ஜெபியன்
(செயலாளர், வலிகிழக்கு பிரதேசசபை)

கௌரவ விருந்தினர் :- வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா
(சிரேஷ்ட ஆலோசனைச்சபை உறுப்பினர், யாழ்.தே.க.க)
:- கலாநிதி. த.கலாமணி
(சிரேஷ்ட ஆலோசனைச்சபை உறுப்பினர், யாழ்.தே.க.க)
:- கந்தையா இரவீந்திரன்
(உரிமையாளர், மாருதி, உள்நாட்டு வெளிநாட்டு நாணய மாற்று சேவை, யாழ்ப்பாணம் - கொழும்பு)
:- திரு அழகசுந்தரம் கிருபாகரன் ( உரிமையாளர், கிருபாவேணர்ஸ் ,யாழ்ப்பாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி : (விளம்பர அனுசரணைக்கானது)

# அமரர் திருமதி சற்குணராஜா செல்வமலர்

20.01.1962 - 26.01.2013



முன்னாள் ஆசிரியை

யாழ் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி : (விளம்பர அனுசரணைக்கானது)

அமரர் திரு. சந்திரதாஸ் தயாபரன் (தயா)

21.12.1973 - 08.07.2018









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் தேசிய கல்வியியற்கல்லூரி தமிழ்மன்றத்தினர்
எடுக்கும் முத்தமிழ் விழா -2018 சிறக்க எமது நல்வாழ்த்துக்கள் - அனுசரனையாளர்கள்




# மாருதி
# Money Exchange

கடந்த 15 வருட காலமாக கொழும்பு வெள்ளவத்தையில் இயங்கி வந்த நாங்கள் தற்பொழுது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி யாழ்.மண்ணில் இல: 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் எமது மாருதி Money Exchange கிளை நிறுவனத்தை ஆரம்பித்து சிறந்த சேவையினை வழங்கிக்கொண்டிருக்கின்றோம் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

1. அரச அங்கிகாரம் பெற்ற வெளிநாட்டு நாணய மாற்றுனர்.
2. சினேக பூர்வமான சிறந்த சேவை.
3. யாழ்.மண்ணில் எங்குமில்லாதவாறு வெளிநாட்டு நாணயத்திற்கு ஏற்ப நியாய விலை வழங்கப்படும்.
4. இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லும் நாணயங்களை அரச அனுமதியுடன் எமது கொழும்பு அலுவலகத்தில் பெற்றுக்கொண்டு செல்லும் வசதியுண்டு.
5. எல்லா நாட்டு நாணயங்களையும் அன்றைய பெறுமதிக்கேற்ப உடனுக்குடன் மாற்றிடும் வசதி.
6. வாடிக்கையாளர்களின் தேவையே எமது சிறந்த சேவை.




இல.388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 2844443

**Head Office:**
285, Galle Road,
Wellawatta, Colombo -06.
T.P: 011 236 2086


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்விப் பயிர் வளர்க்க காலடிதனைப் பதித்தீர்
எல்லையில் உலகில் ஏற்றமாய் வாழ்வீர்!
கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம்
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
இல:681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org